




# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www. tamilnaduepaper.com








CHENNAI | Volume- 3 | Issue:222 | 26-02-2026 | வியாழக்கிழமை | Free E- Paper | சென்னை • மதுரை • கோவை • திருச்சி


## இன்றைய பஞ்சாங்கம்

26.02.2026 மாசி 14
வியாழக்கிழமை

சூரிய உதயம் 6.29

**திதி:**
இன்று அதிகாலை 3.06 வரை நவமி பின்பு தசமி.

**நட்சத்திரம்:**
இன்று பிற்பகல் 12.38 வரை மிருகசீரிஷம் பின்பு திருவாதிரை.

**யோகம் :**
இன்று அதிகாலை 1.53 வரை விஷ்கம்பம் பின்பு இரவு 10.52 வரை ப்ரீதி பின்பு ஆயுஷ்மான்.

**கரணம் :**
இன்று அதிகாலை 3.06 வரை கௌலவம் பின்பு பிற்பகல் 2.00 வரை தைதுலம் பின்பு கரசை

**அமிர்தாதி யோகம் :**
இன்று காலை 6.38 வரை சித்த யோகம் பின்பு யோகம் சரியில்லை.

**நல்ல நேரம்**
காலை 10.30 – 11.30.
மாலை 12.30 – 1.30

**இராகு காலம்**
பிற்பகல் 1.30 – 3.00.

**எமகண்டம்**
காலை 6.00 – 7.30.

**குளிகை**
காலை 9.00 – 10.30.

இன்று நவமி நாள்.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் நல்லகண்ணு காலமானார்

**சென்னை, பிப்.26:**

முதுபெரும் கம்யூனிச தலைவர் நல்லகண்ணு காலமானார். அவருக்கு வயது 101. அவருக்கு சிகிச்சை அளித்து வந்த சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை இதனை அறிவித்துள்ளது.

வயது முதிர்வின் காரணமாக கடந்த பல நாட்களாக உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் நல்லகண்ணு, சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று மதியம் அவர் காலமானார்.

இது தொடர்பாக மருத்துவமனை தரப்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில், "நல்லக்கண்ணு அவர்கள் உடல் நலக்குறைவு காரணமாக கடந்த 01.02.2026 அன்று தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டார். கடந்த 24 தினங்களாக சிகிச்சையின் போது அவரது உடல் நிலையில் ஏற்றதாழ்வுகள் இருந்து வந்தது.

பல்துறை மருத்துவக்குழு தீவிர சிகிச்சையும், அதிதீவிர கண்காணிப்பையும் தொடந்து வந்தனர்.

நேற்று அதிகாலை முதல் மருத்துகளை ஏற்கும் தன்மை படிப்படியாக குறைந்து, அவரது உடல் நிலை மிகவும் மோசமடைந்தது.

அதிதீவிர சிகிச்சையில் இருந்தபோதும் முக்கிய உடலுறுப்புகள் அனைத்தும் செயல் இழந்ததால் நல்லக்கண்ணு அவர்கள் 25.02.2026 அன்று பிற்பகல் 1 55 மணியளவில் நம்மை விட்டு பிரிந்தார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

அவரை இழந்து வாடும் குடும்பத்தாருக்கும், உறவினர்களுக்கும் ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது.

மேலும், அவரது சிகிச்சைக்கு உறுதுணையாக இருந்த அனைத்து மருத்துவக்குழுக்களுக்கும், தமிழக அரசுக்கும் எங்களது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்'' என தெரிவிக்கப்பட்டுள்ளது.


### முழு அரசு மரியாதையுடன் செவ்வணக்கம் செலுத்தி வழியனுப்பி வைப்போம்!

தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்து எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"எனக்கு ஒரு கண்ணில் சரிவரப் பார்வை இல்லை என்றாலும், அகத்தில் மற்றொரு கண் இருக்கிறது. அதுதான் நல்லகண்ணு" என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கண்ணாகப் போற்றப்பட்ட முதுபெரும் தலைவர் - தோழர் திரு. நல்லகண்ணு அய்யா அவர்கள் மறைவுற்றார் என்ற செய்தி நம்மையெல்லாம் கடும் துயரத்திற்கு ஆளாக்கியுள்ளது.

தோழரின் மறைவால் வாடும் அவரது குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத் தோழர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலும், ஆறுதலும்!

மறக்க முடியாத அந்த மாமனிதரின் வாழ்வே நமக்காக அவர் விட்டுச் சென்றிருக்கும் மகத்தான செய்தி. அதுவே நமக்கு வழிகாட்டும் ஒளியாகட்டும்! பாட்டாளி மக்களுக்காகவே வாழ்ந்து நிறைந்த பகட்டில்லாத் தோழர் திரு. நல்லகண்ணு அவர்களின் நினைவும், புகழும் என்றென்றும் காலத்தால் அழியாத கல்வெட்டாக மக்கள் மனதில் நிலைத்திருக்கும்! தமிழ்நாட்டின் உயரிய விருது பெற்ற நம் தகைசால் தமிழரை - இனிய தோழரை முழு அரசு மரியாதையுடன் செவ்வணக்கம் செலுத்தி வழியனுப்பி வைப்போம்! எனக்கூறியுள்ளார்.



### தலைவர்கள் இரங்கல்!

தியாகச் செம்மல் தோழர் நல்லக்கண்ணு மறைவு தமிழ்நாடு மட்டுமின்றி இந்தியா முழுவதும் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. அரசியல் கட்சித் தலைவர்கள், பிரபலங்கள், பொதுமக்கள், கட்சியினர் என அனைத்து தரப்பு மக்களும் தங்கள் இரங்கல்களை பதிவுசெய்து வருகின்றனர்.

கட்சியின் தலைமை அலுவகத்தில் வைக்கப்பட்டுள்ள அவரின் உடலுக்கு அரசியல் தலைவர்கள் பலரும் நேரில் சென்று அஞ்சலி செலுத்தி வருகின்றனர். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் உள்ளிட்டோர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

இந்நிலையில் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி ஆகியோர் நல்லக்கண்ணுவின் மறைவிற்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.

**பிரதமர் மோடி,**

"அடிதட்டு மக்கள், தொண்டர்கள், ஒடுக்கப்பட்டவர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் என அனைத்து தரப்பு மக்களுக்கும் குரல்கொடுத்த அவருடைய முயற்சிகளுக்காக எப்போதும் நல்லகண்ணு அவர்கள் நினைவு கூரப்படுவார். சமூகத்தின் அனைத்து தரப்பு மக்களாலும் மதிக்கப்பட்டவர். அதேபோல், அவரது எளிமை மிகவும் குறிப்பிடத்தக்கது. எனது ஆறுதல்கள் எப்போதும் அவரது குடும்பத்தினருடனும், தொண்டர்களுடனும் இருக்கும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

**ராகுல் காந்தி,**

"தோழர் ஆர். நல்லகண்ணு அவர்களின் வாழ்க்கை நேர்மை, எளிமை மற்றும் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு ஆகியவற்றிற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. அவரது இந்த வாழ்க்கை ஏழை மற்றும் விளிம்புநிலை மக்களுக்கானது.

கிட்டத்தட்ட ஒன்பது தசாப்தங்களாக (90 ஆண்டுகள்), அவர் நீதி மற்றும் கண்ணியத்திற்காக உறுதியுடன் நின்றார். அவருடைய குடும்பத்தினருக்கும், சகாக்களுக்கும் மற்றும் எண்ணற்ற தொண்டர்களுக்கு எனது மனமார்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

**தமிழிசை சௌந்தரராஜன்**

சுதந்திரப் போராட்ட வீரர், இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மூத்த தலைவர் ஆர். நல்லகண்ணு மறைவுச் செய்தி மிகுந்த துயரத்தை அளிக்கிறது. வாழ்நாள் முழுவதும் மக்களுக்காக போராடிய அவரது சேவை என்றும் நினைவுகூரப்படும். அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறேன். குடும்பத்தினர் மற்றும் தோழமைகளுக்கு ஆழ்ந்த இரங்கல்கள் எனப் பதிவிட்டுள்ளார்.

**சீமான்**

எவராலும் குறை சொல்லமுடியாத மனித புனிதர் நல்லகண்ணு என நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார். சென்னையில் செய்தியாளர்களுடன் பேசிய அவர், நல்லகண்ணுவின் மறைவு மிகுந்த மனவலியாக இருக்கிறது என உருக்கமாக குறிப்பிட்டுள்ளார்.

**விஜய்**

சுதந்திரப் போராட்ட வீரர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர், விவசாயிகளுக்காகவும் மக்களின் உரிமைகளுக்காகவும் தம் வாழ்நாளின் பெரும் பகுதியைச் செலவிட்ட போராளி, தோழர் இரா. நல்லகண்ணு காலமான செய்தியறிந்து மன வேதனை அடைந்தேன்.

அவரது இழப்பு, இந்த நாட்டிற்கும் கம்யூனிஸ்ட் இயக்கத் தோழர்களுக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அவரைப் பிரிந்து வாடும் அவருடைய குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த தோழர் இரா. நல்லகண்ணு அவர்களின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

## ரஷியா-உக்ரைன் போர்: ஐ.நா சபையில் தீர்மானம் நிறைவேற்றம்

**சென்னை, பிப்.26:**

உக்ரைனுக்கு அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் ஆதரவு அளித்து வருகின்றன.



இப்போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்க அதிபர் டிரம்ப் முயற்சித்து வருகிறார். ஆனால் இன்னும் உடன்பாடு எட்டப்படவில்லை.

இதற்கிடையே நேற்று ரஷியா-உக்ரைன் இடையேயான போர் 5-வது ஆண்டில் நுழைந்தது.

இந்த நிலையில் ரஷியா-உக்ரைன் போரை உடனடியாக நிறுத்த அழைப்புவிடுத்து ஐ.நா. சபையில் வரைவு தீர்மானம் கொண்டுவரப்பட்டது. உக்ரைனில் நீடித்த அமைதிக்கான ஆதரவு' என்ற தலைப்பில் உக்ரைன் அறிமுகப்படுத்திய இந்த தீர்மானத்துக்கு இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், மெக்சிகோ, பிலிப்பைன்ஸ், போலந்து உள்பட 107 நாடுகள் ஆதரவு தெரிவித்து வாக்கு அளித்தன.

ரஷியா, ஈரான், கியூபா உள்பட12 நாடுகள் எதிராக வாக்களித்தன.

இந்த தீர்மானம் மீதான வாக்கெடுப்பை இந்தியா, அமெரிக்கா, பக்ரைன், வங்காளதேசம், பிரேசில், சீனா, தென் ஆப்பிரிக்கா, இலங்கை, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உள்பட 51 நாடுகள் புறக்கணித்து நடுநிலை வகித்தன.

உக்ரைனின் தீர்மானத்தை ஆதரித்த 107 நாடுகளுக்கு உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி நன்றி தெரிவித்தார்.

அவர் கூறும் போது, உக்ரைனுடன் உயிர்களைப் பாதுகாப்பதில் நின்ற 107 நாடுகள் ஒவ்வொன்றிற்கும் நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன்.

முழுமையான போர் நிறுத்தம் மற்றும் எங்கள் மக்கள் நாடு திரும்புவதற்கான தெளிவான அழைப்புகளுடன், நீடித்த அமைதிக்கு ஆதரவு அளிக்கும் எங்கள் தீர்மானத்தை ஐ.நா. சபை நிறைவேற்றியது என்றார்.

# பயங்கரவாதத்தால் இந்தியாவும் பாதிக்கப்பட்டுள்ளது!

## இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் மோடி பேச்சு!

**இஸ்ரேல், பிப்.26:**

இஸ்ரேலைப் போல் இந்தியாவும் பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் பிரதமர் நரேந்திர மோடி பேசியுள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி அரசு முறைப் பயணமாக புதன்கிழமை (பிப். 25) இஸ்ரேல் நாட்டுக்குச் சென்றுள்ளார். இதையடுத்து, சிறப்பு விமானம் மூலம் இஸ்ரேல் சென்றடைந்த அவருக்கு அந்நாட்டு பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு நேரில் உற்சாக வரவேற்பு அளித்தார்.

இதனைத் தொடர்ந்து, பிரதமர் மோடி இஸ்ரேலின் நாடாளுமன்றத்திற்கு சிறப்பு விருந்தினராகச் சென்று உரையாற்றியுள்ளார். இதனால், அங்கு இந்திய தேசிய கொடியின் மூவர்ணங்களில் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இஸ்ரேல் நாடாளுமன்றத்திற்கு வருகை தந்த முதல் இந்தியப் பிரதமர் எனும் பெருமை தனக்கே உரியது எனவும், இந்தியா அதிகாரப்பூர்வமாக இஸ்ரேலை அங்கீகரித்த 17 செப்டம்பர் 1950 அன்று தான் பிறந்ததாகவும் பிரதமர் மோடி பேசியுள்ளார்.

தொடர்ந்து, அவர் பேசியதாவது:"2023 ஆம் ஆண்டு அக். 7 ஆம் தேதி



ஹமாஸ் படைகளின் கொடூரத் தாக்குதலில் கொல்லப்பட்ட அனைவரின் குடும்பத்திற்கும் இந்திய மக்களின் இரங்கல் செய்தியை நான் கொண்டு வந்துள்ளேன். நாங்கள் உங்கள் வலியை உணர்கிறோம். பயங்கரவாதத்துக்கு எதிரான உறுதிப்பாட்டில் இஸ்ரேலுடன் இந்தியா இன்றும் என்றும் துணை நிற்கும். பயங்கரவாதத்தை எந்தவொரு காரணமும் நியாயப்படுத்த முடியாது.

இந்தியாவும் பயங்கரவாதத்தால் ஏற்படும் வலியை நீண்டகாலமாக உணர்ந்துள்ளது. இஸ்ரேலியர்கள் உள்பட ஏராளமான அப்பாவி மக்கள் கொல்லப்பட்ட 26/11 மும்பை பயங்கரவாதத் தாக்குதலை நாங்கள் நினைவுகூருகிறோம். உங்களைப் போலவே எங்களுக்கும் பயங்கரவாதத்திற்கு எதிரான இரட்டை நிலைப்பாடு இல்லாத பூஜ்ஜிய சகிப்புத்தன்மை கொண்ட கொள்கையுள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

இத்துடன், காஸா அமைதித்திட்டத்திற்கு இந்தியா ஆதரவளிப்பதாகவும், இந்தியாவின் வளர்ச்சியில் யூதர்களின் பங்கு மிகவும் முக்கியமானது எனவும் பிரதமர் மோடி கூறியுள்ளார்.

முன்னதாக, பிரதமர் மோடியின் இஸ்ரேல் பயணம் பாலஸ்தீனக் கொள்கைக்கு எதிரான துரோகம் எனக் கூறி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் உள்ளிட்ட இடதுசாரிக் கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளது .







# திருக்குறள் குறள்-542

வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி



உலகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம் மழையை நம்பி வாழ்கின்றன, அதுபோல் குடிமக்கள் எல்லாம் அரசனுடைய செங்கோலை நோக்கி வாழ்கின்றனர்.

## சிந்திக்க ஒரு நொடி



ஓட்டைப் படகில் ஓட்டையை
அடைத்துக் கொண்டு...
உள்ளே வரும்
தண்ணீரையும்
இறைத்துக் கொண்டு
கரைசேர போராடும்
ஒரு பயணம் தான்
நடுத்தர வாழ்க்கை

**உஷா முத்துராமன்**

## 'வெல்லும் தமிழ் பெண்கள் '





**திருவண்ணாமலை, பிப்.26:** திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் மாண்புமிகு துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி அவர்களின் ஆலோசனைப்படி 'வெல்லும் தமிழ் பெண்கள் ' என்ற நிகழ்ச்சியை வீடு வீடாக தேர்தல் பரப்புரையை முன்னிட்டு கழக நிர்வாகிகளுக்கு கீழ்பென்னாத்தூர் நகரச் செயலாளர் சி. கே.அன்பு அவர்கள் ஆலோசனை வழங்கினார். இக்கூட்டத்தில் கழகத் தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## மாவட்ட காவல் அலுவலகத்தில் மக்கள் குறை தீர்வு கூட்டம்



திருப்பத்தூர் மாவட்டம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் V.சியாமளா தேவி உத்தரவின் பேரில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ரவீந்திரன் தலைமையில் மக்கள் குறை தீர்வு கூட்டம் மாவட்ட காவல் அலுவலகத்தில் நடைபெற்றது. இக்குறைதீர்வு கூட்டத்தில் பொதுமக்களிடம் மொத்தமாக 36 மனுக்கள் பெறப்பட்டன. மனுக்களை விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூடுதல் காவல் கண்காணிப்பாளர் தெரிவித்தார்.

## புதியதாக கட்டப்பட்ட வரும் வாட்டர் டேங்கினை துணை சபாநாயகர் நேரில் ஆய்வு



**திருவண்ணாமலை, பிப்.26:** திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வேட்டவலம் பேரூராட்சியில் புதியதாக கட்டப்பட்டு வரும் வாட்டர் டேங்கினை மாண்புமிகு துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி அவர்கள் நேரில் சென்று ஆய்வு செய்தார். உடன் கழகத் தோழர்கள் அனைவரும் ஆய்வில் கலந்து கொண்டார்கள். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

# அரசு பொதுத் தேர்வு எழுதும் மாணவர்கள் தேர்வில் அதிக மதிப்பெண் பெற வேண்டி ஸ்ரீஹயக்ரீவர் பூஜை..!



**வந்தவாசி, பிப் 26:** திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீகிருஷ்ணா கல்வி மையம், குரு ஏஜன்சி மற்றும் எஸ்ஆர்எம் கணினி மையம் சார்பில் வந்தவாசி பகுதியில் 10, +1,+2 அரசு பொது தேர்வு எழுதும் பள்ளி மாணவர்கள் தேர்வில் அதிக மதிப்பெண் பெற வேண்டி வந்தவாசி ரங்கநாத பெருமாள் கோவிலில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ ஹயக்ரீவருக்கு சிறப்பு அபிஷேகம் செய்து, பூஜைகள் நடைபெற்றன.

இந்த சிறப்பு பூஜையில் வந்தவாசி மற்றும் சுற்றியுள்ள பகுதி பள்ளியில் பயிலும் சுமார் 300 க்கும் மேற்பட்ட மாணவ...மாணவிகள் தங்களது பெற்றோர்களுடன் கலந்து கொண்டனர். இந்த வைபவத்தில் பூஜிக்கப்பட்ட கயிறு, ஹயக்ரீவர் போட்டோ, பேனா, பிரசாதம் உள்ளிட்டவை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. மாணவர்கள் தங்களது தேர்வுக்கூட ஹால்டிக்கெட் வைத்து வழிபட்டனர்.

நிகழ்வை ஸ்ரீகிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா.சீனிவாசன், குரு முகமை ஈ.குருசங்கர், எஸ்.ஆர்.எம். கணினி மைய நிர்வாகி எ.தேவா ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.மேலும் கோவில் பட்டாச்சார்யாக்கள் ரங்கநாத குருக்கள், சதிஷ்ஐயர், வினோத் பட்டாச்சார்யா ஆகியோர் மந்திரங்கள் முழங்க சிறப்பு பூஜைகளை மேற்கொண்டனர்.

**பா.சீனிவாசன், வந்தவாசி.**

# புனித ஸ்ரீ ராகவேந்திரர் சுவாமிகள் அவதார தினம்



**கடலூர், பிப்.26:** கடலூர் மாவட்டம் புவனகிரி புனித ஸ்ரீ ராகவேந்திரர் சுவாமிகள் பிறந்த இடமான புவனகிரியில் அவதார தினத்தை முன்னிட்டு சிறப்பு பால் அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், தோரணங்களால் அலங்கரித்து, துளசி மாலைகளால் அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, பாட்டுகள் பாடி, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது.

ஏராளமான பக்தர்கள் ஸ்ரீ ராகவேந்திரரை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலாஸ்ரீதர் திருவண்ணாமலை**

# ரூ. 14 கோடி மதிப்பீட்டில் திருவண்ணாமலை ரயில் நிலையம் இணைக்கும் மின் படிக்கட்டு பணியை அமைச்சர் ஆய்வு







**திருவண்ணாமலை, பிப்.26:** திருவண்ணாமலை புதிய பேருந்து நிலையம் மற்றும் ரயில் நிலையம் இணைக்கும் 14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மின் படிக்கட்டு அமைக்கும் பணியை பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை மாண்புமிகு அமைச்சர் எ. வ. வேலு அவர்கள் பார்வையிட்டு அரசு அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கினார்.

உடன் சட்டமன்றத் துணை சபாநாயகர் கு. பிச்சாண்டி அவர்கள், உயர்திரு மாவட்ட ஆட்சித் தலைவர் க. தர்ப்பகராஜ் இ.ஆ.ப. அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.என். அண்ணாதுரை அவர்கள், எம்.எஸ். தரணிவேந்தன் அவர்கள், மாநகரச் செயலாளர் கார்த்திவேல்மாறன் மற்றும் அரசு அதிகாரிகள், கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# புதிய பள்ளி கூடுதல் வகுப்பறை கட்டடம் திறப்பு விழா: எம்எல்ஏ பங்கேற்பு!



**வேலூர், பிப். 26:** வேலூர் தெற்கு மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி வேலூர் ஒன்றியம் அன்பூண்டி ஊராட்சியில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி பள்ளியில் புதிய பள்ளி கூடுதல் வகுப்பறை கட்டடம் திறப்பு விழா நடந்தது.

விழாவில் வேலூர் தெற்கு மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி புதிய கட்டடத்தை திறந்து வைத்தார் .இதில் ஒன்றிய செயலாளர் ஞானசேகரன், துணை செயலாளர் காசி, ஒன்றிய நிர்வாகிகள் திவாகர், பச்சையப்பன், ரகு ,ஸ்ரீரங்கம் மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள் , உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## வசந்த உற்சவ தீமிதி விழாவில் தீ மிதித்த பக்தர்கள்



செய்யாறு அங்காள பரமேஸ்வரி அம்மன் கோவில் வசந்த உற்சவ தீமிதி விழாவில் தீ மிதித்த பக்தர்கள்.

## வெல்லும் தமிழ்ப்பெண்கள் பரப்புரை



**விழுப்புரம், பிப்.26:** விழுப்புரம் மாவட்டம் வடக்கு திமுக மயிலும் சட்டமன்றத் தொகுதி வல்லம் தெற்கு ஒன்றியம் சார்பில் மேல்சேவூர் கல்லாங்குப்பம் ஊராட்சியில் வெல்லும் தமிழ்ப்பெண்கள் கழக சாதனைகளை வீடுவீடாகக் சென்று பரப்புரை செய்தனர் இந்நிகழ்வில் வல்லம் தெற்கு ஒன்றிய செயலாளர் மொடையூர் துரை வடக்கு மாவட்ட மகளிர் அணித்துணை அமைப்பாளர் பரிதா அன்வர்பாஷா மற்றும் பாகமுகவர்கள் மகளிர் அணி கழகதொண்டர்கள்.


**அகரம் ராமதாஸ் செய்தியாளர்**

## அதிமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்



கரூர் வடக்கு ஒன்றிய அதிமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்ட செயலாளர் எம்ஆர் விஜயபாஸ்கர் பேசினார்.

# பரவையில் காந்தி சிலைக்கு மேற்கூரை முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜு திறந்து வைத்தார்



**வாடிப்பட்டி, பிப்.26:** மதுரை மேற்கு தொகுதிக் குட்பட்ட பரவை பேரூராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.10 லட்சம் மதி மதிப்பீட்டில் காந்தி சிலை வளாகத்தில் மேற்கூரை அமைக்கப்பட்டு அதன் திறப்பு விழா நடந்தது.

இந்த விழாவிற்கு பேரூராட்சி தலைவர் கலா மீனா ராஜா தலைமை தாங்கினார்.பேரூர் செயலாளர் ராஜா, மாவட்ட அவைத்தலைவர் அண்ணாதுரை, முன்னாள் பாண்டியன் கூட்டுறவு வங்கித் தலைவர் வில்லாபுரம் ராஜா முன்னாள் கவுன்சிலர் முத்துப்பாண்டி முன்னாள் மேயர் திரவியம்,ஜெயராஜ், முன்னாள் துணைத் தலைவர் சௌந்தர பாண்டி ஆகியோர் முன்னிலை வகித்தனர். துணைத் தலைவர் ஆதவன் வரவேற்றார்.

இந்தவிழாவில்கலந்துகொண்டு முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜு மேற்குறை அமைக்கப்பட்ட காந்தி மண்டபத்தை திறந்து வைத்து பேசினார்.

இதில் முன்னாள் துணைத் தலை வர் சௌந்தரபாண்டி, அலுவலகப் பணியாளர்கள் வெங்கடேஷ், சிலம்பரசன், கவுன்சிலர்கள் கீதா செந்தில், வின்சி, செபஸ்தியமாள், கட்சி நிர்வாகிகள் முத்துப்பாண்டி சரவணன் பாஸ்கரன், ஆரோக்கியசாமி அருள் பிரகாஷ் , மனோஜ் குமார், ராஜ்குமார், முத்துநாயகம், சரண்யாவின், சாந்தி, உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் முத்துப்பாண்டி நன்றி கூறினார்.

# மண்டபம் பேரூராட்சியில் மன்றக் கூட்டம்



**மண்டபம், பிப்.26 :** ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் பேரூராட்சி மன்றக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு பேரூராட்சித் தலைவர் ராஜா தலைமை வகித்தார். இளநிலை உதவியாளர் சுப.முனியசாமி முன்னிலை வகித்தார். பேரூராட்சியில் உள்ள 16 -வது வார்டு மறவர் தெருவில் ஒரு சில இடங்களில் சேதமான சிமின்ட் சாலையை சீரமைக்கக் கோரி கவுன்சிலர் மகேஸ்வரி கோரிக்கை விடுத்தார்.

பேரூராட்சி திருமண மண்டப பெயர் பலகை, இங்குள்ள சமையலறைய மற்றும் திருமண அரங்கில் மின் விசிறிகள் அமைக்கக் கோரி கவுன்சிலர் முஹமது மீரா சாகிப் வலியுறுத்தினார். மறவர் தெரு, யாதவர் தெரு, ஜமீன் சத்திரம் ஆகிய பகுதிகளுக்கு பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று ஒரு நாள் விட்டு ஒரு நாள் குடிநீர் விநியோகம் செய்ய மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி பராமரிப்பு பணியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

வீடுகளில் வெளியேற்றப்படும் உணவு கழிவுகள், குப்பையை தரம் பிரித்து திடக்கழிவு மேலாண் திட்ட வாகனங்களின் பொது மக்கள் சேர்க்க தூய்மைப் பணியாளர்களிடம் வலியுறுத்தப்பட்டது. கவுன்சிலர்கள் லீலாவதி, ஜெயந்தி, வாசிம் அக்ரம், முருகானந்தம், சித்ரா தேவி, சாதிக்பாட்ஷா, சைலஜா ஆனந்தி, சீதா லட்சுமி, கல்யாணி ஆகியோர் தங்கள் வார்டுகளின் அடிப்படை வசதிகளை நிறைவேற்றக் கோரிக்கை விடுத்து பேசினர்.



## நாட்டு நலத்திட்ட அலுவலர்களுக்கு பாராட்டு

கிருஷ்ணகிரியில் சிறப்பாக பணியாற்றிய 50 நாட்டு நலத்திட்ட அலுவலர்களுக்கு மாவட்ட கல்வி அலுவலர் கவுசர் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கினார்.

## பிரம்மோத்ஸவம் சிம்ம வாகனம் புறப்பாடு



கீழ் அஹோபிலம் ஸ்ரீ பிரஹலாத வரதன் பிரம்மோத்ஸவம் சிம்ம வாகனம் புறப்பாடு.

## சிங்கத்தாகுறிச்சி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் காசநோய் எதிர்ப்பு வார உறுதிமொழி



**தூத்துக்குடி, பிப்.26:** ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாட்டில் பிப்ரவரி 17 முதல் பிப்ரவரி 23 வரை காசநோய் எதிர்ப்பு வாரம் அனுசரிக்கப்படுகிறது. இந்த வாரத்தை அனுசரிக்கும் விதமாக தேசிய காசநோய் ஒழிப்பு திட்டம் தூத்துக்குடி மாவட்டம், வல்லநாடு காசநோய் பிரிவு சார்பாக காசநோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் உறுதிமொழி எடுக்கும் நிகழ்ச்சி சிங்கத்தாகுறிச்சி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் வைத்து இன்று (25.02.2026) நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு சிங்கத்தாகுறிச்சி அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலரும், வட்டார காசநோய் சிறப்பு அலுவலருமான டாக்டர். பே.புவனேஸ்வரி அவர்கள் தலைமையில் தாங்கினார்.

வல்லநாடு காசநோய் பிரிவு முதுநிலை சிகிச்சை மேற்பார்வையாளர் திரு.அ.அப்துல் ரஹீம் ஹீரா அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.

இடைநிலை சுகாதார செவிலியர் செல்வி. ரா.மாரியம்மள் அவர்கள் நன்றி கூறினார்.

இந்நிகழ்ச்சியில், துணை மகப்பேறு செவிலியர் திருமதி.ச.இசக்கியம்மள், மருத்துவமனை பணியாளர் திருமதி.ரா.செல்வராணி, மருத்துவ பயனாளிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை வல்லநாடு காசநோய் பிரிவு செய்திருந்தது.

## நெல்லை அருகே மாமியாரை வெட்டிக்கொலை செய்தது ஏன்?- கைதான மருமகள் வாக்குமூலம்

**நெல்லை, பிப்.26:** நெல்லை மாவட்டம் மானூர் அருகே உள்ள கம்மாளன்குளம் காலனி மேலத்தெருவை சேர்ந்தவர் அருணாசலம். இவருடைய மனைவி வெள்ளையம்மாள் (வயது 90).

இந்த தம்பதிக்கு பழனி என்ற மகனும், ஒரு மகளும் உள்ளனர். பிள்ளைகள் இருவருக்கும் திருமணமாகி விட்டது.

இந்த நிலையில் அருணாச்சலமும், பழனியும் ஏற்கனவே இறந்துவிட்ட நிலையில், வெள்ளையம்மாள், தனது மருமகள் வசந்தா (60) மற்றும் பேரக்குழந்தைகளுடன் வசித்து வந்தார்.

நேற்று காலை வெள்ளையம்மாள் முகத்தில் பலத்த வெட்டுக்காயங்களுடன் வீட்டில் கொலை செய்யப்பட்டு பிணமாக கிடந்தார்.

உடனே தாழையூத்து துணை போலீஸ் சூப்பிரண்டு ரகுபதிராஜா மற்றும் மானூர் இன்ஸ்பெக்டர் அருண்குமார் தலைமையிலான போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர்.

சந்தேகத்தின்பேரில் அவரது மருமகள் வசந்தாவை பிடித்து போலீசார் விசாரணை நடத்தியதில் அவர் கொலை செய்தது உறுதியானது. இதையடுத்து அவரை போலீசார் கைது செய்து விசாரித்தபோது வாக்குமூலமாக கூறுகையில், எனது மாமியார் வயது முதிர்வால் நான் வீட்டில் இருக்கும் போதெல்லாம் என்னை சம்பந்தமே இல்லாமல் திட்டிக்கொண்டே இருப்பார்.

வயல் வேலைக்கு அல்லது வேறு எங்காவது வேலை நிமித்தமாக சென்று வரவோ அல்லது சுபநிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு விட்டு வீட்டுக்கு வர கொஞ்சம் நேரமாகிவிட்டால், சந்தேகப்பட்டு பேசுவார். இதனால் எனக்கும், மாமியாருக்கும் அடிக்கடி வாக்குவாதம் ஏற்படும்.

இந்நிலையில் நேற்றும் சம்பந்தமில்லாமல் என்னை திட்டியதால் ஆத்திரம் அடைந்த நான் அவரை அரிவாளால் வெட்டிக்கொலை செய்தேன் என்றார்.

இதையடுத்து அவரை போலீசார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி கொக்கிரகுளம் மகளிர் கிளைச்சிறையில் அடைத்தனர்.

# ஊடுருவும் வெளிச்சம் தன்முனைக் கவிதைகள் நூல் எழுதிய கவிஞர் புதுகை ஆதீரா அவர்களுக்கு எழுத்தாணி விருது வழங்கப்பட்டது



**ஈரோடு, பிப்.26:** ஈரோடு வி.இ.டி காலை மற்றும் அறிவியல் கலைக்கல்லூரியில் கடந்த ஞாயிறு அன்று தமிழ்நாடு முத்தமிழ்ச் சங்கம் நடத்திய எழுத்தாணியின் அரியாசனம் 2025 விழாவில் சென்னையைச் சேர்ந்த கவிஞர் புதுகை ஆதீரா அவர்களுக்கு எழுத்தாணி விருது வழங்கப்பட்டது. விருதினை அமைப்பின் நிர்வாக ஆலோசகர் மற்றும் கவிக்குயில் ஆசிரியர் செ.பேச்சியம்மாள் வழங்கினார்.

உடன் நிர்வாக இயக்குனர் இராஜதுரை, அமைப்பின் தலைவர் பைம்பொழில் அருள்தாஸ் மணி, நிர்வாக அதிகாரி கனற்கோவன் கருப்புச்சாமி ராஜா ஆகியோர் உள்ளனர்.

கவிஞர் புதுகை ஆதீரா அவர்கள் எழுதிய ஊடுருவும் வெளிச்சம் என்கிற தன்முனைக் கவிதைகள் நூலுக்காக எழுத்தாணி விருது வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

நூல் மற்றும் நூலாசிரியர் பற்றிய அறிமுகம் சிறப்பாக மேடையில் விழா ஏற்பாட்டாளர்கள் அறிவித்து விருது வழங்கினார். கவிஞர் புதுகை ஆதீராவுடன் இணைந்து பல கவிஞர்களுக்கும் இவ்விருது வழங்கப்பட்டது.

# 12 ஆண்டுகளுக்குப் பின் அத்திவரதர் தரிசனம்: மார்ச் 1 முதல் தொடக்கம்!

**கும்பகோணம், பிப்.26:** கும்பகோணத்தில் அமைந்துள்ள புகழ்பெற்ற வரதராஜப் பெருமாள் கோயிலில், பாதாள அறையில் வைக்கப்பட்டுள்ள ஸ்ரீதேவி, பூதேவி உடனாய அத்திவரதரைத் தரிசிக்க 12 ஆண்டுகளுக்குப் பிறகு பக்தர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



வரும் மார்ச் 1-ம் தேதி முதல் 10 நாட்களுக்கு இந்தச் சிறப்புத் தரிசனம் நடைபெறவுள்ளது. இதற்கான விரிவான ஏற்பாடுகளைக் கோயில் நிர்வாகம் செய்து வருகிறது.

கும்பகோணம் பிரம்மன் கோயில் தெருவில் உள்ள வரதராஜப் பெருமாள் கோயிலில் மூலவர் சந்நிதிக்கு கிழக்கில் உள்ள பாதாள அறையில் அத்தி மரத்தாலான, சுமார் ஒன்றரை அடி உயரம் உள்ள ஸ்ரீதேவி, பூதேவி உடனாய அத்திவரதர் சிலை வைக்கப்பட்டுள்ளது.

இந்த சிலை 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை வெளியில் எடுக்கப்பட்டு, பக்தர்கள் தரிசனத்துக்காக வைக்கப்பட்டு, மீண்டும் பாதாள அறைக்கு கொண்டு செல்லப்படும். 1915-ம் ஆண்டுக்குப் பின் பல்வேறு காரணங்களால் இந்த சிலை வெளியே எடுத்து வைக்கப்படவில்லை. 98 ஆண்டுகளுக்கு பிறகு 2013-ம் ஆண்டு இந்த சிலை வெளியே எடுக்கப்பட்டு, பக்தர்களின் தரிசனத்துக்காக வைக்கப்பட்டது. பின்னர் அந்த சிலை மீண்டும் பாதாள அறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டது.

இந்தநிலையில், 12 ஆண்டுகளுக்கு பிறகு, ஸ்ரீதேவி. பூதேவி உடனாய அத்திவரதர் சிலை மார்ச் 1-ம் தேதி வெளியில் எடுக்கப்பட்டு. சிறப்புபூஜைகளுக்குப் பின்னர் பக்தர்கள் தரிசனத்துக்காக வைக்கப்பட உள்ளது. தொடர்ந்து,மார்ச் 10-ம் தேதி வரை இந்த சிலையை பக்தர்கள் தரிசனம் செய்யலாம்.இதற்கு முன்பு, 2013ஆம் ஆண்டு அத்திவரதர் சிலை பாதாள அறையில் இருந்து வெளியே கொண்டு வரப்பட்டு, பக்தர்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது.

கடந்த முறை அத்திவரதர் சிலையைத் தரிசிக்க கட்டுக்கடக்காத பக்தர் கூட்டம் கூடியது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆகம விதிகளின் படி காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரை, மாலை 5 மணி முதல் இரவு 8.30 மணி வரை தைலக் காப்பு, புஷ்ப சேவை, ஊஞ்சல் சேவைகளை பக்தர்களே செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக இந்து சமய அறநிலையத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# 100 கர்ப்பிணி பெண்களுக்கு சீர்வரிசை



**ஈரோடு, பிப்.26:** ஈரோடு மாவட்டம் மொடக்கு றிச்சி வடிவுள்ள மங்கை திருமண மண்டப த்தில் மொட க்குறிச்சி ஒன்றிய சமுதாய வளை காப்பு அண்மையில் நூறு கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு நடத்தப்பட்டது. அமைச்சர் சு.முத்துசாமி அவர்கள் சீர்வரிசை பொருட்களை தனித்தனியே 100 கர்ப்பிணி பெண்களுக்கும் வழங்கினார்.

ஆண்டுதோறும் வளைகாப்பு நன்கொடை வழங்கி வரும் செங்கரைப்பாளையம் தோட்டக்காட்டு நல்லப்பகவுண்டர் அறக்கட்டளை சார்பில் செயலாளர் எஸ்.கிருஷ்ணன் அவர்கள் ரூ10,000-ஐ அமைச்சர் முன்னிலையில், குழந்தைகள் நல அலுவலர் திருமதி காயத்ரி அவர்களிடம் நன்கொடையாக வழங்கினார்.

விழாவில் மொடக்குறிச்சி ஒன்றிய செயலாளர்கள் திரு குணசேகரன், திரு கதிர்வேல், பேரூர் செயலாளர் திரு சரவணன் திமுக கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் என பெருமளவில் கலந்து கொண்டார்கள்.

விழாவில் மொடக்குறிச்சி பிடிஓ திருநாவுக்கரசு மற்றும் அரசு அலுவலர்கள், 150 க்கும் மேற்பட்ட அங்கன்வாடி பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

விழா மிகச்சிறப்பாகவும் மகிழ்ச்சிகரமாகவும் உணர்ச்சிபூர்வமாகவும் நடைபெற்றது. விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டு விழா இனிதே நிறைவுற்றது.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389

## அரசியல் கார்னர்

## அவர் பெயரை சொல்லக்கூட விரும்பவில்லை... இ.பி.எஸ். மீது சசிகலா அடுக்கடுக்கான குற்றச்சாட்டு

**ராமநாதபுரம், பிப்.26:** ராமநாதபுரம் மாவட்டம் கமுதி கோட்டைமேடு பகுதியில் நடைபெற்ற ஜெயலலிதா பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமி மீது சசிகலா அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை முன்வைத்தார். சசிகலா பேசியதாவது:-



என் மீதான வழக்கில் தீர்ப்பு வந்தது. 4 ஆண்டுகள் சிறை தண்டனை. அப்போது என் கவனம் எல்லாம் அரசை கலைக்க விட்டு விடக்கூடாது என்ற பொறுப்பு அதிகமாகிவிட்டது. ஒரு வாரம் அவகாசம் கேட்டும் கிடைக்கவில்லை. நாளைக்கு மாலை 6 மணிக்கு பெங்களூரு சிறைக்கு போக வேண்டும் என்று சொல்லிவிட்டார்கள்.உடனே எம்.எல்.ஏ.க்களை கூட்டி ஒருவரை முதலமைச்சராக (எடப்பாடி பழனிசாமி) தேர்ந்தெடுத்தோம். நான் அவர் பெயரை சொல்லக்கூட விரும்பவில்லை. அவர் உடனே என்ன சொன்னார்? நீங்களே எல்லா எம்.எல்.ஏ.க்களிடமும் கையெழுத்து வாங்கி கொடுங்க என்றார். அதையும் செய்தேன். பிறகு பெங்களூரு சென்றேன்.சில மாதங்கள் சென்றது. நீங்கள் ஏன் பெங்களூருவில் இருக்க வேண்டும் என்று செங்கோட்டையன் உள்ளிட்டவர்கள் கேட்டனர். தமிழகத்துக்கு மாற்றிடலாம் என்றனர். அதை மறுத்து நான் பேசியது ஏதோ தெய்வாதீனமாக எனக்கு தோன்றியது போல இருக்கிறது. இல்லை என்றால் நான் இன்றைக்கு பேசிக்கொண்டு இருப்பேனா என்பதே கஷ்டம். அதுக்கு அப்புறம் திடீர்னு ஒரு பொதுக்குழு, என்னை நீக்கினார்கள்.நான் ஒருவரை முதலமைச்சராக உட்கார வைத்து விட்டு சென்றேன். ஆனால் என்னை ஒரு பேப்பரை தூக்கி போடுவது போல் வீசினால் எப்படி இருக்கும்?தினமும் எனக்கு பிரச்சனை. இதற்கிடையே எனது கணவருக்கு உடல்நிலை சரியில்லாமல் போனது. அப்போது பரோலில் 15 நாட்கள் விடுப்பு கேட்டேன். 5 நாட்கள் மட்டும் கொடுங்கள் என இங்கே முதலமைச்சர் கூறினார். போயஸ் கார்டன் வீட்டில் தங்கக்கூடாது என்பன உள்பட பல்வேறு நிபந்தனைகளை எனக்கு விதித்தனர். எனது கணவர் மறைந்த தகவல் வந்தது. அதற்கும் கேட்ட பரோல் கிடைக்கவில்லை.

ஆட்சியில் உட்கார வைத்த என்னை, ஈட்டி வைத்து குத்தியது போல செய்தனர். இதை எல்லாம் மீறி, நான் விடுதலை ஆகி சென்னைக்கு வந்தேன். காரில் கட்சி கொடி கட்டக்கூடாது. ஜெயலலிதா சமாதிக்கு போகக்கூடாது என கட்டுப்பாடுகள் விதித்தனர். தமிழக எல்லைக்கு வந்தவுடன் என்னை கைது செய்ய காத்திருந்தனர். இன்று கட்சி சரிந்து போய்விட்டது. எப்படியாவது ஒன்றாக இருக்க வேண்டும் என நினைத்தேன். நான் நினைத்து இருந்தால் அப்பவே எதையும் செய்திருக்க முடியும்.

தமிழ்நாட்டு மக்கள் மீது எனக்கு ரொம்ப நம்பிக்கை உள்ளது. நம்மை கைவிடமாட்டார்கள். அதனால்தான் இந்த மண்ணில் இந்த முடிவை எடுப்பதற்காக வந்தேன். என் மனதில் உள்ளதை எல்லாம் உங்களிடம் சொல்லி விட்டேன். இனி ஒரு தீர்க்கமான முடிவை எடுத்துள்ளேன். புதிய களத்தை காணப்போகிறோம் என்றார்.

## கிடைக்கும் வாகனங்களில் பயணித்தால்... கூட்டணி குறித்து தொண்டர்களுக்கு ராமதாஸ் கடிதம்

**சென்னை, பிப்.26:** பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் தொண்டர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில்,



என் உயிரினும் மேலான, என் உயிரை விட மேலான பாட்டாளி சொந்தங்களே வணக்கம் நான் நலம்! நீங்கள் நலம்தானே...?

எப்போதும் எல்லோரும் என்னோடுதான் அணிவகுக்கின்றீர்கள். அணிவகுப்பீர்கள்.

நாம் சற்றே நம் கடந்த காலத்தை திரும்பி பார்ப்போம். சமூகநீதி வரலாற்றில் தமிழ்நாட்டளவில் 4 இடஒதுக்கீடுகள், தேசிய அளவில் 2 இடஒதுக்கீடுகள் என மொத்தம் 6 இட ஒதுக்கீடுகளை நாம் தான் போராடி வென்றெடுத்தோம். சாதி, சமய, ஒற்றுமையுடன் அனைவரும் சகோதரர்களாக வாழ வேண்டி சமய சமுதாய நல்லிணக்க மாநாடுகளை நடத்தினோம்.

எப்போதும் இணைந்தே இருப்போம். தொடர்ந்து உங்களோடு பேசுவேன் என்று கூறியுள்ளார்.




## நண்பர் வீட்டில் குளிர்பானம் குடித்த வேன் ஓட்டுநர் மர்ம மரணம்

**சென்னை, பிப்.26:** வியாசர்பாடி ராஜீவ்காந்தி நகரைச் சேர்ந்தவர் கிளின்டன் (25). வேன் ஓட்டுநராக வேலை செய்து வந்தார். மது போதைக்கு அடிமையாகி போதை மறுவாழ்வு மையத்தில் சிகிச்சை பெற்று வந்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில், நேற்று முன்தினம் கிளின்டன், சென்னை பெரம்பூரில் உள்ள ரமணா நகரில் வசிக்கும் நண்பர் பிரசாந்த் வீட்டுக்குச் சென்றுள்ளார்.

அங்கு பிரசாந்த், நண்பருக்கு குடிக்க குளிர்பானம் கொடுத்துள்ளார். அதை குடித்த கிளின்டன் சிறிது நேரத்திலேயே மயங்கி விழுந்தார்.

இதைக் கண்டு அதிர்ச்சி அடைந்த பிரசாந்த், நண்பரை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். அங்கு பரிசோதித்த மருத்துவர்கள் கிளின்டன் ஏற்கனவே இறந்துவிட்டதாகத் தெரிவித்தனர்.

தகவல் அறிந்து செம்பியம் போலீஸார் உடலை மீட்டு பிரேதப் பரிசோதனைக்காக ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

கிளின்டன் உயிரிழப்புக்கு காலாவதியான குளிர்பானம் காரணமா அல்லது இறப்புக்கு வேறு காரணம் உள்ளதா என போலீஸார் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.

இதற்கிடையே,கிளின்டன் மரணத்தில் மர்மம் இருப்பதாக அவரது குடும்பத்தினர் குற்றம் சாட்டியுள்ளனர். இதுகுறித்து, போலீஸார் கூறுகையில், பிரேதப் பரிசோதனை அறிக்கை வந்த பின்னரே இறப்புக்கான உண்மையான காரணம் தெரியவரும் என்றனர்.

## ஓய்வு பெற்ற ராணுவ ஊழியரை கொலை செய்த காவலாளிக்கு ஆயுள் தண்டனை

**சென்னை, பிப்.26:** நடத்தையில் சந்தேகமடைந்து ஓய்வு பெற்ற ராணுவ ஊழியரை கொலை செய்த வழக்கில், காவலாளிக்கு ஆயுள் தண்டனை விதித்து சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பெரம்பூர், மதுரை சாமி மடம் தெருவை சேர்ந்த வெங்கடசாமி ராணுவத்தில் கிளார்க்காக பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவரது வீட்டுக்கு அருகில் தனியார் நிறுவன காவலாளியாக பணியாற்றி வரும் துளசையா (54) என்பவர் வசித்து வந்தார்.

துளசையாவின் மனைவியிடம் வெங்கடசாமி அடிக்கடி பேசி வந்துள்ளார். இதை துளசையா கண்டித்துள்ளார். இதனால் ஏற்பட்ட தகராறு முற்றி, கடந்த 2024 அக்.11-ம் தேதி வெங்கடசாமியை கத்தியால் துளசையா வெட்டினார். இதில் படுகாயமடைந்த வெங்கடசாமி, சிகிச்சை பலனின்றி இறந்தார்.

இந்த கொலை சம்பவம் தொடர்பாக, திருவிக நகர் போலீஸார் வழக்குப் பதிவு செய்து துளசையாவை கைது செய்தனர். இந்த வழக்கு விசாரணை சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் நீதிபதி எஸ்.கார்த்திகேயன் முன்பாக நடந்தது.

காவல்துறை தரப்பில் மாநகர குற்றவியல் வழக்கறிஞர் ஜி.தேவராஜன் ஆஜராகி, கொலை சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் உள்ளதாகவும், மரணத்துக்கு நடத்தையில் ஏற்பட்ட சந்தேகமும், கத்தியால் ஏற்பட்ட வெட்டுக்காயமும் தான் காரணம் என வாதிட்டார்.

அதையடுத்து நீதிபதி, காவல்துறை தரப்பில் கொலைக் குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளதால், குற்றம் சாட்டப்பட்ட துளசையாவுக்கு ஆயுள் தண்டனை, ரூ. 10 ஆயிரம் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

## ம.பி: வேலை தேடும் பெண்களை பாலியல் தொழிலில் ஈடுபடுத்திய சகோதரிகள் உட்பட 3 பேர் கைது



**போபால், பிப்.26:** மத்திய பிரதேசத்தில் வேலை தேடும் இளம் பெண்களை குறிவைத்து பாலியல் தொழிலில் ஈடுபடுத்திய இரு சகோதரிகள் உட்பட 3 பேரை போலீஸார் கைது செய்துள்ளனர்.

அப்பாஸ் நகரில் உள்ள ஒரு சிறிய சேரிப் பகுதியில் வசித்து வந்தவர்கள் அம்ரின் மற்றும் அப்ரின். சகோதரிகளான இவர்கள் பொருளாதார ரீதியில் பின்தங்கிய இளம் பெண்களை குறிவைத்து அவர்களுக்கு இலவச தங்குமிடம் உணவுடன் மாதம் ரூ.10,000 சம்பளம் தருவதாக ஆசைவார்த்தைகளை கூறி வேலைக்கு தேர்வு செய்துள்ளனர். இதையடுத்து அவர்களை பாலியல் தொழிலில் ஈடுபடுத்தியதுடன், கட்டாய மதமாற்றமும் செய்துள்ளனர்.

இதுதொடர்பாக, 21 மற்றும் 32 வயதுடைய இரு பெண்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு பாக் செவானியா காவல் நிலையத்தில் அளித்த புகாரின் அடிப்படையில் அம்ரின் மற்றும் அப்ரின் மற்றும் அவர்களுக்கு உதவியாளராக செயல்பட்ட சந்தன் யாதவ் ஆகியோரை போலீஸார் கைது செய்தனர்.

மேலும், இந்த வழக்கில் தலைமறைவாக உள்ள பிலால், சானு மற்றும் யாசிர் ஆகிய மூவர் தேடப்பட்டு வருகின்றனர்.இளம் பெண்களை பாலியல் தொழிலில் ஈடுபடுத்தி சட்டவிரோதமாக கிடைத்த பணத்தின் மூலமாக அவர்கள் சொகுசு வாழ்க்கை வாழ்ந்து வந்ததை காவல் துறையினர் உறுதிப்படுத்தியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட இரண்டு பெண்கள் அளித்த புகாரில் கூறியுள்ளதாவது: ஏழ்மையில் இருந்த எங்களுக்கு வேலை தருவதாகக் கூறி மெல்ல பார்ட்டி, பப், லாஞ்சுக்கு அழைத்து அங்கு சென்று செல்வந்தர்களுடன் ஒன்றாக இருக்க வற்புறுத்தினர். மது, எம்டி போதைப் பொருட்களை கொடுத்து சுயநினைவற்ற நிலையில் இருந்தபோது நாங்கள் வன்கொடுமைக்கு ஆளானோம்.

இதேபோன்று, சத்தீஸ்கரை சேர்ந்த பெண் கடந்த டிசம்பர் 2025-ல் வேலை நிமித்தமாக அகமதாபாத் அழைத்துச் செல்லப்பட்ட போது அங்கு அம்ரினின் உறவினர் யாசிர் என்பவரால் வன்கொடுமை செய்யப்பட்டார். மற்றொரு பெண் சந்தன் யாதவ் என்பரால் பாலியல் கொடுமைக்கு ஆளானார். வெளியே சொன்னால் கொலை செய்துவிடுவதாக அம்ரின், அப்ரின் ஆகியோர் மிரட்டினர். இவ்வாறு புகாரில் கூறப்பட்டுள்ளது.

அம்ரின், அப்ரின் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவர்களின் போன்களை ஆய்வு செய்தபோது பல இளம்பெண்களின் புகைப்படங்கள் அடங்கிய வாட்ஸ்அப் குழுக்கள் கண்டறியப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட பெண்கள் குஜராத் மற்றும் மும்பை என இரு மாநிலங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டதால் இதில் மிகப் பெரிய நெட்வொர்க் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் உள்ளது. இதையடுத்து இவ்வழக்கில் விசாரணை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

## முதியோர் இல்லத்தில் தஞ்சமடைந்த 72 வயது தாயை மீட்கக் கோரிய தத்து மகனுக்கு ரூ.1 லட்சம் அபராதம் விதிப்பு

**மதுரை, பிப்.26:** திண்டுக்கலைச் சேர்ந்த செல்வகணேஷ், மாயமான தனது 72 வயது தாயார் ஜெயலட்சுமியை மீட்க வலியுறுத்தி, உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்தார். அந்த மனுவை விசாரித்தநீதிபதி ஜி.கே. இளந்திரையன், ஆர். பூர்ணிமா அமர்வு பிறப்பித்த உத்தரவில் கூறியிருப்பதாவது:

மனுதாரர் குறிப்பிட்டுள்ள ஜெயலட்சுமி (72) திருமணம் ஆகாதவர். ஏராளமான சொத்துகள் உள்ளன. உதவிப் பேராசிரியராக பணிபுரிந்த அவர், செல்வ கணேஷை தத்தெடுத்துள்ளார். ஆனால், ஜெயலட்சுமியை மிரட்டி சில சொத்துகளை செல்வகணேஷ் அபகரித்துள்ளார்.

இதற்குப் பயந்து, ஜெயலட்சுமி முதியோர் இல்லத்தில் தஞ்சம் அடைந்துள்ளார். இதையடுத்து, தாயாரைக் காணவில்லை என்று மனுதாரர் நீதிமன்றத்தை நாடியுள்ளார்.



ஜெயலட்சுமியை போலீஸார் ஆஜர்படுத்தியபோது, “செல்வகணேஷின் குணத்தை அறியாமல் தத்தெடுத்து விட்டதாகவும், அவரால் தனது உடைமைக்கும், உயிருக்கும் அச்சுறுத்தல் இருந்ததால், அடைக்கலம் தேடி முதியோர் இல்லம் சென்றதாகவும்” அவர் தெரிவித்தார்.

சட்ட விரோதமாகவும், தன்னைக்கட்டாயப்படுத்தியும் கையெழுத்துப் பெற்ற ஆவணங்களை ரத்து செய்யுமாறு அவர் கேட்டுக் கொண்டார். எனவே, ஆட்கொணர்வு மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. மனுதாரருக்கு ரூ.1 லட்சம் அபராதம் விதிக்கப்படுகிறது.

இந்தப் பணத்தை அவர் உயர் நீதிமன்ற மதுரை அமர்வு சட்டப் பணிகள் ஆணைக் குழுவிடம் ஒரு வாரத்தில் செலுத்த வேண்டும். மேலும், ஜெயலட்சுமியிடம் சட்டவிரோதமாக கையெழுத்துப் பெற்று நடைபெற்ற ஆவணமாறுதல்களை ரத்து செய்வது தொடர்பாக, திண்டுக்கல் மாவட்டப் பதிவாளர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திண்டுக்கல் காவல் ஆய்வாளர், மூதாட்டியின் புகார் தொடர்பாக வழக்குப் பதிந்து, மனுதாரர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். மூதாட்டிக்கு போலீஸ் பாதுகாப்பு வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இது தொடர்பாக திண்டுக்கல்எஸ்.பி. அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். விசாரணை ஜூன் 2-க்கு தள்ளி வைக்கப்படுகிறது. இவ்வாறு நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

## குற்றங்களைக் கண்டறிதல், மேம்பட்ட சேவை வழங்க தமிழக காவல் துறையில் புதிய மென்பொருள் இன்று முதல் அமல்

**சென்னை, பிப்.26:** தமிழக காவல் துறையில் புதிய மென்பொருள் ‘சிசிடிஎன்எஸ் 2.0’ நாளை முதல் அமலுக்கு வருகிறது. வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி குற்றங்களைக் கண்டறிதல், விசாரணை, மேற்பார்வை மற்றும் தரவு சார்ந்த தமிழக காவல் துறையின் செயல் திறனை மேம்படுத்துவதற்காக, குற்றம் மற்றும் குற்றவாளிகள் கண்காணிப்பு வலைப்பின்னல் அமைப்பு (சிசிடிஎன்எஸ் 2.0) மென்பொருள் ரூ.124.37 கோடியில் உருவாக்கப்பட்டு காவல் துறையில் பயன்பாட்டுக்கு வரவுள்ளது.

சிசிடிஎன்எஸ் 2.0 மென்பொருள் (ஏற்கெனவே 1.0 உள்ளது) காவல் துறையில் ஒரு மேம்பட்ட தொழில்நுட்பமாகும். இதில் சமுதாய சேவைப் பதிவேடு (சிஎஸ்ஆர்), முதல் தகவல் அறிக்கை (எஃப்ஐஆர்) மற்றும் முதல்நிலை விசாரணை ஆகியவற்றைப் பதிவுசெய்ய இயலும்.

மேலும் முதல் தகவல் அறிக்கை, குற்றப் பத்திரிகை, விசாரணை அறிக்கைகள் ஆகியவற்றை ஆன்லைனில் உடனடியாக நீதிமன்றத்துக்கு அனுப்ப முடியும். இதேபோல், சிசிடிஎன்எஸ் 2.0 மென் பொருள் குற்றவியல் நீதி அமைப்பின் மற்ற இணை அமைப்புகளான குற்ற வழக்கு தொடர்புத் துறை, சிறைத் துறை, தடயவியல் மற்றும் சுகாதாரத் துறையுடன் ஒருங்கிணைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இது காவல் நிலையங்களின் பணியின் வேகத்தை விரைவுபடுத்தவும், வெளிப்படைத்தன்மையைக் கொண்டுவரவும் சிறந்த பொறுப்புணர்வை உறுதி செய்யவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும் மூத்த அதிகாரிகள் காவல் நிலையங்களில் செய்யப்படும் பணிகளை உடனுக்குடன் திறம்பட கண்காணிக்க வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் மூத்த குடிமக்கள் மற்றும் பூட்டிய வீடுகள் குறித்த தகவல்களை பதிவு செய்வது மற்றும் தனி அடையாளத்துடன் கூடிய பொருட்களை தேடுவது போன்றவற்றுக்கான சிறந்த வசதிகள் வழங்கப்படுகின்றன.

இந்த இணையதளத்தின் மூலம் பொதுமக்கள், ஆன்லைனில் புகாரைப்பதிவு செய்தல், சமுதாய சேவைப் பதிவேடு, முதல் தகவல் அறிக்கை மற்றும் ஆன்லைன் புகார் ஆகியவற்றின் தற்போதைய நிலையை அறிதல், கைது செய்யப்பட்ட நபரின் விவரங்களை அறிதல், காணாமல் போன மற்றும் அடையாளம் தெரியாத இறந்த நபர்களின் தகவல்களை தேடுதல், காவல் சரிபார்ப்பு மற்றும் தொலைந்த ஆவண அறிக்கை ஆகியவற்றைப் பெறுதல், விபத்து ஆவணங்களைப் பதிவிறக்குதல் ஆகிய சேவைகளும் பெறலாம்.

இந்த திட்டங்களின் செயல் வடிவமுக்கியத்துவம், தொழில்நுட்ப ஆளுமை மற்றும் காவல்துறை நவீனமயமாக்கல் முயற்சிகளுடன் அவற்றின் ஒருங்கிணைப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, குற்றம் மற்றும் குற்றவாளிகள் கண்காணிப்பு வலைப்பின்னல் அமைப்பு சிசிடிஎன்எஸ் (CCTNS) 2.0 மென்பொருள் மற்றும் டிஜிட்டல் கைரேகை சேகரிப்பு அமைப்பு ஆகிய இரு திட்டங்களும் மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து காவல் நிலையங்களிலும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் அனைத்து காவல் சிறப்பு பிரிவுகளிலும் முதல்வர் மு.க.ஸ்டாலினால் நாளை (26-ம் தேதி) இந்த புதிய மென்பொருள் சேவை தொடங்கி வைக்கப்பட உள்ளது.




வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை பூமியில் இல்லாமல் ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528

## காவலர் குறைதீர் சிறப்பு முகாமில் ஒரே நாளில் 250 போலீஸாரின் கோரிக்கைகள் ஏற்பு



**சென்னை, பிப்.26:** காவலர் குறைதீர் சிறப்பு முகாமில் ஒரே நாளில் 250 போலீஸாரின் கோரிக்கைகளை ஏற்று காவல் ஆணையர் உத்தரவிட்டுள்ளார். காவல் நிலையங்களில் புகார் அளித்தும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால் பாதிக்கப்பட்டவர்கள் நேரடியாக காவல் ஆணையரிடம் முறையிடலாம்.

இப்படி அரசு விடுமுறை தினங்கள் தவிர திங்கள் முதல் வெள்ளி வரை காவல் ஆணையர் அலுவலகத்தில் பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாமில் புகார் மனுக்கள் பெறப்பட்டு வருகின்றன.

இதேபோல் போலீஸாரின் குறைகளை தீர்க்கும் வகையில், வேப்பேரியில் உள்ள சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் நேற்று காலை காவலர் குறைதீர் சிறப்பு முகாம் நடைபெற்றது.

இதில், சென்னையில் உள்ள வடக்கு, தெற்கு, மேற்கு, கிழக்கு ஆகிய 4 மண்டலங்களில் பணிபுரியும் போலீஸார் தங்களது குறைகளை புகார் மனுக்களாக அளித்தனர்.

அதன்படி, 7 காவல் ஆய்வாளர்கள், 30 எஸ்ஐ-க்கள் உட்பட 250 போலீஸார் பணி மாறுதல், தண்டனை களைதல், காவலர் குடியிருப்பு கோருதல், ஊதியம் குறைபாடு களைதல் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் தொடர்பாக மனு அளித்தனர். அதை பெற்றுக் கொண்ட காவல் ஆணையர் அருண், இந்த மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இந்நிகழ்வின்போது இணை ஆணையர் (தலைமையிடம்) மகேஸ்வரன், துணை ஆணையர்கள் சுப்புலட்சுமி, ஹரிகிரண் பிரசாத், ஈஸ்வரன், கார்த்திக், குத்தாலிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## சென்னை கடற்கரை - செங்கல்பட்டு இடையே கூடுதலாக 45 ரயில் சேவை குறைப்பால் பயணிகள் கடும் அவதி

**சென்னை, பிப்.26:** கடற்கரை - செங்கல்பட்டு தடத்தில் ரயில் சேவை மாற்றத்தால், கடும் சிரமத்தை சந்தித்து வரும் நிலையில், மேலும் 45 ரயில் சேவைகள் குறைக்கப்பட்டதால் பயணிகள் மிகவும் அவதிப்பட்டனர். சென்னை எழும்பூர் ரயில் நிலைய மறுசீரமைப்பு பணியின் ஒரு பகுதியாக, 10, 11 ஆகிய நடைமேடைகளில் நடைமேம்பால அடித்தளப் பணிகள் நடைபெறுகின்றன.

இதனால், கடற்கரை - செங்கல்பட்டு தடத்தில் பிப்.20-ம் தேதி முதல் ஏப்.5-ம் தேதி வரை 44 மின்சார ரயில்களின் சேவை ரத்து மற்றும் சேவைகள் மாற்றி அறிவிக்கப்பட்டன.

அதைத் தொடர்ந்து, எழும்பூர் ரயில் நிலைய 5, 6-வது நடைமேடைகள் வழியாக மின்சார ரயில்கள் இயக்கப்படுகின்றன. நடைமேடைகள் மாற்றப்பட்டதால், இருமார்க்கத்திலும் மின்சார ரயில்கள் தாமதமாகின்றன.இதனால் கடந்த 4 நாட்களாகவே பயணிகள் சிரமம் அடைந்து வருகின்றனர். நேற்று 5-வது நாளாக ஏற்பட்ட மின்சார ரயில்கள் தாமதத்தால் பெரும்பாலான பயணிகள் திரிசூலம், பரங்கிமலை, கிண்டி உள்ளிட்ட ரயில் நிலையங்களில் இறங்கி, அருகில் உள்ள மெட்ரோ நிலையம் சென்று, மெட்ரோ ரயில்களில் பயணித்தனர்.



இதனால், மெட்ரோ ரயில்களில் பயணிகள் கூட்டம் அலைமோதியது. இதற்கிடையில், புறநகர் மின்சார ரயில் சேவை இரு மார்க்கத்திலும் நேற்று மேலும் 45 சேவைகளைக் குறைத்து இயக்கப்படும் என சென்னை ரயில்வே கோட்டம் அறிவித்தது.

இருப்பினும், பயணிகளின் சிரமத்தைக் குறைக்க, சென்னை எழும்பூர் - பரங்கிமலை மற்றும் கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு இடையே 26 கூடுதல் மின்சார ரயில் சேவைகள் (மின்சார ரயில் ஷட்டில் சேவைகள்) அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த சிறப்பு ரயில்கள் செல்லும் போது இரு மார்க்கத்திலும் பல்லாவரம், கோடம்பாக்கம், நுங்கம்பாக்கம், சேத்துப்பட்டு ஆகிய நிலையங்களில் நிற்காது.


கடற்கரை - தாம்பரம் இடையே இயக்கப்படும் ஏசி மின்சார ரயில்கள் வார நாட்களில் முழுமையாக ரத்து செய்யப்படுகின்றன.

திருமால்பூர் - அரக்கோணம், கடற்கரை - அரக்கோணம் விரைவு மின்சார ரயில்கள், செங்கல்பட்டு - கடற்கரை பகுதி விரைவு மின்சார ரயில்கள் பரங்கிமலையில் நின்று செல்லும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.கட்சி தலைவர்கள் வலியுறுத்தல்:

மின்சார ரயில் சேவை குறைக்கப்பட்டுள்ளதற்கு பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளதோடு, இதற்கு மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று ரயில்வே துறையை வலியுறுத்தியுள்ளனர்.

திமுக எம்.பி. கனிமொழி வெளியிட்டுள்ள செய்தியில், “சென்னை கடற்கரை - செங்கல்பட்டு வழித்தடத்தில் கடந்த சில நாட்களாக பயணிகள் ரயில் சேவை ரத்து செய்யப்பட்டு வருவதும், அதனால் பொதுமக்கள் மிகுந்த அவதிக்குள்ளாவதும் வேதனையளிக்கிறது. அன்றாடம் பணிக்குச் செல்வோர் தொடங்கி பள்ளி, கல்லூரி மாணவர்கள் வரை கடும் மன உளைச்சலுக்கு ஆளாக்கியுள்ளனர். வரும் வாரங்களில் 12-ம் வகுப்பு பொதுத் தேர்வுகள் தொடங்கவுள்ள நிலையில், தெற்கு ரயில்வே மெத்தனமாக செயல்படாமல் இப்பிரச்சினைக்கு விரைந்து தீர்வுகாண வேண்டும்” என்று கூறியுள்ளார்.இதேபோல் தமிழக காங்கிரஸ் தலைவர் கு.செல்வப்பெருந்தகை, தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் தி.வேல்முருகன், திமுக மாநிலங்களவை உறுப்பினர் பி.வில்சன், காங்கிரஸ் எம்.பி. மாணிக்கம் தாகூர், தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா, எஸ்டிபிஐ கட்சி தலைவர் நெல்லை முபாரக் உள்ளிட்டோரும், பயணிகளின் சிரமத்தைக் கருத்தில்கொண்டு ரயில்வே துறை மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

## புரிந்து கொள்



வானுக்கும் மண்ணுக்கும்
ஈர்ப்பு உண்டு
புரிதல் உண்டு
மனிதனுக்கு மட்டும்
அது ரகசியம் ..."

வானில் ஏற்படும்
எந்த தாக்கமும்
பூமியில் பாதிப்பு தரும் "

அதிக வெப்பம்
வறட்சி அதிக
மழை வெள்ளம்
முழு நிலவு
அலைகள் ஏற்றம்
...."

இடி தாக்குதல்
மின்னல்
நெருப்பு
கிரகணம் தாக்கம்
கருமேகம் இருள்
...."

அமாவாசை இருட்டு
நட்சத்திரம் இல்லா
வானம் ஏக்கம்
காற்றின் தாக்கம்
புயல் ....."

வானத்தின் எதிரொலி
பூமியில் பூமியின்
இயக்கம் வானில்
புரியாத புதிர்
மனிதனுக்கு மட்டும் .... "

இடையில்
மிதக்கும்
உயிரினம் காலப்பிடியில்
சங்கமம் ....."

இயற்கையின்
திருவிளையாட்டில்
மனிதனின்
வாழ்க்கை மட்டும்
பரமபதம் ...."

**- சீர்காழி.**
**ஆர். சீதாராமன்.**

## திருப்பம்

அது சென்னை தேசிய நெடுஞ்சாலை. இன்ஸ்பெக்டர் ரவி, போலீஸ் குழுவினருடன் பதட்டமாக நின்று கொண்டிருந்தார். அதற்கு காரணம்.சற்று முன் அவருக்கு வந்த ஒரு போன் கால்.
காலையில் போலீஸ் நிலையத்தில் முக்கிய சில கேஸ்களை பார்த்துக் கொண்டிருந்தார் ரவி, அப்போது ரிங்க் ரிக்கி என தொடர்ந்து போன் ஒலித்தது.
அதை எடுத்து, 'ஹலோ நான் இன்ஸ்பெக்டர் பேசறேன்.நீங்க யாரு..?'என்றார்
'சார்.நான் யாருங்கிறது இருக்கட்டும்.இப்ப நான் சொல்லப்போறது ஒரு முக்கியமான விஷயம் "
'சரி சொல்லு..என்ன மேட்டர் ? என ரவி பதட்டமாக கேட்டார்.மறு முனையில் பேசிய நபர்,
'சார். பத்து மணிக்கு சென்னை தேசிய நெடுஞ்சாலையில் ஒரு வேன் வரும்.அதில ஹவாலா பணம் வருது .
கல்யாணத்துக்கு போற மாதிரி பெண்களும் வருவாங்க விடாதீங்க,,இதோ நம்பரை நோட் பண்ணிக்குங்க..”என கூறிவிட்டு போனை துண்டித்து விட்டான்.
அடுத்த நிமிடமே ரவி தன் போலீஸ் படையுடன் இங்கே வந்து விட்டார்

--

”பாஸ் நம்ம 500 கோடி பணத்தை எப்படி கடத்தப் போறோம்னு சொல்லுங்க..நீங்க இப்படி அமைதியா இருக்கீங்க ...?பத்து மணிக்கு சென்னை போற நெடுஞ்சாலை பக்கத்தில் ஒரு ஆள் நிப்பார் .எப்படியாவது இந்த பணத்தை அவருகிட்ட கொடுக்கணும்.”-என்றான் அந்த கூட்டத்தை சேர்ந்த முனியப்பன் .
'ஒன்னும் கவலைப்படாதே. நாம போலீஸ் கவனத்தை திருப்பனும் "என்றார் பிரபல கடத்தல் மன்னன் ரத்தினம்.
'சரி சொல்லுங்க..உங்க பிளான் என்ன.?
'இப்ப நான் சொல்ற மாதிரி போலீஸ் ஸ்டேஷனுக்கு ஒரு போன் போடு. ”
'சரி பன்றேன்.அப்படி சொன்னா என்ன நடக்கும் ?;
”நாம சொல்ற மாதிரி ஒரு வேனை ரெடி பண்ணி ஆட்களை கல்யாண வீட்டுக்கு போற மாதிரி செட்டப் பண்ணு அவங்க கிட்ட போலி ரூபாய் நோட்டு கட்டுகளை கொடுத்து அனுப்பனும்.அவங்க போற கார் நம்பரையும் சொல்லு. போலீஸ் அதே நினைப்பில் இருப்பாங்க. அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நாம டு வீலர்ல அந்த வழியா தப்பிச்சிடனும் ..சரியா? எப்படி என் ஐ டி யா ?என்றார் ரத்தினம் .

-----------

சரியாக மணி 9.50 , அந்த வேன் மின்னல் வேகத்தில் வந்தது,செக் போஸ்டில் ரவி மற்றும் போலீஸ் படை
தயாரானது. நம்பரை சரிபார்த்த போலீசார் வேனை மறித்தனர். உள்ளே நுழைந்து பரபரப்பாக பின்னால் புல்லட்டில் ரத்தினமும் முனியப்பனும் .வந்தனர். அங்கே கூட்டமாக இருந்தது. நிறைய பேர் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். புல்லட்டை நிறுத்திய ரத்தினம், அங்கே நின்ற ஒருவரிடம் 'இங்கே என்ன இவ்வளவு கூட்டம் ?” என்றார்.
”சார் பல ஹவாலா பணம் பிடிபட்டு இருக்கு' என்றதும் 500 கோடி ரூபாயுடன் இருவரும் பறந்தனர்.





**எஸ்.ரவீந்திரன்**

# Boomer to Gen Z

பாகம் 20



**வி.பிரபாவதி**
**மடிப்பாக்கம்.**

ஹோமத்துடன் கூடிய திருமண வைபவம், மாங்கல்ய தாரணம் நடக்கப் போகிறது. எல்லோருக்கும் மங்கல அக்ஷதையும் புஷ்பமும் கொடுக்கப்பட்டது.

பெண்ணுக்கு முகூர்த்தப் புடவை ஓதியிட்டுக் கொடுக்கப்பட்டது. வாசு காலில் விழுந்து நமஸ்கரித்தாள் மாலு. பின்னர் நாத்தனாரும் சுந்தரியும் அவளை அழைத்துக் கொண்டு போய் அரக்கு மடிசாரில் அமர்க்களமாக அழைத்து வந்தார்கள்.
பஞ்சு ஐயருக்கும், பார்வதி பாட்டிக்கும் சந்தோஷம் அளவிட முடியாமல் இருந்தது. முகத்திலும் அப்பட்டமாகத் தெரிந்தது. மாமிகள், அத்தைகள், சித்தி, பெரியம்மாக்கள் என மடிசார்கள் பல வண்ணங்களில் மேடையில் மின்னியது.
இதோ மாலு வரதன் மடியில் அமர, சம்பிரதாயங்களை வாத்தியார் சொல்ல சொல்ல வாசு ஒவ்வொன்றாக செய்கிறான். வாசுவின் அருகாமை மாலுவுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. இன்னும் கொஞ்ச நேரத்தில் வாசுவும் மாலுவும் ஒருவருக்கொருவர் சொந்தமாகப் போகிறார்கள். ஈருடல் ஒருயிர் என்பார்களே அப்படித்தான்.
கோமளத்தின் கடைசி மாமா நேற்று ஒரு ஜானவாசத்தை முடித்துவிட்டு இன்று மருமாளின் பெண் கல்யாண முகூர்த்தத்திற்கு வந்திருக்கிறார்.
"வாங்கோ மாமா, என்ன இவ்ளோ லேட்டா வரேள்" கேட்டுக்கொண்டே வந்தாள் கோமதி.
"ஆட்டும் ஆட்டும், நீ காரியத்தைப் பாருமா, பஸ் கெடைக்கல. மாமா எங்க?"
"வாப்பா பிச்சுமணி, முன்னாடி வா, சௌக்யந்தானே?" என்று கேட்டவாறு பஞ்சு ஐயர் வந்து அழைத்துச் சென்றார்.

மாமிகளும், மாமாக்களும் மேடையில் ஏறுவதும் இறங்குவதும் ஒரே 'டம் டம்' சத்தம். பின்ன என்ன ஆகும்? பள்ளிக் கூடத்திலேந்து பெஞ்சுகளை எடுத்துவந்து மேடை தயாரிச்சாச்சு! யாரும் விழாம இருக்கணுமேன்னு ஸ்ரீஹரிக்கு கவலை.
"கெட்டி மேளம், கெட்டி மேளம் வாத்தியார் சொன்னதும், நாதஸ்வரம் விண்ணைப்பிளந்து ஒலித்தது.



மாங்கல்ய தாரணம், சப்தபதி, ஏழு அடிகள் வைத்து பிரமாணத்துடன், மச்சினன் பொரி போட, மாமி மெட்டி போட, அம்மி மிதித்து, அருந்ததி பாத்து கல்யாணம் களை கட்டியது. பாதிபேர் முதல் பந்திக்கு சூடா வடையோட சாப்பிட கிளம்பியாச்சு.
மாமாமார்கள், அத்தைமார்கள், மாப்பிள்ளைமார்கள் ஓதியிட்டுக் கொடுக்கும் பணத்தை ஸ்ரீஹரியின் நண்பன் சீமாச்சு ஒரு நோட்டு போட்டு எழுதிக் கொண்டு பணத்தை மஞ்சள் பையில் போட்டுக் கொண்டிருந்தான்.
சில உறவுகள் அடுக்கு செட், ஜோடித் தூக்கு, சம்படங்கள் என்று கோமளத்தைக் கட்டிக்கொண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்தாள் கல்யாணி. "வீடு வாசல், தோப்புத் தொரவுன்னு ஒன்னும் இல்ல கோமு எங்கிட்ட.
மனசார நீ மாலுவக் குடுத்துருக்க, எப்டி நன்றி சொல்றதுன்னு தெரில" கல்யாணி அழ ஆரம்பித்தாள்.
"ஐயோ அப்டில்லாம் இல்ல. எங்க எல்லாருக்கும் ரொம்ப சந்தோஷம். வாசுவுக்குப் பொண்ணக் குடுக்கக் கசக்குமா என்ன? இப்டில்லாம் பேசாதீங்கோ. கொழந்தைகளை மனசார ஆசிர்வாதம் பண்ணுங்கோ மொதல்ல" என்றாள் கோமளம்.
பொண்ணு மாப்பிள்ளைக்கு கோலத்தின் மேல் நுனி இலை போட்டு பரிமாறப்பட்டது. கலாய்த்துக் கொண்டும், சிரித்துக் கொண்டும், பெண்ணும் மாப்பிள்ளையும் வெட்கம் வழிந்தோட ஒருவருக்கொருவர் ஊட்டிக் கொள்வதுமாய் அமர்க்களப்பட்டது.
வாசுவின் ஆபீஸ் நண்பர்கள் நான்கு பேர் திருவையாறு ராமு சித்தப்பா வீட்டில் தங்கிக் கொண்டிருந்தார்கள். என்ன இருந்தாலும் ஓபன் டாய்லெட்டும், ஜமுக்காளப் படுக்கையும் யாருக்கும் கஷ்டமாகத் தெரியவில்லை. பம்ப்செட் குளியலும், பசுமையும், இயற்கைக் காற்றும், சுற்றத்தினரின் கலகலப்புப் பேச்சும் எல்லோரையும் திக்குமுக்காடச் செய்திருந்தது.
ஒவ்வொரு வேளையும் சாப்பாடும், டிபனும் அத்தனை பேரையும் ஒரு சுற்றுப் பருமனாக்கியது. நாக்கு நாலு முழம் நீண்டது என்றே சொல்ல வேண்டும். முகூர்த்தச் சாப்பாடு முடிந்து ஊருக்குக் கிளம்பியவர்களுக்கு பார்த்துப் பார்த்துத் தாம்பூலமும், பக்ஷணமும் கொடுத்தனுப்பினார்கள் கல்யாணியும் கோமளமும்.
சாய்ங்காலம் நலங்குக்கு எப்படி அமர்க்களப் படுத்தலாம் என்று சுந்தரி, சீமாச்சு, அவன் மனைவி சீதா, அனு என்று ஒரு பெரிய குழுவே ஒத்திகையே பார்த்துக் கொண்டிருந்தது. பரிசளித்துக் கொண்டிருந்தனர்.

தொடரும்...

# "ஒன்பதாம் இடத்தில் குரு"

ராஜா திடீரென்று விழித்துப் பார்த்தான். புதருக்கு அடியில் கிடந்தான். மெல்ல மெல்ல அவனுக்கு நினைவு வந்தது. நேற்று இரவு நடந்ததை நினைத்துப் பார்த்தான். வேலை முடிந்து சிவாவும் ,ராஜாவும் பஸ் ஸ்டாப்பில் ,பஸ் ஸுக்காக காத்துக் கொண்டு நின்றிருந்தார்கள். பக்கத்தில் ஒரு பழைய வீடு ரொம்ப நாளா பூட்டிக் கிடந்தது. காம்பவுண்டில் உள்ளே இருவர் பேசும் குரல் கேட்டது. ராஜா உடனே சுவற்றுக்கு அருகே சென்று ஒட்டுக் கேட்டான் .அதில் ஒருவன் அந்த புளிய மரத்தின் பின்னால் தான் புதையல் உள்ளது. அதை எப்படியாவது எடுத்து விட வேண்டும் என நான் ஆறு மாதமாய் முயற்சி செய்கிறேன்.ஆனால் எடுக்க முடியவில்லை. பஸ் ஸ்டாப் பக்கத்தில் உள்ளதால் மக்கள் நடமாட்டம் இரவு 10 மணி வரை உள்ளது. நாளை இரவு எப்படியாவது நாம் இதை எடுத்து விட வேண்டும் .இருட்டில் இடம் தெரியாது. நாளைக்கு அமாவாசை வேறு .ஆதலால் ஒரு குச்சியை இப்போது சொருகிவிடலாம் நடு இரவு வந்து நாம் தோண்டி புதையலை எடுத்துக் கொள்ளலாம் என்று திட்டம் போட்டனர் .இது ராஜாவின் காதில் விழுந்தது. ராஜா உடனே சிவாவிடம் சொல்லி அவர்களுக்கு முன் நாம் அந்த புதையலை எடுத்து விடலாம் என்றான். சிவாவும் சரி என்றான். அன்று இரவு 12 மணிக்கு இருவரும் வந்து மதில் சுவர் மீது ஏறி உள்ளே குதித்து, புளிய மரத்தின் அருகே குச்சி இருந்த இடத்தில் கொஞ்சம் ஆழமாக தோண்டியதும் டங்.. டங் என்று சத்தம் கேட்டது. கையில் தொட்டுப் பார்த்தார்கள் ஒரு சொம்பு இருந்தது. ஆர்வத்துடன் மீண்டும் பள்ளம் தோண்டி மண்ணிலிருந்து அதை எடுத்து பார்த்தார்கள். தகடால்மூடி இருந்தது அந்த மூடியை கல்லால் உடைத்தார்கள் .அதன் உள்ளே இன்னும் ஒரு சிறிய சொம்பு இருந்தது அதையும் உடைத்தார்கள். அதில் கொஞ்சம் பழைய காலத்து தங்க நாணயம் இருந்தது. இருவருக்கும் சந்தோஷம். ஆளுக்கு பாதி பிரித்து எடுத்துக் கொள்ளலாம் என்று பேசிக் கொண்டிருந்த சமயம், மேலே இருந்து புளிய மரத்தின் கிளை ஒன்று முறிந்து ராஜாவின் மேலே விழுந்தது. உடனே அவன் வலியால்,



அய்யோ !!அம்மா!! என்று கத்தினான். அப்பொழுது தான் 10 மணிக்கு வர வேண்டிய பஸ் லேட்டாக வந்து நின்றது .பஸ் லைட்டின் வெளிச்சத்தில் இவர்கள் உள்ளே இருப்பதை, பஸ்ஸில் இருந்தவர்கள் பார்த்து விட்டார்கள். திருடன்.. திருடன்.. என்று கத்திக் கொண்டே பஸ்ஸிலிருந்து சிலர் இறங்கி வந்து இவர்களைப் பிடிக்க வந்தனர். மாட்டிக்கொள்ள போகிறோமோ? என பயந்து ராஜா பின்பக்கமாக ஓடினான். அங்கிருந்த சுவர் மீது ஏறி குதித் தான் அங்கே புதர் ஒன்று இருந்தது. பயத்தினால் அங்கேயே ஒளிந்து கொண்டான். சிவா கையில் இருந்த தங்க காசை தன் சட்டையில் வைத்து கட்டி சுவற்றின் பின்னே தூக்கி வீசினான். இவன் ஏறுவதற்குள் ஊரார் இவனை பிடித்து அடி.. அடி ..என அடித்தார்கள். பின்னர் அவன் கையில் ஒன்றும் இல்லை என தெரிந்ததும் மிரட்டி விட்டு விட்டார்கள். அவனும் வலியுடன், வீட்டிற்கு விட்டால் போதும் என்று ஓடிவிட்டான். ராஜா பயத்தில் அப்படியே தூங்கிவிட்டான். இப்பொழுது காலையில் கண் முழித்தான் .அவன் அருகில் சிவாவின் சட்டை சுற்றி பந்து போல் இருப்பதை பார்த்தான். மெல்ல பிரித்துப் பார்த்தான். அதில் தங்க காசுகள் இருந்தது .அப்பொழுது தான் அவனுக்கு புரிந்தது .அந்த சட்டையை எடுத்துக் கொண்டு வேகமாக ஓடி வந்தான். காலையில் வரும் முதல் பஸ், அந்த பஸ் ஸ்டாப்பில் வந்து நின்றது .உடனே அதில் ஏறி வெளியூருக்கு சென்று விட்டான். இதுதான் "அகப்பட்டவனுக்கு அஷ்டமத்தில் சனி," "ஓடிப்போனவனுக்கு ஒன்பதாம் இடத்தில் குரு" என்பதா? முன்னோர்கள் சொன்னது சரி தானே.




- எம் .எல். பிரபா
ஆதம்பாக்கம். சென்னை 88

# தினம் ஒரு தலைவர்கள் ஆபித் ஹசன் சப்ரானி வரலாறு

ஆபித் ஹசன் சப்ரானி 11 ஜூன் 1911 – 5 ஏப்ரல் 1984) இந்திய தேசிய ராணுவத்தில் பணியாற்றிய ஒரு அதிகாரி ஆவார். நாடு சுதந்திரம் அடைந்த பிறகு இந்திய வெளியுறவு துறையின் மூலம் இந்திய தூதராக பல நாடுகளில் பணியாற்றினார்.


பிறப்பும் கல்வியும் ஹைதராபாத்தில் காலனித்துவ எதிர்ப்பு குடும்பத்தில் பிறந்த ஆபித் ஹசன், ஜெர்மனிக்கு சென்று பொறியாளராக பயிற்சி பெற்றார்.





இந்திய தேசிய இராணுவத்தில் இரண்டாம் உலகப் போர் நடைபெறத் துவங்கிய காலகட்டத்தில் ஜெர்மனியில் மாணவராக இருந்த ஆபித் ஹசன், அங்கிருந்த இந்தியக் கைதிகளிடம் உரையாற்றிய சுபாஷ் சந்திர போஸ்ஸின் பேச்சில் ஈர்க்கப்பட்டார். போஸை சந்தித்து சுதந்திர இந்தியப் படையணியில் சேர்ந்தார். போஸ் ஜெர்மனியில் இருந்து ஆதரவு திரட்டும்போது போஸின் தனிப்பட்ட செயலாளராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் பணியாற்றினார்.

ஜெர்மனியில் இருந்து 1943 இல் தென்கிழக்கு ஆசியாவிற்கு போஸ் மேற்கொண்ட பயணத்தில் (ஜெர்மன் யு-போட் யு -80) இல் போஸுடன் பயணம் செய்தார். இந்திய தேசிய இராணுவத்தில் (ஐ.என்.ஏ) பல்வேறு சீர்திருத்தங்களை மேற்கொண்டார். மேலும் தென்கிழக்கு ஆசிய அளவில் நேதாஜியின் பிரச்சாரங்களின் போதும் உடன் பயணித்தார், ஹசன் இந்திய தேசிய இராணுவத்தில் ஒரு மேஜராகவும் உயர்ந்தார். இச்சமயத்தில்தான் அவர் குங்குமப்பூவின் புனித இந்து நிறத்திற்குப் பிறகு "சஃப்ரானி" ஐ தனது பெயருக்கு வகுப்புவாத நல்லிணக்கத்தின்



அடையாளமாக ஏற்றுக்கொண்டார்.

ஜெய் ஹிந்த் வீரர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும் பொழுது அவரவர் மதத்தின் அடிப்படையில், இனத்தின் அடைப்படையில் வாழ்த்து கூறிவந்தனர். வீரர்கள் ஒன்றாக நின்று ஒருங்கிணைந்த இந்தியாவுக்காக போராட வேண்டும் அதற்கு பொதுவான ஒரு வார்த்தையை உருவாக்கும் பணியை ஆபிதிடம் போஸ் ஒப்படைத்தார். செண்பகராமன் பிள்ளை உருவாக்கிய இந்தியா வெல்க எனப் பொருள்படும் ஜெய் ஹிந்த் என்ற சொற்றொடரை இந்திய தேசிய இராணுவத்தினர் பயன்படுத்தப் பரிந்துரைத்தார்.

ஐஎன்ஏ வழக்குகள் இரண்டாம் உலகப் போரின் முடிவில் இந்திய தேசிய இராணுவ உறுப்பினர்கள் பலரும் கைது செய்யப்பட்டு ஐஎன்ஏ வழக்குகளின் கீழ் விசாரிக்கப்பட்டனர், ஆபிதும் விசாரணையின் முடிவில் விடுவிக்கப்பட்டு இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்பட்ட பின்னர், 1946 ஆம் ஆண்டில் இந்திய தேசிய காங்கிரசில் சேர்ந்தார்.

இந்திய தூதராக பிரிவினைக்குப் பிறகு, ஹசன் ஹைதராபாத்தில் குடியேறத் தேர்ந்தெடுத்து, புதிய இந்திய வெளியுறவு சேவையில் சேர்ந்தார். எகிப்து, டென்மார்க் உள்ளிட்ட பல நாடுகளின் இந்தியத் தூதராகப் பணியாற்றியுள்ளார்.

இறப்பு ஆபித் ஹசன் சஃப்ரானி 1984 இல் ஹைதராபாத்தில் இறந்தார்.

# காதலியை கரம்பிடித்தார் ராப் பாடகர் வேடன்



கேரளாவைச் சேர்ந்த பிரபல ராப் பாடகர் வேடன், தனது நீண்ட நாள் காதலியான எழுத்தாளர் நவமி லதாவை கரம் பிடித்தார்.

செம்புக்காவு சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து எளிமையான முறையில் இவர்கள் திருமணம் செய்து கொண்டனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இலங்கைத் தமிழரான தாய்க்கும் கேரளாவைச் சேர்ந்த முரளி என்பவருக்கும் திருச்சூரில் பிறந்தவர் ஹிரந்தாஸ் முரளி. இவரே பின்னணியில் வேடன் ஆனார்.

2020 கொரோனா காலத்தில், யூடியூபில் வெளிவந்த இவரின் முதல் ஆல்பம் பாடலான 'வாய்ஸ் ஆஃப் தி வாய்ஸ்லெஸ்' மூலம் கவனம் பெற்றார்.

"நான் பாணன் அல்ல; பறையன் அல்ல; புலையன் அல்ல..." என்று சாதி, மத அடக்குமுறைகளுக்கு எதிராக இப்பாடலில் அவர் பேசியிருந்தார். தொடர்ந்து சில படங்களிலும் பாடல்களை இவர் பாடியுள்ளார்.

'மஞ்ஞும்மல் பாய்ஸ்', 'ஆல் வி இமேஜின் அஸ் லைட்' உள்ளிட்ட புகழ் பெற்ற படங்களிலும் இவர் பாடியுள்ளார். திரைப்படங்களை தவிர்த்து சுயாதீன இசை ஆல்பங்களிலும் வேடன் கவனம் செலுத்தி வருகிறார்.



நடிகை ரம்பா 90களில் முக்கிய நடிகையாக இருந்தவர். அவர் திருமணத்திற்கு பிறகு சினிமாவில் இருந்து விலகி கனடாவில் செட்டில் ஆகிவிட்டார்.

தற்போது சின்னத்திரை நிகழ்ச்சிகளில் மட்டும் அவர் நடுவராக கலந்துகொண்டு வருகிறார். இந்நிலையில் ரம்பா விரைவில் படங்களிலும் மீண்டும் நடிக்க இருக்கிறார் என தகவல் வருகிறது.

தற்போது ரம்பா ட்ரெண்டி லுக்கில் வெளியிட்ட ஸ்டில்கள் ரசிகர்களை கவர்ந்து வருகிறது.

# எனக்கு ரஜினிகாந்த் படங்கள் மிகவும் பிடிக்கும் கேரள முதல்வர்






கேரள முதல்வர் பினராயி விஜயனை மலையாள சினிமாவின் முன்னணி நடிகரான மோகன்லால் நேர்காணல் செய்துள்ளார். முதலமைச்சரின் அதிகாரப்பூர்வ இல்லமான கிளிஃப் ஹவுஸில் இந்தச் சிறப்பு நேர்காணல் படமாக்கப்பட்டுள்ளது. இந்த நேர்காணலின் டீசர் நேற்று வெளியிடப்பட்டது. முழுமையான நேர்காணல் விரைவில் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகவுள்ளது.

இந்த நேர்காணலின் டீசரில் மோகன்லால் முதலமைச்சர் பினராயி விஜயனிடம் நீங்கள் பழைய நேர்காணல்களில் ரஜினிகாந்த் படங்கள் மிகவும் பிடிக்கும் என்று கூறியுள்ளீர்கள் என்று கேட்க, அதற்கு ஆம் என்று கூறிய பினராயி விஜயன், ரஜினிகாந்தின் ஆக்சன் படங்கள் தனக்கு மிகவும் பிடிக்கும் என்று கூறினார்.

# ஆர்யாவுடன் நடிக்க விருப்பமில்லை: நடிகை அபர்ணதி



சின்னத்திரையில் ஆர்யா கலந்துக் கொண்ட எங்க வீட்டு மாப்பிள்ளை நிகழ்ச்சியில் கலந்துக் கொண்டு கவனம் பெற்றவர் நடிகை அபர்ணதி. இதைத்தொடர்ந்து 'தேன்', 'ஜெயில்' போன்ற படங்களின் மூலம் ரசிகர்கள் மத்தியில் பிரபலமானார். இறுகப்பற்று திரைப்படத்தில் அபர்ணதியின் கதாபாத்திரம் பெரிய அளவில் பேசப்பட்டது.

இந்நிலையில், நடிகர் ஆர்யாவுடன் இணைந்து நடிக்க விருப்பமில்லை என்று அபர்ணதி வெளிப்படையாக தெரிவித்துள்ளார்.

அண்மையில் அவர் கொடுத்த பேட்டியில் இதுகுறித்து பேசிய அபர்ணதி, "நான் ஒரு ரியாலிட்டி ஷோவில் 100 நாட்கள் நடிகர் ஆர்யாவுடன் பயணம் பண்ணியிருக்கிறேன், நல்ல நினைவுகள் உள்ளது. அதனால் ஒரு Fake ஸ்டோரியை வைத்து ரொமான்ஸ் அல்லது தங்கை ரோல் பண்ணுவதற்கு விருப்பமில்லை. அதனால்தான் எனக்கு ஆர்யாவுடன் படம் பண்ண விருப்பமில்லை" என்று தெரிவித்தார்.



நடிகை துஷாரா விஜயன் தமிழ் சினிமாவில் வேகமாக வளர்ந்து வரும் நடிகைகளில் ஒருவர். ரஜினியின் வேட்டையன், தனுஷின் ராயன், விக்ரமின் வீர தீர சூரன் போன்ற பல படங்களில் அவர் நடித்திருக்கிறார். துஷாரா விஜயன் அவ்வப்போது இன்ஸ்டாவில் வெளியிடும் புகைப்படங்கள் ரசிகர்களை கவர்ந்து வருகின்றன. இன்ஸ்டாவில் அவருக்கு 1 மில்லியன் ரசிகர்கள் இருக்கிறார்கள். தற்போது துஷாரா அழகிய சேலையில் போஸ் கொடுத்து இருக்கும் புகைப்படங்கள் வெளியாகி ரசிகர்களை கவர்ந்து வருகின்றன. இதோ..


# நேரடியாக நெட்ஃபிளிக்ஸில் வெளியாகும் ப்ரியங்கா மோகனின் MADE IN KOREA!



பிரியங்கா மோகன் மற்றும் கொரிய நடிகை பார்க் ஹே-ஜின் ஆகியோர் முதன்மை வேடங்களில் நடித்துள்ள படம் Made in Korea. இப்படத்தை ஆர்.ஏ. கார்த்திக் இயக்கியுள்ளார்.

தமிழ்நாட்டின் கன்னியாகுமரியைச் சேர்ந்த ஒரு பெண் சிறுவயது முதல் கொரிய கலாச்சாரத்தின் மீது கொண்ட ஈர்ப்பால் தென்கொரியா செல்கிறார். அங்கு அவர் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அங்கு கிடைக்கும் நட்பு போன்றவற்றை அடிப்படையாக கொண்டு ஒரு ஃபீல்குட் மூவியாக உருவாகி உள்ளது.


சமீபத்தில் இப்படத்தின் டீசர் வெளியாகி கவனம் ஈர்த்தது. இந்நிலையில் இப்படம் நேரடியாக மார்ச் 12ஆம் தேதி நெட்ஃபிளிக்ஸ் தளத்தில் வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.


Happy Birthday
A.ADHARVA


Sanjay
Cell: 90032 64920
Real Choice
Retail & Wholesale Dealers In: Designer Sarees, Chudidhar, Laganga, Choli & Wedding Collection
#361, Mint Street, (Opp. New Jain Temple)
Sowcarpet, Chennai-600 079.
Real Choice Chennai Real Choice Chennai Real Choice Chennai


WANTED
MATRIMONY & EVENT ORGANISER EXPERIENCED
Managers: Age 35 yrs to 60 yrs. ( Female)
Qualf: Any. Exp : 10 yrs + Any.
Salary: Rs.20,000 to 30,000
Telecaller -Staff: (Female): -4 Nos
Qualf: +2 & Above with computer Knoweldge, fluent in Tamil & English.
Salry : RS.10,000
Call/wapp: 9438610756


Happy Birthday
J.ROSLIN


VINAYAGA ENTERPRISES
Repairing & Service Of :
A/C, Fridge, Washing Machine, Microwave
Mr.Karthik - Mob:9962116238
Address:- No. 10, Seniamman Koil Street, Tondiarpet, Chennai-600081


WANTED
FEMALE TELECALLER
EXP : FRESH / EXPERIENCED
SKILL : GOOD COMMUNICATION SKILL
LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
AGE : 18 YRS -60 YRS
SALARY – 10,000 & ABOVE
LOCATION : TIRUVATIYUR, CHENNAI
FOR PADMA MEDIA HOUSE
PadmaMedia House
Call/Whatsapp
94386 10756


Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM
CONTACT: 8122798599


WANTED
Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling Acrylic Laminates (Decorative for Interiors) in Tamil Nadu
Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling Metal Roofing for PEB Building in Tamil Nadu
ALP AEROFLEX INDIA PVT. LTD.
Contact details for Tamilnadu Location
Cell: 9884083322
Email: hari@alpoverseas.com


BUSINESS NEWS
DAILY ePAPER
DAILY ePAPER
SPORTS
TRAVEL GUIDE
EBOOK LIBRARY
TECH TRENDS
START YOUR OWN
EPAPER
WEBSITE TODAY!
CALL 7789941009
HEALTH & FITNESS
ENTERTAINMENT
TECH NEWS
TECH TRENDS
FOOD RECIPES


Wanted
REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக
நிருபர்கள் தேவை
PRESS
PRESS
பேப்பர்பாய்
8122664699


தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.
Quality Line Inspector
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diplomo/B.E
Final Quality Inspector
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI
VMC Machine operator
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma
Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE


TAMIL TELECALLER JOB FOR
WORK FROM HOME
ALL OVER TAMILNADU
APPLY NOW
7789951009
PRINT MEDIA, DIGITAL MEDIA SOCIAL MEDIA
DAILY & MONTHLY SALARY
SALARY STARING FROM
Rs. 10000/- onwards
Whatsapp: 7789951009


UNIVERSAL ENGINEERS CHENNAI PVT LTD
உடனடி வேலை வாய்ப்பு திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை நேரில் வரவும்
அலுமினிய வெல்டர் - 5 நபர்கள்
டிக் (TIG) வெல்டர் - 5 நபர்கள்
ஹெல்பர்கள் - 25 நபர்கள்
பெண்டிங் மிஷின் ஆப்பரேட்டர்
Press Brake,Laser ஆப்பரேட்டர்
Turret ஆப்பரேட்டர்
5 - 6 வருடம் அனுபவம் உள்ளவர்கள் தேவை.
No. 72, North Phase, Ambattur Industrial Estate,Chennai - 600098
hr.executive@universalengineers.in
Ph: 8925928971


அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
ஸ்ரீ ஹரி
ஜோதிட மையம்
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள் , ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம் , சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில்
ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம்
இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com




## "எதிர்பார்ப்பே ஏமாற்றத்தின் வாசல்!"

வான் தரும் மழை தவிர்,
வியர்வைத் துளியை நம்பு!

பிறர் கை உதவி தவிர்,
உன் தோள்பலம் நம்பு!

விதைக்கும் போதே
பலன் தேடாதே
விருட்சமே திணறும்!

பாதையை மட்டும்
பார்த்து நடக்க
பயணங்கள் சுமையாகும்!

வாய்ப்புக்குக் காத்திருப்பவன்
வறட்சியின் கைதியாகிறான்!

எதிர்பார்ப்பின்றி உழைப்பவன்
காலத்தின்
கலைஞனாகிறான்!

ஏமாற்றம் என்பதோர்
தோல்வியல்ல புரிந்திடு!

உன்னைநீ நம்பிடக்
கிடைத்தவோர் வாய்ப்பு!



எதிர்பார்ப்பைச்
சுட்டெரி
ஏற்றமுன்னைத்
தேடி வரும்!

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

1. நாம் ஆசைப்பட்டது
நம்மை ஏமாற்றும்
நம்மை ஆசைப்பட்டது
நம்மால் ஏமாறும்
நாம் ஆசைப்படாத
நம் மீதும் ஆசைப்படாத
ஒன்றோடு தான் நம்
வாழ்க்கை நகரும்

2. கழுதை படம் வைத்தால்
யோகம் வரும் என்று நம்பிய
நாம் தான் மரம் வைத்தால்
மழை வரும்
என்பதை நம்ப மறுக்கிறோம்

3.நேரம் எல்லாவற்றையும்
மாற்றும் என்று
காத்திருக்காதே
நீ மாறினால் நேரம் தானாக
மாறும்

4.அதிகம் பணம் வைத்து
இருப்பவர்களை பார்த்து
பொறாமைப்பட்ட காலம்
போய் ஆரோக்கியமாக
இருப்பவர்களை பார்த்து
பொறாமைப்படும் காலம் இது

5. ஏமாற்றுவதற்கு தான்
அறிவு
வேண்டுமே
தவிர
ஏமாறுவதற்கு
அன்பு ஒன்றே
போதும்



**நடேஷ்கன்னா**
கல்லிடைக்குறிச்சி

1. யார் சொல்வது சரி
என்பதை விட
எது சரி என்பதே முக்கியம்

2.என்னை வெறுப்பவர்களை
பற்றி எனக்கு கவலை
இல்லை ஏனென்றால் நான்
வாழ்வது அவர்களை
மகிழ்விக்க அல்ல

3. வாழ்க்கையில்
கஷ்டப்படாமல்
எதுவும் கிடைக்காது இது
பழமொழி கஷ்டப்பட்டாலும்
எதுவும் கிடைக்காது
இது புதுமொழி

4. நாணயம் கொஞ்சம்
அதிகமாக சோதிக்கிறது
மனிதனின் நாணயத்தை

5. நன்றாக தானே
இருக்கிறார்கள் என்று
யாரையும் எண்ணாதீர்கள்
ஏனெனில் வலிகள்
கண்களுக்கு தெரியாதவை

6. புரிதல் இல்லாத
இடங்களில் மௌனமே
சிறந்த மருந்து

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

## சுதந்திரம்

சுற்றும் பூமிக்கும்!
சுவாசிக்கும் காற்றுக்கும்!
வின்மீன்கூட்டத்திற்கும்!
வீசும்நிலஒளிக்கும்!
மெல்லியதென்றலுக்கும்!
தெள்ளியநீரோடைக்கும்!
துளிர்விடும் தளிருக்கும்!
பூக்கும் பூவுக்கும்!
தேன்தேடும்வண்டுக்கும்!
துள்ளும் மீனுக்கும்!
தாவும் மானுக்கும்!
தவழும் மழலைக்கும்!
சொல்லும் சொல்லுக்கும்!
சோர்வறியா உழைப்புக்கும்!
இருப்பது தான் சுதந்திரம்.!!!



அதில்
கிடைக்கும்
இன்பம்
நிரந்தரம்.

**கவிஞர் பொன். பனகல் பொன்னையா**

## ஆன்றோர்கள் சென்றவழி நடந்திடு.!

ஆன்றோர்கள் சென்றவழி
நடக்கணும்!
அடுத்துவரும் தலைமுறை
இதை உணரணும்.!

தோன்றில் இங்கு புகழோடு
தோன்றணும்! நாடு..
தூய்மையாக இந்த நாளில்
மாறணும்!

போர்மேகம் உலகை விட்டு
விலகணும்.! நம்
புகழ் காந்தி சென்றவழி
திருநாடு மாறணும்.!

தேர்மீது தமிழ் அன்னை
ஊர்வலமாய் போகணும்.!
இங்கே தெள்ளுதமிழ்
ஊரெங்கும்ஆறாகப்பாயணும்.!

பெரியவர்கள் சென்றவழி
இளைஞர்களும் செல்லணும்..
உரிய மரியாதையுடன்
ஆன்றோர் சொல்
வெல்லணும்.!

**வே.கல்யாண்குமார்.**

## வெற்றி உன் கையில்!



விதி என்று வெந்து சாகாதே!
விதி என்று ஒன்றும் கிடையாதே!
தோல்விக்குப் பயந்து வாய்ப்பை விடாதே!
துவண்டு விட்டால் வெற்றி கிடைக்காதே!
எடிசன் தோல்விக்குத் துவண்டு இருந்தால்
இருட்டாகவே இருந்திருக்கும் இந்த உலகம்
என்னால் முடியும் எதுவும் முடியும்
என்றே முயன்றால் இனிதே முடியும்!
சோம்பலை விடுத்துச் சுறுசுறுப்பை பெற்றிடுக!
அகந்தையை விடுத்து அன்பைப் பெற்றிடுக!
அச்சத்தை விடுத்துத் துணிவைப் பெற்றிடுக!
துன்பத்தை விடுத்து இன்பத்தைப் பெற்றிடுக!
தூக்கத்தை விடுத்து உழைப்பைப் பெருக்கிடுக!
வேகத்தை விடுத்து விவேகத்தைப் பெற்றிடுக!
வேதனையை விடுத்து வெற்றியைப் பெற்றிடுக
வெற்றி உன் கையில் என்பதை உணர்ந்திடுக!
வீணாய் அடுத்தவரைப் பழிப்பதை நிறுத்திடுக!

**கவிஞர் இரா.ரவி**

## லிமெரைக்கூ

கண்களுக்கு விருந்து சிலை
காண்போரை வியப்பில்
ஆழ்த்தி விடும்
சிற்பியின் நுட்பமான கலை!

குறுகியது இளையோர்
உள்ளம் இமயம் முதல் குமரி
வரை பெருகுது முதியோர்
இல்லம்!

நிகரற்ற உறவு அன்னை
உயிர் உள்ளவரை மறக்காதே
உயிராய் வளர்த்தாய் உன்னை.

## ஓ இளைஞனே !

விடியவில்லை என்றவனே
விடிந்தும் நீ
எழவில்லை
விழித்துப்பார் இளைஞனே
விடிந்தது விளங்கும்
கடிகார முள்ளைப்பார்
களைப்பின்றி
ஓடுவதைப் பார்
சோம்பேறித் தனத்தை
விடுத்து ஓய்வின்றி
உழைக்கப்பார் எதிர்
காலத்திற்குச் சேமிக்கும்
எறும்பின் சுறுசுறுப்பைப்பார்
மலர்களில் தேனை
எடுத்துச் சேமிக்கும்
தேனீயைப்பார்
சுறுசுறுப்பாக மாறிப்பார்.

**கவிஞர் இரா.ரவி**

## பாராட்டுங்கள்

ஓட்டப்பந்தயத்திற்கு
ஊன்றுகோலுடன்
வருபவனை
ஏளனம் செய்யாதீர்கள்
அவன் நம்பிக்கையை
பாராட்டுங்கள்

பாராட்டு என்பதுதான்
நமக்கு பழக்கப்படாத
ஒன்றாயிற்றே அது
பழமைவாதிகளின்
கூற்றுயென்று – நாம்
பழகிவிட்டோம்

கொடுத்தால்தான்
பெறமுடியும் பணம்
மட்டுமல்ல,,, மரியாதையும்,
பாராட்டும்கூட


பாராட்டுவது ஒரு
கலை – அது பலரிடம்
இல்லையென்பதே
இன்றைய நிலை.

**நாகை ஆசைத்தம்பி**
கோவை

இலை மறை– காய்மறையாக
இருப்பினும்–
இல்லாதுப்போன்ற

உணர்வு தாய்மை யிடமும்–
காதலிலும் தோற்கத்தான்
செய்யும்– மறைத்து

செய்ய அது என்ன–
ஊழலின் பத்திரமா???



இல்லவே
இல்லை–
அது என்
மனதின்
உரிமை!!!!

**பானுஸ்ரீ**
பாண்டிச்சேரி

## ஒன்றுப்படுவோம்

வண்ண,வண்ணமாய்
சோப்புகள் இருந்தாலும்
நுரை என்னவோ
வெள்ளையாகதான்
வருகிறது, பிறக்கும் இடமும்
புதைக்கும் இடமும்
எல்லோருக்கும் ஒன்னுதான்,,,
இடையில் ஏன்?
நிறங்களைமாற்றி
நிஜங்களை தொலைத்து
நிம்மதி
இழக்கிறோம்,,,?
ஒன்றுப்படு
வோம்
வென்று
வருவோம்.



**நாகை ஆசைத்தம்பி**
கோவை

## வாழ வேண்டும்

உழைப்பு உண்மையாகவும்..
எடுக்கும் முடிவு
உறுதி யாகவும்...
செய்த வேலை இன்றே
இறுதியாகவும் இருந்தால்
தோல்வி ஏதடா...!


செலவை சிக்கனமாகவும்..
சேமிப்பை சிறு சிறு
துளியாகவும்...கொடை
கொஞ்சம் கொடுத்து
வாழவும்..பல சாதனைகள்
படைத்து வாழலாம்....!

கடன் வாங்கி வாழ
வேண்டாம்... கண்ணியத்தை
தவற வேண்டாம்..
கடமையை இழக்க
வேண்டாம்... உயிரே
போனாலும் பொய்மை
நமக்கு வேண்டாம்....!



உழைப்பு
நாளை நம்
சங்கதி
களுக்கு...!!

**பொன். கருணா**
நவி மும்பை




## உல்லாச ஊஞ்சல்

நீ வந்து அமர்ந்து
ஆடுவதற்காகவே என்
இ த ய ம் உனக்குப் பிடித்த
உல்லாச ஊஞ்சலாகி
விட்டது!
நீ உன் கா த லை என்னிடம்
சொன்ன வினாடியில் நீ
ஊஞ்சலாட என் மனசை
உனக்கு அனுப்பி விட்டேன்!
அதுவும் அழகாகவே
உட்கார்ந்து கொண்டது!
உன் கை வளையல்
அளவான
உன் காதணியில்!
உன் ஜிமிக்கி கம்மல் போட்ட
ஆட்டத்தை ரசித்து நான்
எழுதி அனுப்பிய
கா த ல் க வி தை யை
ராணி இதழ் பதித்துக்
கொண்டு வழங்கிய
பரிசுப் பணத்தை என்
சட்டைப் பையும் கூட
ஓர் ஊஞ்சல் ஆட்டம்
போட்டது!
ஆக அப்பொழுதும்
இப்பொழுதும் எப்பொழுதும்
கா த ல் என்றாலே
உன்னையும் என்னையும்
உல்லாச ஊஞ்சலில் ஆட
வைக்கும்
என்பதே
மிக(வும்)
உண்மையான
உண்மை!



**முத்து ஆனந்த்**
வேலூர்




## தமிழா நீ பேசுவது தமிழா?

தமிழா நீ பேசுவது தமிழா? தமிங்கிலம் நீ பேசுவது அழகா?

உணவுக் கலப்படம் உடலுக்குக் கேடு
மொழிக் கலப்படம் மொழிக்குக் கேடு

என்ன வளம் இல்லை நம் தமிழ்மொழியில்
ஏன் கையை ஏந்த வேண்டும் பிறமொழியில்

தமிழைப் பிழையின்றித் தமிழாகவேப் பேசு
தமிழில் பிறமொழி கலந்து பேசக் கூசு

தொலைக்ககாட்சியில் தினமும் தமிழ்க்கொலை நடக்குது
தொல்லைக்காட்சி நிலை காண நெஞ்சம் கொதிக்குது

பத்துச் சொற்களில் இரு சொல் தமிழ்
பெயரோதமிழ் மாலை என விளம்பரங்கள்

தமிழா உன் அடையாளம் தமிழ்
தமிழ் சிதைந்தால் தமிழன் சிதைவான் உணர்

தமிழா உன் முகவரி தமிழ்
தமிழ் அழிந்தால் தமிழன் அழிவான் எழு

நமக்கென்ன என்று நீ இருந்து விட்டால்
நாளைய வரலாறு உன்னைப் பழிக்கும்

உலகின் முதன்மொழி தமிழ்மொழி
உலக மொழிகளின் தாய்மொழி தமிழ்மொழி

பிறமொழிகலந்து பேசுவதை விட்டுவிடு
பண்டைத் தமிழ்மொழிக் காத்திட நீ விழித்திடு

செம்மொழி நம் மொழி சிறப்பை உணர்ந்திடு.



## புவி வெப்பமயமாதலைத் தடுப்போம்

காந்தியத்தைக் கடைபிடித்தால் நலம் பயக்கும்
கைத்தொழில் பெருகுதல் வளம் சேர்க்கும்

மின்சார பயன்பாட்டை குறைத்திட வேண்டும்
மனித ஆற்றலைியே பெருமளவு பண்படுத்திட வேண்டும்

எரிபொருள் சிக்கனம் என்றைக்கும் வேண்டும்
எண்ணெய் வளம் வருங்காலத்திற்கும் வேண்டும்

மரம் வெட்டுதல் தடை செய்திட வேண்டும்
மரம் வளர்த்தல் கடமையாக்கிட வேண்டும்

சுற்றுச்சூழல் மாசு இன்றி காத்திட வேண்டும்
சுகாதாரமான காற்றை சுவாசித்திட வேண்டும்

இயற்கையை இயற்கையாக இருக்க விட வேண்டும்
இயற்கையை இல்லாமலாக்குவதை நிறுத்திட வேண்டும்

செயற்கையை முடிந்தளவு அகற்றிட வேண்டும்
செயல்கள் மனிதனால் நடந்திட வேண்டும்

விவசாய உற்பத்தியை பெருக்கிட வேண்டும்
விசம் கக்கும் தொழில்கள் நிறுத்திட வேண்டும்

இயற்கை உரங்களை பயன்படுத்திட வேண்டும்
இரசாயண உரங்களை தவிர்த்திட வேண்டும்

உடலுக்கும் உலகிற்கும் நலம் மிதிவண்டி
உலகம் செழிக்க குறைப்போம் விசைவண்டி

மகத்தானது மனித ஆற்றல் உணர்ந்திடுவோம்
மாசுக் கட்டுப்பாட்டிற்கு உதவிகள் புரிந்திடுவோம்

வெப்பமயமாதலைத் தடுக்க எல்லோரும் உதவிடுவோம்
வெப்பமாகும் செயல்களை உடன் நிறுத்திடுவோம்

எங்கும் இயந்திரமயமாதலை ஒழித்திட வேண்டும்
எங்கும் மனிதமயமாதலை வளர்த்திட வேண்டும்

நவீனமயமாதல் உடலுக்கு உலகிற்கும் கேடு பயக்கும்
நவீனத்தில் நல்லதை எடுத்து அல்லதை விட்டுவிடுவோம்

எப்போதும் துணிப்பை ஒன்று வைத்திருப்போம்
எங்கும் பிளாஸ்டிக் பை இல்லாது ஒழித்திடுவோம்

மக்காத குப்பையாகி மாசுபடுத்துகின்றது
மண்ணில் நீரை இறங்க விடாமல் தடுக்கின்றது

பாலித்தீன் பயன்பாட்டை உடன் குறைத்திடுவோம்
பாதிப்பு இல்லா உலகம் நாம் அமைத்திடுவோம்




முயன்றால் முடியாது எதுவுமில்லை உலகில்
முயன்றிடுவோம் யாவருமே வெப்பத்தைக் குறைக்க.

**கவிஞர் இரா.இரவி**

# நூல் விமரிசனம்

**எனக்கென்று ஒரு வானம் – ஆசிரியர் திரு. ரிஷபன் ஸ்ரீநிவாசன்.**




என்ன சொல்ல? சொற்கள் முட்டி மோதித் திணறுகின்றன.. முதலில் எந்த வார்த்தையைக் கொண்டு எழுத ஆரம்பிப்பது என.

குட்டிக்குட்டி வார்த்தைகளுடன் சின்னச் சின்னக் கவிதைகள். பெரிய கவிதைகள், மிக நீ..ண்..ட கவிதைகள்.

ஒன்று உன்னிப்பாக கவனிக்க வைக்கிறது.

ஒன்று சிலிர்க்க வைக்கிறது.

வியக்க, அதிர, புல்லரிக்க, சில திரும்பத் திரும்பப் படிக்க.. எனப் பலவிதமான உணர்வுகளையும் நம்முள் எழும்ப வைக்கின்றன.

அம்மாவைப் பற்றிய கவிதைகள்.. அவளைப்பற்றிய யதார்த்தத்தைக் கூறும் வரிகளை வாசித்துக் கடந்துபோக முடியாமல் கண்ணீர் மறைக்க.. ஸ்தம்பிக்க வைக்கின்றன அவள் போனபின்.. வாழ்வின் நிகழ்வுகளை வித்தியாசமாகச் சொல்ல விழைந்த அணுகுமுறை சிலாகிக்க வைக்கிறது. ரயில் பயணங்களில். ஜன்னலோரம்.. பேருந்துப் பயணங்கள்.. ஒரு பயணத்தில்.. விரல் நுனியைப் பற்றிக் கொண்ட குழந்தை.. அதன் தாய் இறங்கிப்போன பின்னரும் தொடரும் நினவுகள்..

அன்பு, பேரன்பு, உற்சாகம், சோகம், பாசம், நேசம், நட்பு, காதல், ஊடல், பிரிவில் ஏக்கம் என்று சில. ஒரு கவிதையில், நேசிக்கும் பெண்ணைப் பற்றிய நகைச்சுவை கலந்த விவரிப்புடன் எழுதிக் கொண்டு போனாலும்.. இறுதியில், அவளையும் அவள் நேசிப்பின் அருமையையும் எண்ணி ஏங்கும் மனவிளிம்பினைச் சொல்லும் அழகே தனிதான். நேசிக்கும் பெண்ணின் பிரிவிற்குப் பின்னர் ஏற்படும் துக்கமும் ஏக்கமும், மறுபடியும் அவள் அண்மையில் உணரும் நிம்மதியும், ஆஸ்வாசமும் எனக் கொடிகட்டிப் பறக்கிறது அன்பின் பூரணத்துவம்.

சின்னச் செடிகள், மரங்கள், பூக்கள், நதி, விழும் ஓர் இலை, கூழாங்கல், கண்ணெதிரே உலாவும் ஒரு வரி, வெய்யில் நசுங்கி விடாமல் பார்த்துப் பாதம் பதிக்கும் அழகு.. கூடவே வரும் தார்ச்சாலை, கவிதை, வானம், முத்தம், காய்ந்த புற்கள், ஊருணி, குழல், மயிற்பீலி, பீதாம்பரம், கூடு, பறவை, பெயர்களறியா மனிதர்கள், உலவும் தேவதை.. மனம், உணர்வுகள், மூளை..

என இப்பூவுலகில் உயிருள்ள, உயிரற்ற என்ற ஒன்றையுமே.. ஒன்றைக் கூட விட மனமின்றி, இறைவனின் படைப்பில் உள்ள அத்தனையையும், அத்தனைபேரையும்.. தொட்டுத் தொட்டுத் தொடர்ந்து, உன்னிப்பாய்க் கவனித்து.. அதிலேயெ ஊறி ஊறி எழுதியிருக்கிறார் மனிதர். வாசிப்பில் ஊன்றித் திளைத்தேன்.

*He love everything, every plant, birds, nests, animals, nature and every person between the beautiful earth and the wonderful sky.*

கடல்நீரைத் தொட்டச் சுட்டுவிரல் நுனியில் ஒட்டிய மணலளவுதான் சொல்லியிருக்கிறேன். பெருமகிழ்ச்சியுடன் நன்றிகளும் ரிஷபன்.

**நூல் விமரிசனம்**
**எழுதியவர்.. கீதாகண்ணன் ஸ்ரீரங்கம்**






## ஏழ்மையின் புன்னகை

மாட மாளிகைகள் இல்லை!
மனதில் பாரங்கள் இல்லை!
பஞ்சு மெத்தைகள் இல்லை!
தூக்கத்திற்கு
பஞ்சமுமில்லை!

கிழிந்த சட்டைச் சிறுவன்
கிடைத்த மிட்டாயில்
காண்கிறான்
கோடீஸ்வரன் காணும்
கோடிகளின் சந்தோஷத்தை!

பசிக்கு உணவில்லை
யெனினும் பகிர்ந்துண்ணப்
பாசமுண்டு!
இருட்டில் எரியும் அகலாய்
வறுமையிலும் வசந்தமுண்டு!

காசிருந்தால் கவலை வரும்
இல்லாவிடின் கவிதை வரும்!
ஏழ்மை என்பதோர்
குறைவல்ல
இருப்பதில்
வாழும்
நிறைவு!



முகில்
தினகரன்
கோயமுத்தூர்.




## மீராவின் கனா

ஆயர்பாடி வீதியிலே–
அயராமல் எழுவேன்
எண்ணமெல்லாம்
வண்ணமாகும்
ஹோலியன்று......
யுகங்கள் பல கடந்தும்,
என் நெஞ்சமோ, உன்னிடம்
தஞ்சம் தேடுகிறதே.!

உன் மடியினில் முடிவிலா
நொடிகள்...

அந்நொடி முதல், என்தாள்
தென்றல் தழுவி மிதக்க,
தன்தோளில் தோழியாய்
என்னை சுமந்து செல்வான்–
என் கண்ணன்..! –

நம்பிக்கையும், தூய்மையும்,
பேரன்பும் நிலைபெற்ற அந்த
மோட்ச தேசத்திற்குள்!
அன்றுதான்... நான்
உண்மையாகவே உயிர்
வாழ்வேன்! அதுவரை...
உன்
நினைவைச்
சுவாசித்து,
உனக்காகக்
காத்திருப்பேன்!



ஸ்ரீதேவி
கிருஷ்ணன்,
பெங்களூரு

சிக்கிமுக்கி கல்லாய் நீ..
தீப்பற்றிக் கொள்கிறேன்
உரசி !
ஒற்றைப் படி வைத்த
ஏணியைக்
கொண்டு வா..
எட்டிப் பிடிக்க
வேண்டும்
உன்னை..
சீக்கிரம் !



ரிஷபன்

## அடங்கும் மனம்

ஊசலாடும் ஊஞ்சலை
சமனம் செய்யும் ஒரு கால்
ஊன்றல்.. நிலைகொள்ளா
மனதிற்கு நங்கூரம்?
இதோ ஒரு உபாயம்!

ஆழிப்பேரலை அமைதி
கொள்ளும்! மின்னல் எனத்
தோன்றி,பின் மறையாது

கண் மூட வேண்டா!
கருத்து என்ன
ஒருமிக்க வேண்டா!
எண்ணங்களுக்குத்
தடையில்லை!

எண்ணங்களை வரவிடு!
எண்ணங்கள் வந்து
போகட்டும்! எண்ணங்கள்
வந்து போக; எண்ணங்கள்
நீர்த்துப் போகும்.
எண்ணங்கள் நீர்க்க; நீர்க்க;
மனம் அதுவாக அடங்கும்!

அடக்க முயலாமல் இரு!
எண்ணங்களுக்கு வடிகால்
கொடு! எண்ணங்கள்
வடிந்து,
மடிந்து
போகட்டும்!

இதுவே
சூக்கும
சூத்திரம்;
மனம் அடங்குதலுக்கு.



சசிகலா விஸ்வநாதன்

## தேசத்தைக் காத்தல் செய்!

அறுசீர் மண்டிலம்.

தேச நலனைக் காப்போம்
தெளிந்த வீரம் காப்போம்
நேசம் நாட்டில் வைப்போம்
நெஞ்சு நிமிர்த்தி வாழ்வோம்!
பாசம் பற்று வைப்போம்
பாங்காய் நாட்டைக்
காப்போம் ஆசை நாட்டில்
வைப்போம் அன்பில்
திகழ்ந்தே வாழ்வோம்!

பகையைக் கண்டே
அழிப்போம் பற்றை நாட்டில்
வைப்போம் தகவாய்
வளத்தைக் காப்போம்
தகவாய் நாட்டை வைப்போம்!
வகையாய் நலன்கள்
காப்போம் வண்ணக்
கொள்கை சேர்ப்போம்
அகமும் புறமும் கண்டு
அகிலம் புகழ வாழ்வோம்!

முனைவர்
இராம.வேதநாயகம்
திருவண்ணாமலை.

## சீறும் பாம்பு !.

பாம்பானது ஊர்ந்தபடியே
சென்றால் அதை கம்பால்
அடிக்க வருவதும் ...
சீறினால் பயந்து ஓடி
விடுவதும்.... பாம்பிற்கு
மட்டுமல்ல
மனிதனுக்கும்
பொருந்தவே
செய்கிறது !




எம்.பி.
தினேஷ்.
கோவை

## குறள்வெண் செந்துறை அருவி!

காணக் கண்ணுக்(கு)
இன்பமன்றோ
கண்டால் மகிழ்வின்
உச்சமன்றோ
காணக் கிடைக்கா
மகிழ்வன்றோ காலம் தந்த
கொடையன்றோ!

ஆறு போன்ற நீரோட்டம்
அழகாய்த் தோன்றி
மகிழ்வூட்டும் கூறும் அருவி
குதூகலமே குளித்து
மகிழ்ந்தே ஆடிடலாம்!

முனைவர்
இராம.வேதநாயகம்.



## "இயற்கை தந்த பரிசு"

பூமிதாயின் பச்சைபட்டாடை!
நிலமகளின் நிரந்தர
மேலாடை!
தமிழகத்தின் குறிச்சிபூவாடை!
கோடையே காணாத
குளுமையின்மேடை!
அது கொடைக்கானலின்
பசுஞ்சோலை.

மலைகளின் சங்கமம்!
மாசில்லா காற்றுதரும்
நறுமணம்! தூசிசில்லா நகரின்
பெருங்குணம்!
அது கொடைக்கானலின்
இளஞ்சோலை!!


ஏரிகளின் உறைவிடம்!
மலைஅழகின்
மகிழ்விடம்!
அருவிகளின் புகழிடம்!
ஆனந்தத்தின்
நிறைவிடம்!
அது கொடைக்கானலின்
குளிர்சோலை!!!

கண்ணில் பட்டதை
எல்லாம் ரசி! கையில்
பட்டது எல்லாம் ருசி!
அதை கொட்டிகொடுக்கும்
மலைகளின் அரசி
அது கொடைக்கானலின்
சுவைச்சோலை!

கண்ணுக்கு விருந்துவைத்து
மூலிகை மருந்துவைத்து!
சுவாசிக்க
சுத்தகாற்றைவைத்து!
சுற்றுலாத்தலமாய்
படைத்து வைத்து
எல்லோரும் சென்றுவர
இயற்கைதந்த பரிசு.



கவிஞர் பொன் பனகல்
பொன்னையா.



## நமக்குள் காதல் உண்டு

வாழ்க்கையில் வசந்தமுண்டு
வாழ்க்கை மாறுவதுண்டு
வாழ்க்கையெனும்
நாடகமுண்டு அதில் நீயும்
நானும் நடிப்பதுண்டு

என்னை நீ பார்ப்பதுண்டு
மௌனமாய் சிரிப்பதுண்டு
என் மனம் சிலிர்ப்பதுண்டு
ஏதோ நினைப்பதுண்டு

உனக்குள் நான் உண்டு
எனக்குள் நீ உண்டு நமக்குள்
காதல் உண்டு சொல்லத்
துடிப்பதுண்டு தன் மானம்
தடுப்பதுண்டு

நீ இல்லையென்று
சொல்வதுண்டு என் மனம்
நோவதுண்டு மௌனம்
உனக்குண்டு
மரணம்
எனக்குண்டு



எஸ்
சந்திரசேகரன்
அமுதா
செஞ்சிக்கோட்டை



## நிலை மாறணும்.!

வேலை அவனுக்கு இல்லை..
வீதியோரம் விழுந்தான்.!
காலை உணவுக்கும்
இல்லை..! கையேந்தியேக்
கிடந்தான்.!

பசியெனும் தீயை மூட்டிய
இறைவன் காணாமலே
இருந்தான்! பாதையின்
ஓரத்தில் பசியுடன்
இளைஞன்..
மயக்கத்திலே இருந்தான்.!

ஒருவேளை உணவுக்கு
வழியில்லை என்றால்..
ஏழை எங்கு போவான்.?
வருவதை யெல்லாம்..
வலுத்தவன் பறித்தான்!
ஏழைத் தெருவில் நின்றான்.!

மாறணும் மாறணும்..
வாழ்க்கை மாறணும்..!
ஏற்றத் தாழ்வு
இன்றி!
சேரணும்
சேரணும்..
ஓர் கொடி
சேரணும்..
நிலைமை மாற
வேண்டி!



வே.கல்யாண்குமார்.



மூன்றாம் பிறை நிலவம்மா
மூச்சு நின்று போனதம்மா!!
கல்லு நெஞ்சம் கூட
கண்ணீர் விட்டு
கலங்குதம்மா !! காற்றில்
கலந்த தேவதையை தான்
கண்ணு தான் தேடுதம்மா !!
சுக்கு சுக்கா உடைஞ்ச
மனசு சுப்பிரமணி
ஆனதம்மா !!
அவசரப்பட்டு உன்னுயிர்
எடுத்து கொண்ட
ஆண்டவனிடம்
உன்னுயிர்க்கு சாந்தியை
கொடுக்கணும்னு மன்றாடி
கேக்குறேனம்மா
மயில்ன்னு ஒரு
தேவதையம்மா–
இனி
சொர்க்கத்துல
வாழுமம்மா !!
அழகு



தேவதைக்கெல்லாம்
ஸ்ரீதேவின்னு உன் பேரு
தானம்மா !

லி.நௌஷாத் கான்

1. யார் சொல்வது சரி
என்பதை விட எது சரி
என்பதே முக்கியம்

2. என்னை
வெறுப்பவர்களை பற்றி
எனக்கு கவலை இல்லை
ஏனென்றால் நான் வாழ்வது
அவர்களை மகிழ்விக்க
அல்ல

3. வாழ்க்கையில்
கஷ்டப்படாமல் எதுவும்
கிடைக்காது இது பழமொழி
கஷ்டப்பட்டாலும் எதுவும்
கிடைக்காது இது புதுமொழி

4. நாணயம் கொஞ்சம்
அதிகமாக சோதிக்கிறது
மனிதனின் நாணயத்தை

5. நன்றாக தானே
இருக்கிறார்கள் என்று
யாரையும் எண்ணாதீர்கள்
ஏனெனில் வலிகள்
கண்களுக்கு தெரியாதவை

6. புரிதல்
இல்லாத
இடங்களில்
மௌனமே
சிறந்த மருந்து



நடேஷ்
கன்னா
கல்லிடைக்குறிச்சி

மிருங்கங்களே
மதங்களை
படித்தது போதும் கொஞ்சம்
பெரியாரை படியுங்கள்
மனிதமாவது மலரட்டும் !!!

தமிழின் தலைசிறந்த
வார்த்தை எதுவென்று
சொல்லுங்கள்?
அவளை வர்ணிக்க
வேண்டும் பிரமிப்போடு!

வண்ணத்துப்பூச்சியாய்
வாழ்வது வரமாக
தோன்றலாம் வண்ணத்து
பூச்சிக்கு மட்டுமே தெரியும்
அது சாபமென்று!

உன் ஜிமிக்கி காட்டிற்குள்
குழந்தையாய் மாறி
ஒளிந்து கொள்ள வேண்டும்!

லி.நௌஷாத் கான்

## தீயும் நீரும்

குளிர்ச்சியின் மடியில்
வெப்பத்தின் தாகம் !

நனைக்கத் துடிக்கும் ஒரு
துளி நீரும் !

சுவாசிக்கத் துடிக்கும் சிறு
நெருப்பும்!

ஒன்று விழுந்தால்
அணையும்!

மற்றொன்று எறிந்தால்
கரையும்!

நீரின் மென்மையும்
நெருப்பின் வன்மையும் ஒரே
புள்ளியில் சந்திப்பதில்லை !

ஒன்றில்லாமல் மற்றொன்று
இயங்குவதுமில்லை !

மேகம் கருக்கையில் மின்னல்
எனும் நெருப்பு !

மண்ணின் தாகம் தீர்க்க
மழை எனும் நீர் !

நீ துளியாக இருக்கும்போது
நான் சுடராய்கிறேன் !

உன் குளிர்ச்சி என்னைத்
தணிக்கிறது!
என் வெப்பம் உன்னை
ஆவியாக்குகிறது!

நெருப்பு இல்லையென்றால்
உடலில் சூடு இல்லை !
நீர் இல்லை என்றால் உயிரில்
ஈரம் இல்லை !

ஆயிரம் முறை எரியும்
நெருப்பைக் கூட ஒரு துளி
நீர் அடக்கி விடும்!

பணிவு எனும் குணத்தை
போல்!

ஆழமான நீரை கூட
அதிகமான வெப்பம்
ஆவியாக்கிவிடும் !

வைராக்கியம் எனும்
பிடிவாதத்தை போல் !

கோபம் எனும் நெருப்பை
அன்பு எனும் நீரால்
அணைக்க பழகு !

இங்கு வீரம் என்பது
எரிவதல்ல
ஈரம் என்பது கரைவதல்ல !

எங்கே அடைய வேண்டும்
எங்கே எரிய வேண்டும் !

என்பதை அறிவதே
வாழ்க்கை !

நீங்கள் இருவரும்
தனித்தனியா இருந்தால்
அழிவை தருவீர்கள் !

ஒரு எல்லைக்குள் நீங்கள்
இருவரும் இணைந்தால்
உலகிற்கு உணவும் உயிரும்
கிடைக்கும் !

அதிகபடியான மென்மை நீர்!
அதிகப்படியான கோபம்
நெருப்பு !

உடலிலே நீர்
ரத்தமாகவும்
உடலிலே
நெருப்பு
வெப்பமாகவும்
நம்மை வாழ
வைக்கிறது!



பெ.திருமுகம் மணமேல்குடி

## வாழ்வின் வசந்தம் உழைப்பின் திறமே

இந்த உலகம் இருண்டால்
என்ன காலையில் எப்படியும்
விடியத்தானே போகிறது.
உதிக்கின்ற சூரியனும்
உடனே உறங்கிட திரும்பாது
உரக்க குரல் கொடுக்குது,
செழுமை கொண்ட சேவல்.

ஊருகிற ஆரணியாய்
உருளுகிற தரணியாய்
உன்னையும் நீயே
உருட்டிக் கொண்டு ஓடு
அதில் உழைப்பையே
தினமும் போடு.

பார்த்துப் பார்த்து வளர்ந்த
பஞ்சமும் சரி உன்னுடன்
ஒட்டிப்பிறந்த பட்டினியும் சரி
வாழ்வின் எல்லைக்
கோடுகளாய் மாறிவிடாமல்
போவது என்னவோ
இந்த உழைப்பால் மட்டுமே.

கால் நெடுக்க நின்று,
கட்டாந்தரையில் படுத்து
உறங்கி வெயிலின்
உக்கிரத்தை வறுமையில்
மறந்து உழைப்பில் தன் சதை
கிழிந்ததை மறந்தும்கூட
அவர்களுக்காகவே உழைத்து
பெற்ற பிள்ளைகளின்
முகத்தில் சந்தோஷத்தை
பார்ப்பதை விட
வாழ்க்கையில் வசந்தம்
வேறு என்ன இருந்து
விடப்போகிறது.

பறக்கிற பறவை எல்லாம்
பகல் இரவு உறங்கினால்
பசி தாங்குமா குஞ்சு
குருவிகள் தேகம் தான்
சுருங்கினால் தாய் மனம்தான்
தாங்குமா. ஊரும் தெரியாது
பேரும் தெரியாது ஊரில்
உள்ள குருவிகள் எல்லாம்
பறந்தே செல்லுது. பட்டினி
போக்க விரைந்தே செல்லுது.

உழைப்பை அப்படி ஒன்றும்
பொத்தாம் பொதுவாக
சொல்லி விட முடியாது
இதுவும் ஊறுகாயைப்
போலத்தான் மூன்று
காலத்தையும் தன்
கையில்
கம்பீரமாக தக்க
வைத்திருக்கிறது.

தன் கையே தனக்கு
உதவியாம் தாய்க்கும்
தந்தைக்கும் மகனே
உதவியாம் வியர்வை
கலந்திட்ட
உன் உழைப்புக்கு
வெற்றியே விரித்திடும்
சிவப்புக் கம்பளம் எதிர்காலம்
அள்ளியே தந்திடும்
எப்படியும் ஒருநாள்
கௌரவச்சம்பளம்.

உருவம் இல்லாத இந்த
உழைப்புக்கு உருவம்
கொடுத்திடவே நாளும் நீ
உழைத்திட வேண்டும்.
நிலத்திலே நடந்தாலும்
நீரிலே நீந்தினாலும்
ஆகாயம் போல் அசுர
வளர்ச்சியை எட்டினாலும் கூட
இந்த உழைப்பை
நீ எப்போதுமே
எட்டிப்பார்த்திடவே வேண்டும்.

விதை என விதைத்திட்ட
போதும் வெளியே எட்டிப்
பார்த்திடாத விதைகள் யாவும்
மரம் என வளர்ந்திடாது
மக்கியே போகுது
மண்ணுக்குள்ளே.


உழைப்பில் பல கோடி
நித்தம் அதை தேடி
ஓடுகிறவன் எல்லாம்
இங்கு தினம்கோடி.

உழைப்பை மட்டுமே
ஊன்றுகோலாய் வைத்து
வாழ்க்கையில் நடந்து
செல்பவனுக்கு
இந்தக் காலம் மட்டுமல்ல
எல்லாக் காலமும் வசந்த
காலமே.

இப்படி வாழ்வின் வசந்தம்
என்று வரிசையாய்
வண்டிபிடித்து வந்து
அன்பின் பக்கம் அறிவு
நின்றாலும் பணத்தின்
பின்னால் அறமும் ஓடினாலும்
நித்தம் நித்தம்
உழைப்பவனுக்கு
வாழ்வின் வசந்தம் நிச்சயம்
வாசற்படியில்
வந்தேசேரும்
நல்ல ஒரு தென்றலை
ஒருநாள் அது தந்தேதீரும்
தந்தேதரும்.......



மை எழுத்து கனகராஜ்
கோயம்புத்தூர்



## தகைசால் தமிழர்..!

பெயர் சிலருக்குப்
பொருந்திப் போவதில்லை
100% பொருந்தியது
உனக்கு மட்டுமே
ஆம் நல்லகண்ணு நீ.

பொதுவுடமைவாதி நீ
பணம் பொருள்
அனைத்தையும்
பொதுவில் வைத்தாய்
பரிசாகப் பெற்ற
பெருந்தொகையும்
அதில் அடங்கும்.

நேர்மையாய் வாழ்ந்த
காமராஜர்
கக்கன் ஜீவாவை
கண்டதில்லை
நாங்கள் அத்தனை
நேர்மையாளரையும்
உன்னில் பார்த்தோம்
மொத்தமாய்.

யார் கொடுத்தாலும்
விருதை வாங்கும் உலகில்
வழங்குவோர் தகுதி பார்த்து
விருதை விலக்கிய
விந்தை மனிதர் நீ.

வாழ்நாள் முழுவதும்
பிறருக்காய் உழைத்தாய்
இறுதியாய் உன் உடலையும்
மாணவர் கல்விக்காய்
கொடுத்த
தகைசால் தமிழன் நீ.

எங்கள் தூத்துக்குடியில்
பிறந்த விலைமதிப்பற்ற
மூத்தே முன்னத்தி ஏர் உன்
வழியில்பின்னத்தி ஏராய்
தொடர்வேன்
அதுவே நான் உனக்குச்
செலுத்தும் அஞ்சலி !



ச.கிறிஸ்து ஞான
வள்ளுவன்
வேம்பார்.

## இளமை To முதுமை !

இளம் வயதில் குதூகலம் அடைந்தோம் !
பெற்றோர் அரவணைப்பில் பாதுகாப்பை உணர்ந்தோம் !

வளர்ந்த போது திருமண பந்தத்தில் ...
உறவுகள் பெரிதாயிற்று !

பிறப்பு, இறப்பு ,காது குத்து, கல்யாணம்..இத்யாதிகளில் கலந்து
கொள்ளா விடில் பந்தம் பகையாகிறது... !

உறவுகளை கைவிட்டால் உனக்கு யார் இருப்பர் என்றனர் !

தனிமையில் தான் இருக்கிறேன்...
இந்த முதுமையில்...
" கிழம் எப்ப சாகும் !'
என்ற எதிர்பார்ப்போடு உறவுகள் மட்டுமல்ல...



எம்.பி.தினேஷ்.
கோவை


FREE MARRIAGE INFORMATION CENTER :
இலவச திருமண தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


ADIYOGI
REAL ESTATE
WHOLESALE
VADACHENNAI CALL DRIVER
ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை
_CONTACT_
8939228901


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale
Residential / Commercial
Plots • Flats • House
Villa • Bungalows
Farm Land • Ware Houses
Factory Sites • Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call :7871617005


SEVEN STARS LOGISTICS PVT.LTD.
We Build Perfection
we simplify shipping for your business
IATA
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com


SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


அருள்தரும் தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..


LOW COST MATRIMONY WEBSITE
CALL: 7789951009


MLMPERFECT.COM
Start Any MLM Software @
Rs.499/Month
+ EMI Available
EMI
Trusted by 1000+ satisfied clients
Binary Plan
Matrix Plan
Level Plan
Generation Plan
Cryptocurrency MLM
9853719337/7436914247


WANTED EXPERIENCED SOCIAL MEDIA CONTENT CREATORS
94386 10756


We Are Urgently Hiring!
Marketing Manager
Ad Sales (Print Media)
Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai
Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager – Ad Sales to join our dynamic team.
Key responsibilities for Marketing Manager
• Minimum 5 years of experience in print media ad sales
• Proven experience in space selling
• Strong background in field sales and client acquisition
• Excellent communication and negotiation skills
• If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you
If you are interested
Do send your resume and portfolio to
padmamediapublications@gmail.com
Call: 9337501889
Package Rs. 4.8 LPA
ஆனந்த பாஸ்கர்
பேப்பர்பாய்
தெய்வம்
தமிழ்நாடு இ-பேப்பர்.காம்

முனீஸ்வர் துணை
RG
கங்கோதரி எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.

GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அனுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.

Sri Manjal Mart
YOUR DESIRE WE DELIVER
20% OFF
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

ADVERTISE WITH US!
CONTACT US
9337501889

THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale... Residential / Commercial...
* Plots
* Flats
* House
* Villa
* Bungalows
* Farm Land
* Ware Houses
* Factory Sites
* Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget => We Show Your Home
Call:7871617005

Just499
Pick Any Website
Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website
Real Estate Website
E. Commerce Website
Restaurant Website
Shopping Website
News Website
MLM Binary Website
MLM Level Website
MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009

WE'RE HIRING
TELECALLERS
SALARY STARTING FROM RS.20000/- ONWARDS
+91 7871617005

Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE

just499
REAL ESTATE SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009

Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Rs 8000 – Rs 15000 per month
Ananda Bhaskar
9337501889
7789941009

WANTED
experienced candidates in
AUTO CAD
Chennai / Coimbatore
minimum 3 years experience
Cell: 9363084990

ANY MLM PLAN
INR PLAN
RS.20000
CRYPTO PLAN
RS.30000
NO HIDDEN OR EXTRA CHARGES
SOURCE CODE AVAILABLE
CALL 9853719337 / 7436914247


WANTED
MARKETING HEAD
REAL ESTATE
Fixed Salary Rs.25000/-
& Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367

WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349

ஐஸ் கடை
வேலைக்கு ஆட்கள் தேவை (பெண்கள்)
10.00 - 7.00 மணி வரை
சௌகார்பேட்டை
9829571998



# பல்சுவை களஞ்சியம்




## சாக்லெட் கடைக்குள்



இந்தியரும் அமெரிக்கரும் ஒரு சாக்லெட் கடைக்குள் நுழைந்தனர். அனைவரும் பிஸியாக இருந்தநேரம் அமெரிக்கர் 3 சாக்லெட்பார்களை யாருக்கும்தெரியாமல் எடுத்து தனது பாக்கெட்டுக்குள் போட்டுக் கொண்டார். சிறிது நேரம் கழித்து இருவரும் கடைக்கு வெளியே வந்தனர். அமெரிக்கர் தான் யாருக்கும் தெரியாமல் எடுத்த 3 சாக்லெட் பார்களையும் தனது பாக்கெட்டிலிருந து வெளியே எடுத்து இந்தியரிடம் காட்டி, 'நாங்கெல்லாம் யாரு! அப்பவே நாங்க அப்படி..! பார்த்தியா யாருக்கும் தெரியாம 3 சாக்லெட் பார்களை எடுத்து கொண்டு வந்துட்டேன் பார்த்தியா?.. என்று பெருமை அடித்ததோடு மட்டுமில்லாமல் உன்னால இதைவிட பெரிசா ஏதாவது செய்ய முடியுமா? என்று சவால் வேறு விட்டார் இந்தியரிடம். விடுவாரா இந்தியர். '. உள்ள வா. உனக்கு உண்மை... திருட்டுன்னா என்னன்னு காட்டுறேன்னு சொல்லி அமெரிக்கரை சாக்லெட் கடையின் உள்ளே அழைத்துச் சென்றார். விற்பனை கவுன்டரில் இருந்த பையனிடம் சென்ற இந்தியர், அவனிடம் கேட்டார், வித்தை காட்டுறேன் பார்க்கிறியா?.. பையனும் சரியென்று தலையாட்ட கவுண்டரில் இருந்து 1 சாக்லெட் பார் எடுத்து, அதனை தின்று முடித்தார். அடுத்து இன்னொரு சாக்லெட் பார் எடுத்து அதனையும் தின்று தீர்த்தார். பிறகு 3வதாகஒரு சாக்லெட் பார் எடுத்து அதனையும் தின்று முடித்துவிட்டு கவுன்டரில் இருந்த பையனை ஏறிட்டுப்பார்த்தார். கவுன்டரில் இருந்த பையன் கேட்டான், ' எல்லாம் சரி. இதில் வித்தை எங்கே இருக்கிறது?.' இந்தியர் அமைதியாக பதில் அளித்தார்,' என் ஃப்ரெண்டோட பாக்கெட்ல செக் பண்ணிப்பாரு. நான் சாப்பிட்ட 3 சாக்லெட் பாரும் இருக்கும்.

# மீம்ஸ்

கல்யாணம் பண்ணிக்கிட்டா
நாத்தனார் சண்டைதான் வருது...



எவனுக்காவது மச்சினிச்சிக்கிட்ட
சண்டை வருதா...
யோசிக்கனும் மக்களே...




## இளமை என்பது..



ரொம்ப மெனக்கெட்டு
முன் வழுக்கையையும்
நரை முடிகளையும்
செப்பணிட்டு இளமையில்
கூட "இன்" பண்ணாத
நான் பூட்ஸ் கால்களுடன்
தான் எல்லாம் இடத்திற்கும்
சென்று வருவேன்..
சற்று தைரியம் வர
வைத்துக் கொள்ள. ..

இளம்பெண்கள் சற்று
திரும்பி பார்க்கையில் ஏதோ
இனம் புரியாத நிறைவு
வருவதாய் உணர்வேன்.
எல்லாம் அந்த ஒரு
நாளில் உடைந்து போனது

உடல் நலம் குன்றி
மருத்துவமனையில்
கலைந்து கிடந்த போது
,செவிலியர் என் கை பற்றி
"அப்பா உடல் நலம்
சரியாகிவிடும் தைரியமாக
இருங்கள் "என சொன்ன
போது...

வயதிற்கான மரியாதையில்
தான் உண்மையில்
இளமை என்பது இல்லாத
ஒன்று என்ற நிறைவு
வந்திருந்தது ..

**-ஜனனி அந்தோணி ராஜ்**
திருச்சிராப்பள்ளி

## விடுகதை



| | |
|---|---|
| பொட்டுப்போல் இலை இருக்கும், பொரிபோல் பூப் பூக்கும், தின்னக்காய் காய்க்கும், தின்னாப் பழம் பழுக்கும் அது என்ன? | முருங்கைமரம் |
| என்னைப் பார்க்க முடியும், ஆனால் எனக்கு எடை கிடையாது. என்னை ஒரு பாத்திரத்தில் போட்டால் அதன் அளவை குறைத்திடுவேன். நான் யார்? | துவாரம் |
| தொட்டு விட்டால் மூடிக் கொள்ளும் பச்சை மாளிகை ஜன்னல்கள் அது என்ன? | தொட்டா சுருங்கிச் செடி |
| அந்திவரும் நேரம், அவளும் வரும் நேரும் அது என்ன? | நிலா |
| பூமியிலே பிறக்கும், புகையாய்ப் போகும். அது என்ன? | பெட்ரோல் |



# ஜோக்ஸ்

எம்.டி. எதுக்கு அடுத்த வாரம் லீவு வேணும் உனக்கு?

ஊழியர்: எனக்கு கல்யாணம் சார்!

எம்.டி.: உனக்கு எந்த முட்டாப்பய பொண்ணு கொடுக்கறான்

ஊழியர்: என்ன சார் மறந்துட்டீங்களா? உங்கப் பொண்ணைத்தான் கல்யாணம் செஞ்சுக்கப்போறேன்!

=====================================

கிளாஸ்ல ஃபர்ஸ்ட் உங்க மகன் தான்ங்க! அப்படியா, ரொம்ப சந்தோஷம் சார்! நீங்க வேற... பெல் அடிச்சதும் அவன் தான் வகுப்பிலேருந்து முதல்ல வெளியேறுவான்.

=====================================

இரண்டு பள்ளி சிறுவர்கள் பேசிக்கொண்டது; நம்ம டீச்சருக்கு வர வர ஞாபக மறதி அதிகமாயிடுச்சுன்னு நினைக்கிறேன். எப்படிச் சொல்ற? பின்ன என்ன, அவங்களே போர்டில சிலப்பதிகாரம்னு எழுதிட்டு, நம்மகிட்ட சிலப்பதிகாரத்தை எழுதியது யார்னு கேட்கிறாங்க.



==========================================

ஆசிரியரும் மாணவனும் பேசிக்கொண்டது; நம்ம பள்ளியில் மொத்தம் 5 மாடிகள் இருக்கு. ஒவ்வொரு மாடிக்கும் 15 படிக்கட்டுகள் இருக்கு. ஐந்தாவது மாடிக்கு போகணும்னா எத்தனை படிக்கட்டுக்கள் ஏறணும் ? எல்லா படிக்கடையும் தான் ஏறணும் சார்!

==========================================

“எம்பிளாய்மெண்ட் ஆபிசிலே நீ பதியறதுக்கு, உன்னோட அப்பா, தாத்தாவையும் கூட்டிட்டு வந்திருக்கியே! ஏன்?”

“அப்பாவுக்குப் புதுப்பிக்கணும்... எங்க தாத்தாவுக்கு முதல் இண்டர்வியூ வந்திருக்கு!”



# வாங்க சம்பாதிக்கலாம்

## ரிசர்வ் வங்கியில் 650 உதவியாளர்கள் பணியிடங்கள்




நாடு தழுவிய இரண்டு கட்ட போட்டித் தேர்வு மூலம் நிரப்பப்பட உள்ள இந்த பணியிடங்களுக்கு தகுதியும் ஆர்வமும் உள்ள பட்டதாரி இளைஞர்களிடம் இருந்து வரும் மார்ச் 8 ஆம் தேதிக்குள் ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பணி: உதவியாளர்
காலியிடங்கள்: 650
சம்பளம்: மாதம் ரூ.58,514
தகுதி: 1.2.2026 தேதியின்படி ஏதாவதொரு துறையில் இளங்கலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.
வயது வரம்பு: 1.2.2026 தேதியின்படி 20 முதல் 28 வயதுக்குள் இருக்க வேண்டும். அதாவது 2.2.1998-க்கு முன்போ, 1.2.2006-க்கு பின்போ பிறந்தவர்களாக இருக்க கூடாது. அரசு விதிமுறைகளின்படி 3 முதல் 5 ஆண்டுகள் வயது தளர்வு வழங்கப்படும். மாற்றுத்திறன் பிரிவினர்களுக்கு 10 ஆண்டுகள் முதல் 15 ஆண்டுகள் வரை தளர்வு வழங்கப்படும்.

தேர்வு செய்யப்படும் முறை: முதல்நிலைத் தேர்வு, முதன்மைத் தேர்வு, அதைத் தொடர்ந்து மொழித் திறன் தேர்வு மூலம் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்படுவர். வினாத்தாள் ஆங்கிலம், ஹிந்தி மற்றும் தமிழில் அமைந்திருக்கும்.

தமிழ்நாட்டில் தேர்வு நடைபெறும் இடம்:
முதல்நிலைத் தேர்வு மையம்: சென்னை, கோவை, மதுரை, நாமக்கல், சேலம், திருச்சி, திருநெல்வேலி, வேலூர், ஈரோடு, விருதுநகர், நாகர்கோவில், கன்னியாகுமரி, திருவண்ணாமலை, திருப்பூர், தஞ்சாவூர், தர்மபுரி மற்றும் புதுச்சேரி

முதன்மைத் தேர்வு மையம்: சென்னை, கோவை, திருச்சி, திருநெல்வேலி, வேலூர், மதுரை, சேலம் மற்றும் புதுச்சேரி.

தேர்வு நடைபெறும் நாள்: தோராயமாக முதல்நிலைத் தேர்வு ஏப்ரல் 11, முதன்மைத் தேர்வு ஜூன் 7 ஆம் தேதி நடத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

விண்ணப்பக் கட்டணம்: எஸ்சி, எஸ்டி, முன்னாள் ராணுவத்தினர், மாற்றுத்திறன் பிரிவினருக்கு ரூ.50, இதர அனைத்து பிரிவினருக்கு ரூ.450. கட்டணத்தை ஆன்லைன் மூலம் செலுத்த வேண்டும்.

ஆன்லைனில் விண்ணப்பிக்கும் முறை: www.rbi.org.in என்ற அதிகாரப்பூர்வ இணையதளத்தின் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

ஆன்லைனில் விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள்: 8.3.2026

## பெட்ரோலியம் நிறுவனத்தில் வாய்ப்பு



பொதுத்துறையை சேர்ந்த ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் நிறுவனத்தில் (எச்.பி.சி.எல்.,) காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

'கிராஜுவேட் அப்ரெண்டிஸ்' பிரிவில் மஹாராஷ்டிரா 114, ஆந்திரா 62, கர்நாடகா 44, உ.பி., 40, ராஜஸ்தான் 39, மேற்கு வங்கம் 37, தமிழகம் 35 உட்பட மொத்தம் 612 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பி.இ., / பி.டெக்.,
வயது: 18-25 (2.3.2026ன் படி)
ஸ்டைபண்டு: மாதம் ரூ. 25,000
தேர்ச்சி முறை: சான்றிதழ் சரிபார்ப்பு
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
கடைசிநாள்: 2.3.2026
விவரங்களுக்கு: hindus tanpetroleum.com

## டில்லி அரசில் இன்ஜினியர் பணி



டில்லி அரசில் இன்ஜினியர் பணியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அசிஸ்டென்ட் செக்சன் ஆபிசர் 587, ஜூனியர் இன்ஜினியரிங் (சிவில்) 314, சட்ட உதவியாளர் 10 உட்பட மொத்தம் 911 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: டிப்ளமோ / பி.இ.,/ பி.டெக்., / பட்டப்படிப்பு / பி.எல்.,
வயது: 18-30 (25.3.2026ன் படி)
தேர்ச்சி முறை: ஸ்கில் தேர்வு, டிரேடு தேர்வு.

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 100. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.
கடைசிநாள்: 25.3.2026
விவரங்களுக்கு: dsssb.delhi.gov.in

## தாட்கோ சார்பில் அழகுக்கலை பயிற்சி



தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக்கழகம் சார்பில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த இளைஞர்கள் பயன்பெறும் வகையில் 3 மாதம் கொண்ட ஒப்பனை மற்றும் அழகுக்கலை பயிற்சி அளிக்கப்பட உள்ளதாக ஆட்சியர் மு.பிரதாப் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக்கழகம் (தாட்கோ) சார்பில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின சமூகத்தை சார்ந்த இளைஞர்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திறன் அடிப்படையிலான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. தனியார் நிறுவனம் மற்றும் தாட்கோ இணைந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு, ஒப்பனை மற்றும் அழகுக்கலை பயிற்சி வழங்கப்படவுள்ளது.

அந்த வகையில், இப்பயிற்சி பெற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சேர்ந்தவராக இருப்பது அவசியம். இப்பயிற்சிக்கு 8 மற்றும் பிளஸ் 2 வரையில் படித்தவராக இருக்க வேண்டும். மேலும், 18 முதல் 35 வயது வரைவும், குடும்ப வருமானம் ஆண்டுக்கு ரூ. 3 லட்சத்துக்குள் இருக்க வேண்டும்.

பயிற்சிக்கான கால அளவு 90 நாள்கள் ஆகும். மேலும், இப்பயிற்சி ராணிப்பேட்டை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் நடைப்பெறவுள்ளது. இங்கு தங்கு வசதிகள், உணவுகள் உள்பட அதற்கான செலவினத் தொகை தாட்கோவால் ஏற்கப்படும்.

பயிற்சி நிறைவு செய்தவுடன் தகுதியான நபர்களை பயிற்சி அளிக்கும் நிறுவனத்தின் மூலமாக தேர்வு செய்து அந்த நிறுவனத்தின் மூலம் மாத ஊதியமாக ரூ.18,000முதல் ரூ.25,000 வரைவுடன் வேலைவாய்ப்பு ஏற்படுத்தி தரப்படும்.

இப்பயிற்சியில் சேருவதற்கு தகுதியான நபர்கள் தாட்கோ இணையதளம் (www.tahdco.com) என்ற முகவரியில் பதிவு செய்து பயன்பெறலாம்.



## ஐடி துறை வீழ்ச்சி எதிரொலி: பங்குச் சந்தை 1% வரை சரிவு!




மும்பை: ஏஐ தாக்கத்தால் ஏற்படும் தொழில்நுட்ப பங்குகளில் பலவீனத்தின் போக்கு தொடரும் நிலையில், இன்றைய ஆரம்ப வர்த்தகத்தில் சென்செக்ஸ் மற்றும் நிஃப்டி குறியீடுகள் கிட்டத்தட்ட 1 சதவீதம் வரை சரிந்தன.

ஏஐ குறித்த இடையூறுகள் அதிகரிக்கும் என்ற அச்சத்தின் பிடியில் ஐடி பங்குகளை முதலீட்டாளர்கள் தொடர்ந்து விற்பனை செய்ததால் சரிந்து முடிவடைந்த இந்திய பங்குச் சந்தை.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் சமீபத்திய வரிவிதிப்புக் கருத்துக்களுக்குப் பிறகு, கச்சா எண்ணெய் விலை உயர்வு மற்றும் உலகளாவிய வர்த்தகம் குறித்த கவலைகள் உள்ளிட்டவை முதலீட்டாளர்களை வெகுவாக பாதித்ததாக வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

இன்றைய ஆரம்ப வர்த்தகத்தில், சென்செக்ஸ் 813.13 புள்ளிகள் சரிந்து 82,481.53 ஆக இருந்தது. வர்த்தக முடிவில், 30 பங்குகளைக் கொண்ட சென்செக்ஸ் 1,068.74 புள்ளிகள் சரிந்து 82,225.92 புள்ளிகளாகவும், 50 பங்குகளைக் கொண்ட நிஃப்டி 288.35 புள்ளிகள் சரிந்து 25,424.65 ஆக நிலைபெற்றது.

இதற்கிடையில், அமெரிக்க அதிபர் டிரம்ப் இன்று தெரிவிக்க உள்ள செய்தியை அடுத்து, உலகளவில் உள்ள பங்குச் சந்தை வர்த்தகர்களால் இது உன்னிப்பாகக் கவனிக்கப்படும் என்று பங்கு வா்த்தகத் தரகு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

சென்செக்ஸில் இன்று அதிகபட்சமாக எடர்னல் பங்குகள் 3.82 சதவீதம் சரிந்தன. அதைத் தொடர்ந்து எச்.சி.எல். டெக்னாலஜிஸ், இன்ஃபோசிஸ், டெக் மஹிந்திரா, டாடா கன்சல்டன்சி சர்வீசஸ், பாரதி ஏர்டெல், பஜாஜ் ஃபைனான்ஸ், பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட், டிரென்ட், அதானி போர்ட்ஸ், ஐடிசி மற்றும் டைட்டன் உள்ளிட்ட பங்குகள் சரிந்தன. மறுபுறம் ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா, ஆக்சிஸ் வங்கி, பவர் கிரிட், ஏசியன் பெயிண்ட்ஸ், கோடக் மஹிந்திரா வங்கி மற்றும் டாடா ஸ்டீல் ஆகிய பங்குகள் உயர்ந்தன.

நிஃப்டி-யில் டெக் மஹிந்திரா, எடர்னல், இன்ஃபோசிஸ், டிசிஎஸ், எச்சிஎல் டெக்னாலஜிஸ் சரிந்த நிலையில் எச்யுஎல், ஹிண்டால்கோ இண்டஸ்ட்ரீஸ், கோல் இந்தியா, என்டிபிசி, ஜேஎஸ்டபிள்யூ ஸ்டீல் உள்ளிட்ட பங்குகள் உயர்ந்தன.

துறைவாரியாக ஐடி குறியீடு 4 சதவீதமும், ரியல் எஸ்டேட் குறியீடு 2 சதவீதத்திற்கும் அதிகமாக சரிந்தன. இருப்பினும் உலோகம், மருந்து, பொதுத்துறை வங்கி, எண்ணெய் & எரிவாயு, எரிசக்தி உள்ளிட்ட பங்குகள் 0.3 முதல் 1% வரை உயர்ந்தன.

அமெரிக்க உச்ச நீதிமன்ற தீர்ப்பைத் தொடர்ந்து கட்டண மாற்றங்கள் மற்றும் ஒப்பந்தங்களிலிருந்து பின்வாங்கும் நாடுகளுக்கு டிரம்ப் எச்சரிக்கையின் பின்னணியில், அமெரிக்காவுடனான ஒப்பந்தத்தை ஐரோப்பிய ஒன்றியம் முடக்கியது.

தரவுகளின் அடிப்படையில், வெளிநாட்டு நிறுவன முதலீட்டாளர்கள் நேற்று (திங்கள்கிழமை) ரூ.3,483.70 கோடி மதிப்புள்ள பங்குகளை வாங்கியுள்ளனர். அதே நேரத்தில் உள்நாட்டு நிறுவன முதலீட்டாளர்கள் ரூ.1,292.24 கோடி மதிப்புள்ள பங்குகளை விற்பனை செய்துள்ளனர்.

ஆசிய சந்தைகளில், தென் கொரியா கோஸ்பி, ஷாங்காயின் எஸ்எஸ்இ காம்போசிட் குறியீடு மற்றும் ஜப்பான் நிக்கி 225 உள்ளிட்டவை உயர்ந்தன. அதே நேரத்தில் ஹாங்காங் ஹாங் செங் சரிந்தன. அமெரிக்க பங்குச் சந்தை நேற்று கிட்டத்தட்ட 2 சதவீதம் வரை சரிந்தன.

உலகளாவிய பிரெண்ட் கச்சா எண்ணெய் பீப்பாய்க்கு ஒன்றுக்கு 1 சதவீதம் உயர்ந்து $72.13 ஆக உள்ளது.




இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்



whatsapp No
8122664699

## செய்யாறில் முன்னாள் அமைச்சர் முக்கூர் சுப்பிரமணியன் நலத் திட்ட உதவிகளை வழங்கினார்



**செய்யாறு,பிப். 26:** செய்யாறில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 78வது பிறந்தநாள் விழாயொட்டி பொது மக்களுக்கு வேட்டி - சேலை உள்ளிட்ட நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு ஆதிபராசக்தி கோவில் அருகில் முன்னாள் அமைச்சர் முக்கூர் சுப்பிரமணியன் அ.தி.மு.க., சார்பில் மறைந்த முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெயலலிதாவின் 78வது பிறந்தநாள் விழா முன்னிட்டு, அலங்கரிக்கப்பட்ட ஜெயலலிதாவின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். பின்னர் பொது மக்களுக்கு வேட்டி - சேலை வழங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து நிகழ்ச்சிக்கு வந்திருந்த பொது மக்கள் அனைவருக்கும் முன்னாள் அமைச்சர் முக்கூர் சுப்பிரமணியன் அன்னதானம் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கிளைக் கழக செயலாளர்கள் அசோகன், பச்சையப்பன், மாவட்ட அம்மா பேரவை தலைவர் தசரதன், மாவட்ட வர்த்தக அணி துணைத் தலைவர் எஸ்.ஜே.கமலாகரண் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### வாக்கு எண்ணும் மையத்தை கலெக்டர் ஆய்வு



கிருஷ்ணகிரி அரசு பல்தொழில்நுட்ப கல்லூரியில் 6 சட்டமன்ற தொகுதிகளுக்கு அமைக்கப்படவுள்ள வாக்கு எண்ணும் மையத்தை கலெக்டர் தினேஷ் குமார் ஆய்வு செய்தார்.

### மணிமேகலை விருது



திருவாரூர் மாவட்டத்தில் 2024-25-ம் ஆண்டுக்கு மணிமேகலை விருதுக்குத் தேர்வு செய்யப்பட்ட மகளிர் சுய உதவிக் குழு கூட்டமைப்புகளுக்கு, கலெக்டர் மோகனசந்திரன் நேற்று கேடயம், பரிசுத் தொகை, பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

### பெண்கள் பொங்கல் வைத்து வழிபட்டனர்



சேலம் நெத்திமேடு தண்ணீர் பந்தல் காளியம்மன் கோயில் மாசி திருவிழாவில் நேற்று பெண்கள் பொங்கல் வைத்து வழிபட்டனர்.

### கலைஞர் திருமண மண்டபம் திறப்பு



மேல்மலையனூர் ஒன்றியம் வளத்தியில் ரூ.45 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட கலைஞர் திருமண மண்டபத்தை செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ திறந்து வைத்தார்.

### நலத்திட்ட உதவி



திருவொற்றியூர்பெரியார் நகரில் ஜெயலலிதா பிறந்தநாள் விழாவில் கவுன்சிலர் கார்த்திக் ஏற்பாட்டில் நலத்திட்ட உதவிகளை முன்னாள் அமைச்சர் மாதவரம்மூர்த்தி, முன்னாள் எம்எல்ஏ குப்பன் வழங்கினர்.

### பாஜக தெருமுனைப் பிரச்சார கூட்டம்



சின்னதாராபுரம் பகுதியில் பாஜக தெருமுனைப் பிரச்சார கூட்டத்தில் முன்னாள் தலைவர் அண்ணாமலை பேசினார்.

### நிர்மலா சீதாராமன்வானதிசீனிவாசன் சந்திப்பு



டெல்லியில் மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமனை வானதிசீனிவாசன் எம்எல்ஏ நேற்று சந்தித்துப் பேசினார்.

### பெண்கள் காலி குடங்களுடன் ஆர்ப்பாட்டம்



கடலாடி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் குடிநீர் கேட்டு பெண்கள் காலி குடங்களுடன் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

### பொன்னப்ப நாடார் திருவுருவ சிலை முதல்வர் ஸ்டாலின் திறந்தார்



சுதந்திரப் போராட்ட வீரர் குமரி கோமேதகம் என்று அழைக்கப்படும் பொன்னப்ப நாடாருக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ 50 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட திருவுருவ சிலையை முதல்வர் ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார். உடன் அமைச்சர் மனோதங்கராஜ், மேயர் மகேஷ், உணவு ஆணையத் தலைவர்சுரேஷ்ராஜன், விஜய் வசந்த் எம்.பி., எம்எல்ஏக்கள் ராஜேஷ்குமார், பிரின்ஸ், தாரகை கத்பர்ட் உள்ளனர்.

### மரியாதை நிமித்த சந்திப்பு




சென்னை கமலாலயத்தில் பாஜக மாநிலத் தலைவர் நயினார்நாகேந்திரனை நடிகர் செந்தில் மரியாதை நிமித்தமாக சந்தித்து உரையாடினார். அருகில் மத்திய மந்திரி முருகன்.

### ஆலோசனைக் கூட்டம்



தேர்தல் நடைமுறை காலங்களில் நன்னடத்தை விதிகளை பின்பற்றுதல் தொடர்பாக முன்னேற்பாடு பணிகள் குறித்து தேனியில் கலெக்டர் ரஞ்சித்சிங் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடந்தது.

### மாற்றுத்திறனாளிகளுக்கு பெட்ரோல் ஸ்கூட்டரை வழங்கிய முதல்வர்



நாகர்கோவிலில் நேற்று நடந்த அரசு விழாவில், குமரி மாவட்டத்தில் 3,12,082 பேருக்கு ரூ.858 கோடியே 92 லட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகளை முதல்வர் ஸ்டாலின் நேற்று வழங்கினார். மாற்றுத்திறனாளிகளுக்கு பெட்ரோல் ஸ்கூட்டரை வழங்கிய முதல்வர், நலம் விசாரித்தார்.

### அதிமுக கிழக்கு மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்



திண்டுக்கல்லில் அதிமுக கிழக்கு மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் நத்தம் விஸ்வநாதன் பேசினார்.

### கைத்தறி பூங்கா



பரமக்குடியில் கைத்தறிதுறை மூலம் சிறிய அளவிலான கைத்தறி பூங்காவை அமைச்சர் காந்தி தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

### மாசித் திருவிழா தேரோட்டம்



பழனி மாரியம்மன் கோயில் மாசித் திருவிழா தேரோட்டம் நேற்று நடந்தது.

### மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி சிலை



குமரி மாவட்டம் கல்லடிவிளையில் மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி சிலையை முதலமைச்சர் ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார்.

### ரவுசு மணி

வாழ்க்கை நேர்மையாக உள்ளவனை அழ வைக்கிறது ....
நேரத்திற்கு தகுந்தாற் போல் மாற்றிப் பேசுபவனை வாழ வைக்கிறது...



V. முத்து ராமகிருஷ்ணன்

### பொது தேர்வு முன்னிட்டு பள்ளி மாணவர்களுக்கு பூஜை செய்யப்பட்ட எழுதுகோல் வழங்கும் விழா



திருவண்ணாமலை சண்முகா தொழிற்சாலை அரசினர் மேல்நிலைப்பள்ளியில் 10-ஆம் வகுப்பு, 12ஆம் வகுப்பு அரசு தேர்வு எழுதும் மாணவ, மாணவிகளுக்கு அதிக மதிப்பெண்கள் பெற திருவண்ணாமலை சத்திய தர்மசாலை அறக்கட்டளை நிர்வாகிகள் திரு. சங்கர் அவர்கள், திரு. சத்தியவேல் அவர்கள்,திரு.தினச்சந்திரன் அவர்கள், திரு. குணசேகரன் அவர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியைகள் மாணவ, மாணவிகள் பள்ளியில் நடைபெற்ற எழுதுகோல் வழங்கும் விழாவில் கலந்துகொண்டு அனைத்து மாணவ, மாணவிகளுக்கு அதிக மதிப்பெண்கள் பெற வள்ளலார் பூஜை செய்யப்பட்ட எழுதுகோல் 350 பேனாக்கள் வழங்கினார்கள். விழாவில் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

### ஸ்ரீகாமாட்சி அம்பாள் கோயிலில் யாக வேள்வி பூஜை



**செய்யாறு பிப் .26:** செய்யாறு அடுத்த உக்கல் அருள்மிகு மடாவளம்ஸ்ரீகாமாட்சி அம்பாள் கோயிலில் நேற்று சிறப்பு யாக வேள்வி பூஜை நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து கலச புறப்பாடு நடைபெற்றது .பின்னர் மூலவரான ஸ்ரீகாமாட்சி அம்பாளுக்கு சிறப்பு அபிஷேகம், ஆராதனை நடைபெற்றது. திரளான பக்தர்கள் கலந்து கொண்டு ஸ்வாமி தரிசனம் செய்தனர். முன்னதாக பக்தர்களுக்கு கோயில் நிர்வாகம் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது.



மதுரையில் அதிமுக அலுவலகத்தில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூ பேசினார்.

### பாஜக சக்திகேந்திர தெருமுனை கூட்டம்



கொடுமுடி கிழக்கு ஒன்றியத்தில் பாஜக சக்திகேந்திர தெருமுனை கூட்டத்தில் சரஸ்வதி எம்எல்ஏ பேசினார்.

# 60 லட்சம் லிட்டர் கலப்பட நெய்யில் 20 கோடி லட்டு: ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு குற்றச்சாட்டு

**அமராவதி, பிப்.26:** திருப்பதி தேவஸ்தானத்தில் கடந்த ஆட்சியில் 60 லட்சம் லிட்டர் நெய்யில் கலப்படம் செய்து 20 கோடி லட்டு பிரசாதங்களை விநியோகம் செய்ததாக ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு குற்றம்சாட்டினார்.

ஆந்திர பேரவையில் பட்ஜெட் கூட்டத்தொடர் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று காலை திருப்பதி ஏழுமலையான் கோயிலில் கடந்த ஜெகன் மோகன் ரெட்டியின் ஆட்சியின் போது நெய்யில் கலப்படம் என்று தெரிந்தே வாங்கியதாக தீவிர குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டன. இதன் மீது சுமார் 3 மணி நேரம் விவாதம் நடைபெற்றது.

இதில் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு பேசியதாவது: கலப்பட நெய் விவகாரத்தில் உச்ச நீதிமன்ற உத்தரவின் பேரில் சிறப்புப் புலனாய்வுக் குழு விசாரணையை நடத்தியது. அக்குழுவினர் விசாரணை நடத்தி, அதிகாரிகள், ஊழியர்கள், நிபுணர்கள் என அனைவரும் சேர்ந்தே இந்த தவறை செய்தனர். ஆதலால் அவர்கள் மீது ஆந்திர அரசு தரப்பில் நடவடிக்கை எடுக்கலாம் என எனக்கு பரிந்துரை செய்தது.



இதனை விசாரிக்கவே ஒரு நபர் விசாரணை கமிஷன் தற்போது அமைக்கப்பட்டுள்ளது. முந்தைய ஆட்சியினர் லட்டு விவகாரத்தில் மட்டுமல்லாது பல விஷயங்களில் தவறிழைத்துள்ளனர். 2019- 24ம் ஆண்டு இடையே மட்டும் முந்தைய அரசு 59.71 லட்சம் லிட்டர் கலப்பட நெய்யை வாங்கி உபயோகித்துள்ளது. இதில் ரூ.231.51 கோடி ஊழல் நடந்துள்ளது.

லட்டு தயாரித்த நெய்யில் விலங்குகளின் கொழுப்பு, மீன் கொழுப்பு ஆகியவை கலந்திருப்பதாக நானாக கூறவில்லை. என்டிடிபி கொடுத்த அறிக்கையை ஆதாரமாக கொண்டு அந்த விஷயத்தை வெளியில் கூறினேன். கடவுள்தான் என்னை அப்படி சொல்ல வைத்துள்ளார். கொல்கத்தாவின் போலேபாபா டயரிதான் அனைத்து தவறுகளையும் செய்தது.

திண்டுக்கல் ஏஆர் டயரி ஃபுட்ஸ், திருப்பதி ஸ்ரீவைஷ்ணவி டயரி, நெல்லூர் மால் கங்கா மில்க் டயரி ஆகியவற்றின் பெயர்களில் நெய் விநியோகம் செய்யப்பட்டது. இதில் லஞ்சம் வாங்கிய முன்னாள் அறங்காவலர் குழு தலைவர் ஒய்.வி. சுப்பாரெட்டியின் உதவியாளர் சின்னப்பா கைது செய்யப்பட்டுள்ளார். இவ்வளவு நடக்கும்போது அப்போதைய தேவஸ்தான அறங்காவலர், நிர்வாக அதிகாரிக்கு தெரியாமல் நடக்குமா? இவ்வாறு முதல்வர் சந்திரபாபு நாயுடு பேசினார்.

துணை முதல்வர் பவன் கல்யாண் பேசியதாவது: கலப்பட நெய்யில் எந்த ரசாயனத்தை கலந்தார்களோ அது பெருமாளுக்கே வெளிச்சம். நெய்யில் விலங்கு கொழுப்பு கலந்திருந்தது என்பது என்டிடிபி கொடுத்த அறிக்கையில் இருந்தது. அது நெய்யே இல்லை என சிபிஐ அறிக்கை கொடுத்துள்ளது.

அப்போதைய அறங்காவலர் குழு மீது குற்றம் சுமத்தினால் முன்னாள் முதல்வர் ஜெகன் ஏன் மல்லு கட்டுகிறார் ? அப்படியெனில் அதில் அவருக்கும் பங்கு இருக்கிறது என்பது உண்மை தானே ? கலப்பட நெய் விவகாரத்தில் தவறு செய்தவர்கள் யாராக இருப்பினும் தண்டிக்கப்பட வேண்டியவர்களே. இவ்வாறு பவன் கல்யாண் பேசினார்.

# தெலுங்கானாவில் இரட்டையர்களை மணந்த இரட்டை சகோதரிகள்



**காமரெட்டி, பிப்.26:** தெலுங்கானா மாநிலம் காமரெட்டி மாவட்டத்தில் உள்ள கிராமத்தை சேர்ந்த இரட்டை சகோதரர்கள் விஜய் மற்றும் வினய். பக்கத்து கிராமத்தை சேர்ந்த இரட்டை சகோதரிகள் கீர்த்தனா மற்றும் கீர்த்தி இவர்களுக்கு திருமணம் செய்து வைக்க அவர்களது பெற்றோர்கள் முடிவு செய்தனர்.

அதன்படி திருமண தேதி நிச்சயிக்கப்பட்டு உறவினர்கள், நண்பர்களுக்கு பத்திரிகைகள் வழங்கப்பட்டன. திருமண விழாவிற்கான ஏற்பாடுகள் தடபுடலாக நடந்தது.

நேற்று முன்தினம் திருமண வரவேற்பு நிகழ்ச்சி நடந்தது. இதில் ஏராளமான உறவினர்கள் நண்பர்கள் கலந்து கொண்டனர். திருமண மேடையில் அருகருகே அமர்ந்திருந்த இரட்டை ஜோடிகளும் ஒரே மாதிரியான பாரம்பர உடை அணிந்து இருந்தனர்.

இது திருமணத்திற்கு வந்திருந்த விருந்தினர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அதே நேரத்தில் பெண்கள் ஒரே மாதிரியாக இருப்பதால் சிறிது நேரம் குழப்பம் அடையவும் செய்தது. 2 ஜோடி சகோதரர்களும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியான அம்சங்களை கொண்டு இருந்ததால் சடங்குகளின் போது சகோதரர்கள் மற்றும் சகோதரிகளை வேறுபடுத்தி பார்க்க சிரமப்பட்டனர்.

திருமணத்திற்கு வந்திருந்தவர்கள் மணமகன்கள், மணமகள்கள் இரட்டையர் திருமணத்தை வாழ்நாளில் ஒரே முறை மட்டுமே காணக்கூடிய நிகழ்வு என வர்ணித்தனர்.

இந்த திருமண போட்டோக்கள் மற்றும் வீடியோக்கள் சமூக வலைதளங்களில் பரவி வருகின்றன.

# உ.பி.யில் பழைய பேப்பர் கடைக்கு விற்கப்பட்ட 13,000 அரசுப் பள்ளி புதிய பாடப்புத்தகங்கள்

**லக்னோ, பிப்.26:** உத்தரப் பிரதேசத்தில் 13,000 அரசுப் பள்ளி பாடப்புத்தகங்கள் பழைய பேப்பர் கடைக்கு விற்பனை செய்யப்பட்ட சம்பவம் அரங்கேறி உள்ளது.

பிப்ரவரி 17 அன்று, பழைய பேப்பர் வியாபாரி ஒருவர் அரசுப் பாடப்புத்தகங்களை சட்டவிரோதமாக வாங்கி, ஒரு லாரியில் ஏற்றிச் செல்வதாக அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தது.

அண்டை மாவட்டமான லக்கிம்பூரில் அந்த லாரியை போலீசார் மடக்கிப் பிடித்தனர். லாரி ஓட்டுநர் அங்கிருந்து தப்பியோடிவிட்டார். 2026-2027 கல்வியாண்டிற்காக 'சமக்ர சிக்ஷா' திட்டத்தின் கீழ் 1-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு இலவசமாக விநியோகிக்க அச்சிடப்பட்ட சுமார் 13,595 பாடப்புத்தகங்கள் அதில் இருந்தன.

அவை சட்டவிரோதமாக உத்தரகாண்ட் மாநிலம் காசிப்பூரில் உள்ள ஒரு நிறுவனத்திற்கு விற்கப்படவிருந்தது தெரியவந்தது.

இந்த முறைகேடு தொடர்பாக கல்வித் துறை அதிகாரிகளான ஷபீக் அகமது மற்றும் அலோக் குமார் ஆகியோர் சஸ்பெண்ட் செய்யப்பட்டனர்.

மேலும், ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அசுதோஷ் சிங் மற்றும் பயிற்றுவிப்பாளர் அதுல் குமார் சிங் ஆகியோர் பணியில் இருந்து நீக்கப்பட்டனர்.

பழைய பேப்பர் வியாபாரி மற்றும் லாரி உரிமையாளர் மீதும் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. புத்தகங்கள் லாரியில் பிடிபட்ட வீடியோ தற்போது வைரலாகி வருகிறது.

# தங்கை கண்முன்னே தந்தையை துண்டு துண்டாக வெட்டி டிரம்மில் அடைத்த மகன்.. NEET-க்கு படிக்க சொன்னதால் ஆத்திரம்

**லக்னோ, பிப்.26:** உத்தரப் பிரதேச மாநிலம் லக்லக்னோவில் நீட் தேர்வு அழுத்தத்தால் 21 வயது இளைஞன் தந்தையை கொடூரமாக கொலை செய்த சம்பவம் அரங்கேறி உள்ளது.

லக்னோவின் ஆஷியானா பகுதியில் மருத்துவ பரிசோதனை மையம் நடத்தி வந்தவர் பிரதாப் சிங் (49). இவரது மனைவி கடந்த 2018 ஆம் ஆண்டு உயிரிழந்த நிலையில் மகன் மற்றும் மகள் உடன் வசித்து வந்தார்.

தனது 21 வயது மகன் அக்ஷத்தை இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான நீட் தேர்வுக்கு படிக்க சொல்லி பிரதாப் சிங் அழுத்தம் கொடுத்து வந்துள்ளார்.

இதுதொடர்பாக கடந்த பிப்ரவரி 20 அன்று வீட்டில் இருவரிடையே கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது. அப்போது அக்ஷத்தின் தங்கையும் அங்கு இருந்துள்ளார்.

ஒருகட்டத்தில் ஆத்திரத்தை அடக்க முடியால் அக்ஷத், வீட்டில் தந்தை பிரதாப்



சிங் உரிமம் பெற்று வாங்கி வைத்திருந்த ரைபிளை எடுத்து அவரை சுட்டுக் கொன்றார்.

மேலும் தங்களை கண் முன்னேயே உடலைத் துண்டு துண்டாக வெட்டியுள்ளார். சில உடல் பாகங்களைச் சதரோனா கிராமம் அருகே வீசிவிட்டு, மீதமுள்ளவற்றை வீட்டில் இருந்த நீல நிற பிளாஸ்டிக் டிரம்முக்குள் மறைத்து வைத்துள்ளார். இந்த விஷயத்தை வெளியே சொன்னால் உன்னையும் கொன்றுவிடுவேன் என தங்கையை அக்ஷத் மிரட்டியுள்ளார்.

பிரதாப் சிங்கை காணவில்லை என உறவினர்கள் அளித்த புகாரின் அடிப்படையில் போலீசார் விசாரணை நடத்தி வந்தனர்.

அக்ஷத்தின் முன்னுக்குப் பின் முரணான பதில்களால் சந்தேகமடைந்து அவரிடம் தீவிர விசாரணை நடத்திய நிலையில் அவர் உண்மையை ஒப்புக்கொண்டார்.

டிரம்மில் வைக்கப்பட்டிருந்த உடலின் பாகங்களை போலீசார் மீட்ட நிலையில் நேற்று அக்ஷத் கொலை வழக்கில் கைது செய்யபட்டார்.

# நெற்றியில் நாமம், கையெழுத்து... அமிர்தசரஸ் தங்ககோவில் போல திருப்பதி கோவிலில் பக்தர்களுக்கு புதிய கட்டுப்பாடுகள்!



**திருப்பதி, பிப்.26:** திருப்பதி ஏழுமலையான் கோவிலில் தரிசனத்திற்கு வரும் பக்தர்களுக்கு புதிய கட்டுப்பாடுகள் கொண்டு வரப்பட்டுள்ளன.

தரிசன வரிசையில் இனி கடுமையான விதிமுறைகளை அமல்படுத்தப்பட உள்ளது. அமிர்தசரஸ் தங்ககோவிலில் உள்ளது போல் திருப்பதி கோவிலுக்கு தனி சட்டம் அமல்படுத்தப்பட உள்ளன.

அதன்படி தரிசனத்திற்கு செல்லும் பக்தர்கள் ஸ்கேனிங் மையம் அருகே உள்ள புத்தகத்தில் கையெழுத்திட்ட பிறகு தான் தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

இதேபோல் இந்து மதத்தை சாராத மாற்று மதத்தினர்கள் தரிசனம் செய்ய விரும்பினால் கட்டாயம் அவர்கள் இந்து கடவுளை நம்புகிறோம். இந்து கடவுள் மீது நம்பிக்கை வைத்துள்ளோம். நாங்கள் பொட்டு வைத்துக் கொள்கிறோம் என உறுதிமொழி கடிதம் எழுதிக் கொடுத்த பிறகு தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

அதே போல் தரிசனத்திற்கு செல்லும் மாற்று மதத்தினர் கட்டாயம் நெற்றியில் நாமம் போட்ட பிறகு தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருப்பதியில் நேற்று 74,902 பேர் தரிசனம் செய்தனர். 22,869 பக்தர்கள் முடி காணிக்கை செலுத்தினர். ரூ.4.05 கோடி உண்டியல் காணிக்கை வசூலானது. நேரடி இலவச தரிசனத்தில் வந்த பக்தர்கள் 12 மணி நேரம் காத்திருந்து தரிசனம் செய்தனர்.

# கேரளாவுக்கு மட்டும் பெயர் மாற்றம்.. ஆனால் மேற்கு வங்கத்துக்கு ஓரவஞ்சனை - மம்தா ஆதங்கம்



கேரளாவின் பெயரை கேரளம் என மாற்றம் செய்ய மத்திய அமைச்சரவை இன்று ஒப்புதல் அளித்துள்ளது.

இந்நிலையில் கேரளாவிற்கு அளிக்கப்பட்ட அதே முக்கியத்துவம் மேற்கு வங்கத்திற்கு அளிக்கப்படவில்லை என்று அம்மாநில முதல்வர் மம்தா பானர்ஜி குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் கூறியதாவது, "மாநிலத்தின் பெயர் 'West Bengal' என்று 'W' எழுத்தில் தொடங்குவதால், தேசிய அளவிலான கூட்டங்கள், தேர்வுகள் மற்றும் நேர்காணல்களில் மேற்கு வங்க மாணவர்கள் மற்றும் பிரதிநிதிகள் எப்போதும் கடைசியாகவே அழைக்கப்படுகின்றனர்.

நானும் கூட்டங்களில் கடைசியாகப் பேசும் வாய்ப்பையே பெறுகிறேன்.

மேற்கு வங்க சட்டமன்றத்தில் மாநிலத்தின் பெயரை Bangla (வங்காளம்) என மாற்ற ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்டது.

இருப்பினும், மத்திய அரசு அதனை நிலுவையில் வைத்துவிட்டு, கேரளாவின் கோரிக்கையை மட்டும் விரைவாக நிறைவேற்றியிருப்பது வஞ்சகமானது.

கேரளாவில் ஆளும் இடதுசாரி கட்சிக்கும் பாஜகவுக்கும் இடையே வளர்ந்து வரும் ரகசியக் கூட்டணியின் காரணமாகவே, அம்மாநிலத்தின் பெயர் மாற்றத்திற்கு மத்திய அரசு உடனே சம்மதித்துள்ளது.

பாஜக தேர்தலின் போது மட்டும் 'Bangla' என்ற வார்த்தையைப் பயன்படுத்திக்கொண்டு, மற்ற நேரங்களில் பெங்காலிகளை அவமதிக்கிறது. ஒருநாள் நீங்கள் ஆட்சியில் இருக்க மாட்டீர்கள், அப்போது நாங்கள் நிச்சயம் பெயரை மாற்றுவோம்" என்று தெரிவித்துள்ளார்.

# 5 ஓ.டி.டி. தளங்களுக்கு மத்திய அரசு தடை

**புதுடெல்லி, பிப்.26:** இந்தியாவின் தகவல் தொழில்நுட்பச் சட்டம் 2000-ன் கீழ், ஆபாசமான தகவல்களை மின்னணு முறையில் பரப்புவது தண்டனைக்குரிய குற்றமாகும். கடந்த சில மாதங்களாகவே மத்திய அரசு இத்தகைய சிறிய அளவிலான ஓ.டி.டி. தளங்களைக் கண்காணித்து வருகிறது.


இந்த நிலையில் ஆபாசமான காட்சிகளை ஒளிபரப்பியதாகக் கூறி, 5 ஓ.டி.டி. தளங்களுக்கு மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம் தடை விதித்துள்ளது. மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையின் விதிகளுக்கு எதிராக இந்தத் தளங்கள் செயல்பட்டதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

குறிப்பாக, சந்தாதாரர்களை கவர்வதற்காக அநாகரீகமான மற்றும் வக்கிரமான காட்சிகளைத் தொடர்ந்து ஒளிபரப்பி வந்ததாக எழுந்த புகார்களின் அடிப்படையில் இந்தநடவடிக்கைஎடுக்கப்பட்டு உள்ளது.

# இனி கேரளா அல்ல 'கேரளம்'... பெயர் மாற்றத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்!

**புதுடெல்லி, பிப்.26:** 'கேரளா'வை 'கேரளம்' என்று பெயர் மாற்றும் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. கடந்த 2024ஆம் ஆண்டு பினராயி விஜயன் தலைமையிலான கேரள சட்டப்பேரவையில் இந்த பெயர் மாற்றத்திற்கான தீர்மானம் இரண்டாவது முறையாக நிறைவேற்றப்பட்டது. இந்நிலையில் இந்த மசோதாவிற்கு இன்று நரேந்திர மோடி தலைமையிலான அமைச்சரவை இதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

மலையாளத்தில் மாநிலத்தின் பெயர் 'கேரளம்' என்றுதான் உள்ளது. ஆனால், ஆங்கிலத்திலும் இந்திய அரசியலமைப்பிலும் 'கேரளா'



என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதை அனைத்து மொழிகளிலும் 'கேரளம்' என்றே அழைக்க வேண்டும் என அம்மாநில அரசு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

அமைச்சரவையின் ஒப்புதலை தொடர்ந்து, அரசியலமைப்பின் பிரிவு 3 இன் கீழ் இந்த மசோதா நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும்.

அதன்பின் குடியரசுத் தலைவர் ஒப்புதல் பெறப்படும். குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளிக்கும்பட்சத்தில் பெயர் நடைமுறைக்கு வரும்.

# மருமகளுக்கு சிறுநீரகம் தானம் செய்த மாமியார்



**யாதகிரி, பிப்.26:** கர்நாடக மாநிலம் யாதகிரி மாவட்டம் சுராப்புரா தாலுகா மாலூர் கிராமத்தை சேர்ந்தவர் சாந்தாபாய். இவருக்கு திருமணமாகி பிரகாஷ் என்ற மகன் உள்ளார். பிரகாசுக்கும்- பாசம்மா என்ற பெண்ணுக்கும் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது. இந்தநிலையில் பிரகாசின் மனைவி பாசம்மா கடந்த 9 மாதங்களாக சிறுநீரக பிரச்சனையால் அவதியடைந்து வந்தார். அவருக்கு சிறுநீரக தானம் செய்ய யாரும் முன்வரவில்லை என்று கூறப்படுகிறது.

இந்தநிலையில் அவரது மாமியார் சாந்தாபாய் அவரது சிறுநீரகத்தை தனது மருமகளுக்கு தானமாக வழங்க முன்வந்தார். அதையடுத்து அறுவை சிகிச்சை மூலம் சாந்தாபாயிடம் இருந்து சிறுநீரகத்தை எடுத்து. மருமகள் பாசம்மாவுக்கு டாக்டர்கள் பொருத்தினர்.

தற்போது 2 பேரும் நலமாக இருப்பதாக டாக்டர்கள் தெரிவித்தனர். பொதுவாக மாமியார், மருமகள், எலியும் பூனையுமாக சண்டையிட்டுகொள்வதை தான் பார்த்திருப்போம். ஆனால் சாந்தாபாய் தனது மருமகளின் உயிரை காப்பாற்ற தனது ஒரு சிறுநீரகத்தை வழங்கியிருப்பது அப்பகுதி மக்களிடையே நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# “நான் சங்கர மடத்துக்கா போக முடியும்?” விரக்தியில் ஓபிஎஸ்



சென்னை, பிப்.26:

நான் இனி சங்கர மடத்துக்கா செல்ல முடியும்? என்னை இந்த அளவுக்கு அரசியலில் தனிமைப்படுத்தும் வகையில் நான் என்ன தவறு செய்துவிட்டேன். அந்த உண்மையைச் சொல்லுங்கள் நான் அரசியலை விட்டு விலகி விடுகிறேன் என்று முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் கேள்வி எழுப்பியுள்ளார்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 78-வது பிறந்த நாளை முன்னிட்டு போடியில் நேற்று பொதுமக்களுக்கு நல உதவிகளை வழங்கினார் ஓபிஎஸ். அதன் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய அவர் கூறியதாவது: ஜெயலலிதா இறந்த பிறகு எனக்கு முதல்வராவதில் விருப்பமில்லை. என்னை கட்டாயப்படுத்தி முதல்வர் ஆக்கினார்கள். பிறகு பல்வேறு வகையிலும் என்னை அவமானப்படுத்தி முதல்வர் பதவியில் இருந்து வெளியேற்றினார்கள்.

ஒவ்வொரு முறையும் எதிர்க் கட்சியில் இருந்தாலும் ஆளுங் கட்சியிலும் இருந்தாலும் ஆட்சி முடிந்ததும் அனைவருக்கும் வாழ்த்துச் சொல்வது எனது மரபு. அந்த அடிப்படையிலேயே திமுக ஆட்சிக்கு வாழ்த்துத் தெரிவித்தேன். ஆனால், நான் திமுக-வுக்கு ஆதரவு தெரிவிப்பது போல கருத்து பரவிவிட்டது.

டிடிவி.தினகரன் என்னை பசுந்தோல் போர்த்திய புலி என்று கூறியுள்ளார். அரசியல் நாகரிகம், பண்பாடு கருதி நான் கடின வார்த்தைகளை பயன்படுத்துவது இல்லை. நான் நினைத்தால் அவரை விட மோசமான வார்த்தைகளை பயன்படுத்தி கருத்துக் கூற முடியும். நான் இனி சங்கர மடத்துக்கா செல்ல முடியும்? என்னை இந்த அளவுக்கு அரசியலில் தனிமைப்படுத்தும் வகையில் நான் என்ன தவறு செய்துவிட்டேன். அந்த உண்மையைச் சொல்லுங்கள் நான் அரசியலை விட்டு விலகி விடுகிறேன்.

திமுக பலமான கூட்டணி அமைத்து உள்ளது. ஆகவே, அவர்களை வெல்ல அதிமுக-வினர் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றுதான் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன். நான் போடி தொகுதியில் போட்டியிடுகிறேனா என்று ஆண்டவனுக்குத் தான் தெரியும். தனிக்கட்சி தொடங்க மாட்டேன்.

எம்ஜிஆர் ஜெயலலிதா ஆகியோர் அதிமுக-வில் வகுத்த சட்ட விதிமுறைகளை மீண்டும் கொண்டு வரும் வரை அதிமுக-வுக்கு எதிராக சட்டப் போராட்டம் நடத்திக் கொண்டே இருப்பேன்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# வேலூரில் விதிகளை மீறி நடந்த தவெக கூட்டம் - காவல் துறை சொல்வது என்ன?



வேலூர், பிப்.26:

வேலூர் மாவட்டத்தில் தவெக நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சிக்கு, மனு அளித்த 4 நாட்களில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், விதிமுறைகளை மீறி 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ளதாக காவல் துறையினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

வேலூர் மாவட்டம் பள்ளிகொண்டா அடுத்த அகரம்சேரியில் தவெக சார்பில் நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சி நேற்று முன்தினம் நடைபெற்றது. தவெக தலைவர் நடிகர் விஜய் பங்கேற்ற இந்த நிகழ்ச்சிக்கு பிப்.22-ம் தேதிதான் போலீஸார் அனுமதி அளித்ததாக அக்கட்சியின் இணை பொதுச் செயலாளர் நிர்மல் குமார் தெரிவித்திருந்தார்.

மேலும், நிகழ்ச்சிக்காக 10 முதல் 15 இடங்களை தேர்வு செய்து காட்டினாலும் நிராகரிக்கிறார்கள். பிறகு வேறு இடங்கள் பார்க்கவேண்டியுள்ளது என குற்றஞ்சாட்டினார்.

இதற்கிடையில், நிர்மல் குமாரின் குற்றச்சாட்டுக்கு மறுப்பு தெரிவித்து வேலூர் மாவட்ட காவல் துறை நிர்வாகம் தனது சமூக வலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில், “தவெக சார்பில் மக்கள் சந்திப்பு கூட்டத்தை பிப்ரவரி 8-ம் தேதி நடத்த உள்ளதாகவும், அதில் தங்களது கட்சி தலைவர் மற்றும் 25 ஆயிரம் பேர் கலந்து கொள்வர்கள் என கடந்த ஜன.28-ம் தேதி அனுமதி கோரி மனு அளித்தனர்.

இது தொடர்பாக ஜன.30-ம் தேதி அன்று சென்னை உயர் நீதிமன்றத்தின் ஆணைப்படி நிகழ்ச்சி நடத்துவதற்கு தேவையான அடிப்படை தகவல்களை தவெகவிடம் கேள்விகளாக கேட்டிருந்தோம். தொடர்ந்து, பிப்.5-ம் தேதி, தவெக சார்பில் நிகழ்ச்சி தேதி தள்ளிப்போவதால் மாற்று தேதி தொடர்பாக மீண்டும் மனு அளிக்கிறோம் என்றனர்.

பின்னர், நிகழ்ச்சியை பிப்.23-ம் தேதி நடத்த உள்ளதாகவும், அதில் 25 ஆயிரம் பேர் பங்கேற்பார்கள் என பிப்.6-ம் தேதி மனு அளித்தனர். இதற்கான அடிப்படை தகவல்களை கேட்ட நிலையில் பிப்.18-ம் தேதி தவெக அளித்த மனுவில், நிகழ்ச்சிக்கு 25 ஆயிரம் பேருக்கு பதிலாக 4,900 நிர்வாகிகள் மட்டுமே கலந்துகொள்வார்கள் என தெரிவித்தனர்.

இதுதொடர்பாக அடிப்படை வசதிகள் தொடர்பான கேள்விகளை பிப்.19-ம் தேதி கேட்கப்பட்ட நிலையில் அதற்கான பதிலுரையை பிப்.20-ம் தேதி தவெகவினர் அளித்தனர். நிகழ்ச்சி நடத்த 5 நாட்களுக்கு முன்பாக மனு அளித்தாலும் மக்களின் பாதுகாப்பை கருத்தில்கொண்டு, கள ஆய்வு செய்து பிப்.22-ம் தேதி காவல் துறை சார்பில் அனுமதிக்கான ஆணை அளிக்கப்பட்டது. இதில், காலதாமதம் செய்யாமல் அனுமதி வழங்கப்பட்டது.

ஆனால், தவெக நிர்வாகிகள் காவல் துறையினரிடம் அனுமதி பெற கடந்த ஒன்றரை மாதங்களாக போராடியதாகவும், நிகழ்ச்சி நடைபெறுவதற்கு 20 மணி நேரம் முன்னதாக அனுமதி அளித்ததாக கூறியது முற்றிலும் உண்மைக்கு புறம்பானது.

மேலும், பிப். 23-ம் தேதி நடைபெற்ற நிகழ்ச்சியில் மனுவில் குறிப்பிட்டபடி 4,900 பேருக்கு மேலாக குறைந்தபட்சம் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டது தெரிய வருகிறது.

இது சென்னை உயர் நீதிமன்ற அறிவுறுத்தல்கள் மற்றும் தமிழக அரசால் வெளியிடப்பட்ட அரசாணை எண்.05-ல் நிகழ்ச்சி நடத்துவதற்கு அறிவுறுத்தியுள்ள விதிமுறைகளை மீறி செயல்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# “பேரவைத் தேர்தலில் நான் போட்டியிடவில்லை, ஆனால்...” – டிடிவி தினகரன் விவரிப்பு



திருநெல்வேலி, பிப்.26:

திருநெல்வேலி மண்டல அமமுக அலுவலகத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் அமமுக பொதுச் செயலர் டிடிவி தினகரன் பங்கேற்றார். பின்னர் செய்தியாளர்களிடம் கூறியது: “தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அமமுக அங்கம் வகிக்கிறது. இந்திய அளவில் பாஜக தலைமையிலான கூட்டணி இருந்தாலும், தமிழகத்தில் அதிமுக தலைமையிலான கூட்டணி மேலும் பலப்படுவது தேர்தல் வெற்றிக்கு உறுதுணையாக இருக்கும். தொகுதிப் பங்கீடு குறித்து பாஜக மற்றும் அதிமுகவுடன் சுமுகமான முறையில் ஆலோசித்து, தகுதியான வேட்பாளர்கள் நிறுத்தப்படுவார்கள். எவ்விதப் பிரச்சினையும் இன்றி தொகுதிப் பங்கீடு நடைபெறும்.

திமுக ஆட்சியை வீழ்த்துவதே எங்களது முதல் இலக்கு. தென் மாவட்டங்களில் அமமுக ஒரு மாபெரும் அரசியல் திருப்பத்தை ஏற்படுத்தும்.

தமிழகத்தில் இன்று சட்டம் - ஒழுங்கு முழுமையாக சீர்கெட்டுள்ளது. எங்கு பார்த்தாலும் கொலை, கொள்ளை, பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துவிட்டன. குறிப்பாக, வருங்காலத் தூண்களான மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் போதைப்பொருட்களுக்கு அடிமையாகி வருவது வேதனை அளிக்கிறது. போதைப்பொருள் புழக்கத்தைக் கட்டுப்படுத்த இந்த அரசு தவறிவிட்டது.

எம்.ஜி.ஆர், ஜெயலலிதாவின் ஆசியோடு ஸ்டாலின் மீண்டும் முதல்வராவார் என்று கூறுவதை எங்களை போன்ற உண்மைத் தொண்டர்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. திமுகவை எதிர்ப்பதற்காகவே எம்.ஜி.ஆர். கட்சி தொடங்கினார். 50 ஆண்டு காலமாக திமுகவை எதிர்த்து அரசியல் செய்த தலைவர்களின் ஆசி திமுகவுக்குக் கிடைக்கும் என்று கூறுவது நகைப்புக்குரியது மற்றும் மனவேதனையை தருகிறது.

கடந்த தேர்தலிலேயே நாங்குநேரியில் எங்கள் வேட்பாளர் 40 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றார். இது அமமுகவிற்கு செல்வாக்குள்ள தொகுதி. எனவே, இங்கு தகுதியான வேட்பாளரை நிறுத்தி வெற்றி பெறுவோம். சட்டப் பேரவை தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்பதில் உறுதியாக இருக்கிறேன். ஆனால் கட்சிப் பணிகளை தீவிரமாக மேற்கொள்வேன்.

திமுக அரசு பணத்தை நம்பியே தேர்தலை சந்திக்கிறது. ஏழை எளிய மக்களுக்கு பணத்தை கொடுத்து வாக்குகளை பெறலாம் என கணக்குப் போடுகிறார்கள். ஆனால் மக்கள் விழிப்புடன் இருக்கிறார்கள். தேர்தலுக்காக அறிவிக்கப்படும் இலவச திட்டங்களும், உதவித்தொகைகளும் உண்மையான மக்கள் நலனுக்கானவை அல்ல. தேர்தலைச் சமாளிக்கவே அறிவிக்கப்படுகிறது.

திமுக கூட்டணியில் உள்ள காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் எத்தனை இடங்களைப் பெறும் என்பது மில்லியன் டாலர் கேள்வியாகவே உள்ளது. தொகுதிப் பங்கீட்டில் அவர்களுக்குள் நிலவும் மோதல்கள் விரைவில் வெளிச்சத்திற்கு வரும்” என்று தினகரன் தெரிவித்தார்.

# இந்த தேர்தல் தமிழ்நாடு vs NDA-க்கு தான்

## விஜய்க்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பதிலடி



நாகர்கோவில்.பிப்.26:

நாகர்கோவில் கன்கார்டியா பள்ளி மைதானத்தில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனம் வழங்கினார். ரூ.1,789 கோடி மதிப்பிலான திட்டப்பணிகளை தொடங்கி வைத்தார். கன்னியாகுமரியில் ரூ.30 கோடி மதிப்பீட்டில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கு அவர் அடிக்கல் நாட்டினார்.

விழாவில் பங்கேற்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியதாவது:

* சிலர் தேர்தல் நேரத்தில் மட்டும் உங்களை வட்டமடிப்பார்கள்.

* தமிழ்நாட்டுக்கு தேர்தல் வருவதால் பிரதமர் மோடி அடிக்கடி வருவார்.

* பிரதமர் மோடி எத்தனை முறை தமிழகம் வருகிறாரோ அவ்வளவு வித்தியாசத்தில் என்டிஏ கூட்டணி தோற்கும்.

* இந்த தேர்தல் என்பது தமிழ்நாடு vs என்டிஏ-க்கு தான்

இவ்வாறு அவர் கூறினார்.

வேலூரில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய விஜய், "அண்மையில் முதல்வர் ஸ்டாலின் ஒரு உருட்டு உருட்டினார்.

அதாவது, தமிழ்நாட்டுக்கும் - டெல்லிக்குமான தேர்தல் என்கிறார். டெல்லியில் எதுவும் போட்டியிடுகிறீர்களா? பிறகு எதற்கு அதைப்பற்றி பேசுகிறீர்கள்" என்று விமர்சித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பா.ம.க. யாருடன் கூட்டணி? டாக்டர் ராமதாஸ் இன்று முடிவு



திண்டிவனம், பிப்.26:

பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாசுக்கும், அவரது மகன் அன்புமணிக்கும் இடையே கட்சி யாருக்கு சொந்தம் என்ற போட்டி நிலவி வருகிறது.

இருவரும் தனித்தனி அணியாக செயல்பட்டு வருகிறார்கள். இந்த நிலையில் அன்புமணி அ.தி.மு.க.-பா.ஜ.க. கூட்டணியில் இணைந்து விட்டார்.

ஆனால் ராமதாஸ் தரப்பு பா.ம.க. எந்த அணிக்கு செல்வது என்ற முடிவு எடுக்க முடியாத நிலை உள்ளது. தி.மு.க. கூட்டணிக்கு பா.ம.க. வந்தால் நாங்கள் வெளியேறி விடுவோம் என அக்கூட்டணியில் ஏற்கனவே இடம் பெற்றுள்ள விடுதலை சிறுத்தைகள் கட்சி கூறி விட்டது.

அ.தி.மு.க. கூட்டணியில் அன்புமணி இடம் பெற்று உள்ளதால் அக்கூட்டணிக்கும் ராமதாஸ் தரப்பு பா.ம.க. செல்ல முடியாத நிலை உள்ளது. எனவே யாருடன் கூட்டணி அமைப்பது என்பது தொடர்பாக மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகளிடம் நாளை ஆலோசனை நடத்தி முடிவு செய்ய டாக்டர் ராமதாஸ் திட்டமிட்டுள்ளார்.

இதற்காக பா.ம.க. நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் இன்று திண்டிவனம் தைலாபுரம் தோட்டத்தில் நடைபெறுகிறது.

இது குறித்து பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

பா.ம.க., வன்னியர் சங்கம் உள்ளிட்ட சார்பு அமைப்புகளில் மாநில, மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்கும் கூட்டம் நாளை காலை 10 மணிக்கு தைலாபுரம் தோட்டத்தில் என் தலைமையில் நடைபெறுகிறது.

அதில் தேர்தல் குறித்து ஆலோசிக்கப்படும்.

இவ்வாறு அதில் கூறி உள்ளார்.

எனவே நாளை நடைபெறும் கூட்டத்திற்கு பின் கூட்டணி குறித்து முக்கிய அறிவிப்பை ராமதாஸ் வெளியிடுவார் என அவரது ஆதரவாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# “இந்திய தேர்தல் ஆணையமும் மாநில தேர்தல் ஆணையங்களும் இணைந்து செயல்பட வேண்டும்”




## தேர்தல் ஆணையர்

சென்னை, பிப்.26:

இந்திய தேர்தல் ஆணையம் (ECI) மற்றும் மாநில தேர்தல் ஆணையர்களின் (SECs) தேசிய வட்டமேசை மாநாடு 2026, புதுடெல்லியில் நிறைவடைந்தது. சட்டப்பூர்வ கட்டமைப்பின்படி வாக்காளர் பட்டியல் தயாரிப்பு மற்றும் தேர்தல் நடத்தலில் ஒத்துழைப்பை வலுப்படுத்த மாநில தேர்தல் ஆணையர்கள் உறுதி ஏற்றுக் கொண்டனர்.

இது குறித்து இந்திய தேர்தல் ஆணையம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பு: இந்திய தேர்தல் ஆணையம் (ECI) இன்று பாரத் மண்டபம், புதுடெல்லியில் இந்திய தேர்தல் ஆணையம் மற்றும் மாநில தேர்தல் ஆணையர்களின் (SECs) தேசிய வட்டமேசை மாநாட்டை ஏற்பாடு செய்தது.

இம்மாநாட்டை தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் தலைமையில், தேர்தல் ஆணையாளர்கள் டாக்டர் சுக்பீர் சிங் சந்து மற்றும் டாக்டர் விவேக் ஜோஷி முன்னிலையில் தலைமை தாங்கினார்.

தமது தொடக்க உரையில் தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார், இந்திய தேர்தல் ஆணையம் மற்றும் மாநில தேர்தல் ஆணையங்களுக்கு இடையிலான நிறுவன ஒருங்கிணைப்பை அவற்றின் அரசியலமைப்பு ஆணைகளுக்கு வலுப்படுத்துவதின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டினார்.

நாட்டில் தேர்தல் செயல்முறைகளின் நேர்மை மற்றும் செயல்திறனை மேலும் மேம்படுத்த வாக்காளர் பட்டியல் மேலாண்மை, தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் சிறந்த நடைமுறைகளை பகிர்ந்து கொள்வதில் இணக்கமான அணுகுமுறைகளின் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

தேர்தல் ஆணையர் டாக்டர் எஸ்.எஸ். சந்து, மாநில தேர்தல் ஆணையங்கள் ஒருவரிடமிருந்து ஒருவர் கற்றுக்கொண்டு, சிறந்த நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்தினார். தேர்தல் செயல்முறையின் அடித்தளம் நம்பிக்கையே என்பதால், இந்திய தேர்தல் ஆணையம் மற்றும் மாநில தேர்தல் ஆணையங்கள் இணைந்து செயல்படுவது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் ஆணையர் டாக்டர் விவேக் ஜோஷி, டிஜிட்டல் தொழில்நுட்பங்களில் ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, இந்திய தேர்தல் ஆணையம் மற்றும் மாநில தேர்தல் ஆணையங்களின் செயல்பாடுகளுக்கு இடையே பாலங்களை உருவாக்க ECINET டிஜிட்டல் தளத்தை பயன்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

இந்த விவாதங்கள் ஆக்கபூர்வமான கருத்து பரிமாற்றத்திற்கான ஒரு தளத்தை வழங்கின. மேலும் தேர்தல் நிர்வாகத்தில் கூட்டாட்சி உணர்வை வலுப்படுத்தின. பங்கேற்பாளர்கள் தேசிய பிரகடனத்தை ஏற்றுக்கொண்டு, தூய்மையான வாக்காளர் பட்டியல்களை தயாரிப்பது ஜனநாயகத்தின் அடிப்படை என உறுதியுற்றனர்.

மேலும், பஞ்சாயத்துகள் மற்றும் நகராட்சி அமைப்புகளுக்கான சட்டங்களை, நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றத் தேர்தல்களுக்கான சட்டங்களுடன் ஒருங்கிணைக்கவும் இந்திய தேர்தல் ஆணையம் மற்றும் மாநில தேர்தல் ஆணையங்களுடன் இணைந்து செயல்படும் என்றும், தேசிய மற்றும் அரசியல் சட்ட நலனை மேம்படுத்தவும் இந்திய தேர்தல் ஆணையம் மற்றும் மாநில தேர்தல் ஆணையர்களுடன் இணைந்து செயல்படும் என்றும் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாநாட்டின் போது, இந்திய தேர்தல் ஆணையத்தின் புதிய வெளியீடான ‘ஜனநாயகங்களின் சங்கமம்’ வெளியிடப்பட்டது. இந்த வெளியீடு சமீபத்தில் நடைபெற்ற இந்திய சர்வதேச ஜனநாயகம் மற்றும் தேர்தல் மேலாண்மை மாநாடு (IICDEM) 2026-இன் விரிவான பதிவாகும். 70க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து வந்த சுமார் 100 சர்வதேச பிரதிநிதிகள், தேசிய மற்றும் சர்வதேச நிபுணர்களின் பங்கேற்பு, 36 தலைப்புச் சார் அமர்வுகள், இருதரப்பு கூட்டங்களில் நடந்த விவாதங்கள் மற்றும் டெல்லி பிரகடனம் 2026-ஐ முறையாக ஏற்றுக்காண்டது ஆகியவற்றை ஆவணப்படுத்துகிறது.

27 ஆண்டுகளுக்குப் பிறகு வெற்றிகரமாக நடைபெற்ற தேசிய வட்டமேசை மாநாடு, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், ECINET மற்றும் வாக்காளர் பட்டியல் பகிர்வு போன்ற தொழில்நுட்ப தீர்வுகளைப் பகிர்வதன் மூலம் ஒருங்கிணைப்பை வளர்ப்பதற்கு வழிவகுக்கிறது.

# “அரசியலில் அனாதையாக நிற்கிறார் ஓபிஎஸ்” - செல்லூர் ராஜு கருத்து



மதுரை, பிப்.26:

“ஓபிஎஸ்ஸுக்கு அரசியல் எதிர்காலம் இல்லாததால் என்ன செய்வது என தெரியாமல் அனாதையாக நிற்கிறார். அவருடன் இருந்தவர்ளெல்லாம் இங்கே வந்துவிட்டார்கள்” என முன்னாள் அதிமுக அமைச்சர் செல்லூர் கே.ராஜு கூறினார்.

மதுரையில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் கூறியது: “அதிமுக வாக்குகள் பிளவுப்படவில்லை. ஆளும்கட்சியை வீட்டுக்கு அனுப்ப மக்கள் தயாராகி விட்டனர். வீட்டுக்கு அனுப்புவதற்கு ஒரே தகுதியான தலைவராக பழனிசாமி உள்ளார். தென் மாவட்டங்களில் அதிமுகவுக்கு ஆதரவாக எழுச்சி ஏற்பட்டுள்ளது.

தேர்தல் நேரத்தில் எத்தனை முகம் வந்தாலும் அத்தனை முகமும் அடிப்பட்டுவிடும். களத்தில் நின்று பழனிசாமி உழைக்கிறார். 200 சட்டமன்ற தொகுதிகளுக்கு மேலாக மக்களை சந்தித்துள்ளார். மக்கள் அவரை சந்திக்க கடல் போல் திரண்டு வருகிறார்கள். அவரது பேச்சை ரசிக்கிறார்கள். கை தட்டுகிறார்கள். வரவேற்கிறார்கள்.

மதுரையில் உள்ள வியாபாரிகள் என்னிடம் எப்போது அதிமுக ஆட்சி வரும், அப்போதுதான் எங்களுக்கு விடிவு காலம் கிடைக்கும் என்கிறார்கள். வியாபாரிகள் இந்த ஆட்சியால் ரொம்ப பாதிக்கப்பட்டுள்ளார்கள். தொழில் முனைவோர்கள் மின்கட்டணம் செலுத்த முடியாமல் தொழிலில் நஷ்டமடைந்துள்ளனர்.

இவர்களுடன் பாஜக கூட்டணி வைத்தால் அது நல்ல கட்சி. அதிமுக கூட்டணி வைத்தால் தீண்ட தகாத கட்சியா? எதிர்க்கட்சியாக திமுக இருந்தபோது பிரதமர் வந்தபோது கோபேக் மோடி என்றனர். ஆனால், ஆட்சிக்கு வந்ததும் அதே பிரதமரை வெள்ளை குடை ஏந்தி மோடியை வரவேற்கின்றனர்.

கூட்டம் கூடுவதை வைத்து ஒருவருக்கு ஆதரவு பெருகிறது என்று சொல்ல முடியாது. நடிகர் சிவாஜிக்கு கூடாத கூட்டமா? அடுக்கு மொழியில் பேசக் கூடிய டி.ராஜேந்தர், பெண்களை கவர்ந்த நடிகர் பாக்யராஜ் ஆகியோர் மேடையில் பேசாத பேச்சா? அவர்களுக்கும் கூட்டம் கூடியது. அதனால், கூட்டம் கூடும். அது ஓட்டாக மாறாது” என தெரிவித்தார்.

அமித் ஷா திமுகதான் ஜெயிக்கும் தன்னிடம் சொன்னதாக ஓ.பன்னீர்செல்வம் கூறியுள்ளாரே என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு, “அவரது பேச்சையெல்லாம் ஒரு கேள்வியாக கேட்கிறீர்கள். அவரே அரசியல் எதிர்காலம் இல்லாததால் என்ன செய்வது என தெரியாமல் அனாதையாக நிற்கிறார். அவருடன் இருந்தவர்ளெல்லாம் இங்கே வந்துவிட்டார்கள். அவர் என்ன பண்ணுவார் பாவம்” என்றார்.

சசிகலா புதிய கட்சி தொடங்கியது பற்றி என்ன சொல்கிறீர்கள் என்று கேட்டதற்கு, “நான் அது தொடர்பாக எந்தச் செய்தியையும் படிக்கவில்லை. பார்க்கவில்லை” என்றார். அதற்கு செய்தியாளர்கள், காலையில் நாளிதழ்கள் கூட பார்க்கவில்லையா என்றனர். அதற்கு அவர், “காலையிலே எழுந்து பரவையில் ஒரு நிகழ்ச்சியை முடித்துவிட்டு இங்கு வருகிறேன். அதனால், படிக்க முடியவில்லை. படித்திருந்தால் கூட சொல்லியிருப்பேன்” என்றார்.



## தவெக நிர்வாகிகளிடம் புஸ்ஸி ஆனந்த் பரபரப்பு பேச்சு

சென்னை, பிப்.26:
சென்னைவில்லிவாக்கத்தில் தேர்தல் பிரசார பொதுக்கூட்டம் நடைபெற்றது.
இந்த பொதுக்கூட்டத்தில் தவெக நிர்வாகிகளிடம் பேசிய புஸ்ஸி ஆனந்த், "உங்கள் மீது யாராவது கை வைத்தால், ஆயிரம் இல்லை ரெண்டாயிரம் தவெக தொண்டர்கள் அடுத்த 15 நிமிடங்களில் உங்களுடன் வந்து நிற்பார்கள். யாரை பற்றியும் எதை பற்றியும் கவலைப்பட வேண்டாம்.
அவர்களிடம் ரூ.5000 கோடி இருக்கலாம், ரூ.10,000 கோடி இருக்கலாம், மந்திரியா இருக்கலாம்... ஆனா நம்மிடம் நம்ம தலைவரின் முகம் இருக்கிறது. அதை நீங்கள் மறந்துவிட வேண்டாம். உங்களுக்கு எதாவது பிரச்சனை என்றால் நாங்கள் எல்லோரும் உங்களுக்கு உறுதுணையாக இருப்போம்" என்று தெரிவித்தார்.

# இ.பி.எஸ். மீது சசிகலா அடுக்கடுக்கான குற்றச்சாட்டு

ராமநாதபுரம், பிப்.26:
ராமநாதபுரம் மாவட்டம் கமுதி கோட்டைமேடு பகுதியில் நடைபெற்ற ஜெயலலிதா பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமி மீது சசிகலா அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை முன்வைத்தார். சசிகலா பேசியதாவது:-



என் மீதான வழக்கில் தீர்ப்பு வந்தது. 4 ஆண்டுகள் சிறை தண்டனை. அப்போது என் கவனம் எல்லாம் அரசை கலைக்க விட்டு விடக்கூடாது என்ற பொறுப்பு அதிகமாகிவிட்டது. ஒரு வாரம் அவகாசம் கேட்டும் கிடைக்கவில்லை. நாளைக்கு மாலை 6 மணிக்கு பெங்களூரு சிறைக்கு போக வேண்டும் என்று சொல்லிவிட்டார்கள்.
உடனே எம்.எல்.ஏ.க்களை கூட்டி ஒருவரை முதலமைச்சராக (எடப்பாடி பழனிசாமி) தேர்ந்தெடுத்தோம். நான் அவர் பெயரை சொல்லக்கூட விரும்பவில்லை. அவர் உடனே என்ன சொன்னார்? நீங்களே எல்லா எம்.எல்.ஏ.க்களிடமும் கையெழுத்து வாங்கி கொடுங்க என்றார். அதையும் செய்தேன். பிறகு பெங்களூரு சென்றேன்.
சில மாதங்கள் சென்றது. நீங்கள் ஏன் பெங்களூருவில் இருக்க வேண்டும் என்று செங்கோட்டையன் உள்ளிட்டவர்கள் கேட்டனர். தமிழகத்துக்கு மாற்றிடலாம் என்றனர். அதை மறுத்து நான் பேசியது ஏதோ தெய்வாதீனமாக எனக்கு தோன்றியது போல இருக்கிறது. இல்லை என்றால் நான் இன்றைக்கு பேசிக்கொண்டு இருப்பேனா என்பதே கஷ்டம். அதுக்கு அப்புறம் திடீரென்று ஒரு பொதுக்குழு, என்னை நீக்கினார்கள். நான் ஒருவரை முதலமைச்சராக உட்கார வைத்து விட்டு சென்றேன். ஆனால் என்னை ஒரு பேப்பரை தூக்கி போடுவது போல் வீசினால் எப்படி இருக்கும்?
தினமும் எனக்கு பிரச்சனை. இதற்கிடையே எனது கணவருக்கு உடல்நிலை சரியில்லாமல் போனது. அப்போது பரோலில் 15 நாட்கள் விடுப்பு கேட்டேன். 5 நாட்கள் மட்டும் கொடுங்கள் என இங்கே முதலமைச்சர் கூறினார். போயஸ் கார்டன் வீட்டில் தங்கக்கூடாது என்பன உள்படபல்வேறு நிபந்தனைகளை எனக்கு விதித்தனர். எனது கணவர் மறைந்த தகவல் வந்தது. அதற்கும் கேட்ட பரோல் கிடைக்கவில்லை.
ஆட்சியில் உட்கார வைத்த என்னை, ஈட்டி வைத்து குத்தியது போல செய்தனர். இதை எல்லாம் மீறி, நான் விடுதலை ஆகி சென்னைக்கு வந்தேன். காரில் கட்சி கொடி கட்டக்கூடாது. ஜெயலலிதா சமாதிக்கு போகக்கூடாது என கட்டுப்பாடுகள் விதித்தனர். தமிழக எல்லைக்கு வந்தவுடன் என்னை கைது செய்ய காத்திருந்தனர்.
இன்று கட்சி சரிந்து போய்விட்டது. எப்படியாவது ஒன்றாக இருக்க வேண்டும் என நினைத்தேன். நான் நினைத்து இருந்தால் அப்பவே எதையும் செய்திருக்க முடியும்.
தமிழ்நாட்டு மக்கள் மீது எனக்கு ரொம்ப நம்பிக்கை உள்ளது. நம்மை கைவிடமாட்டார்கள். அதனால்தான் இந்த மண்ணில் இந்த முடிவை எடுப்பதற்காக வந்தேன். என் மனதில் உள்ளதை எல்லாம் உங்களிடம் சொல்லி விட்டேன். இனி ஒரு தீர்க்கமான முடிவை எடுத்துள்ளேன். புதிய களத்தை காணப்போகிறோம் என்றார்.

# வெரைட்டி வெரைட்டியா வடை சுட்டுக்கொண்டிருக்கிறார் இ.பி.எஸ்.
## மு.க.ஸ்டாலின் தாக்கு

நாகர்கோவில், பிப்.26:
நாகர்கோவில் கன்கார்டியா பள்ளி மைதானத்தில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனம் வழங்கினார். ரூ.1,789 கோடி மதிப்பிலான திட்டப்பணிகளை தொடங்கி வைத்தார். கன்னியாகுமரியில் ரூ.30 கோடி மதிப்பீட்டில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கு அவர் அடிக்கல் நாட்டினார்.



விழாவில் பங்கேற்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியதாவது:
* எப்போது தான் வன்முறையை விட்டு வளர்ச்சியை பற்றி பா.ஜ.க.வினர் பேசுவார்கள்?
* நாம் என்ன சாப்பிட வேண்டும் என்பதை முடிவெடுக்க இவர்கள் யார்?
* தமிழ்நாட்டை குறை சொல்லி பேச பா.ஜ.க.வினருக்கு தகுதி இருக்கிறதா?
* தமிழ்நாட்டு மீனவர்கள் நலனுக்காக மத்திய அரசு எடுத்த நடவடிக்கை என்ன?
* தமிழ்நாடு சென்னையில் இருந்து ஆளப்பட வேண்டும், டெல்லியில் இருந்து அல்ல.
* வாய்க்கு வந்தபடி எல்லாம் வடை சுட்டுக்கொண்டிருக்கிறார் எடப்பாடி பழனிசாமி
* நாட்டு மக்கள் அனைவருக்கும் ஒருவர் ரூ.15 லட்சம் தர்றேனு வடை சுட்டமாதிரி, இப்போ வெரைட்டி வெரைட்டியா இ.பி.எஸ். வடை சுட்டுட்டு இருக்கிறார். ஆனால் இந்த வடைகளை நம்ப மக்கள் தயாராக இல்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

## திமுக கூட்டணியில் தொகுதிப் பங்கீடு இழுபறி
# தொகுதிகளை குறைக்க கம்யூனிஸ்ட்கள் சம்மதிப்பார்களா?

சென்னை, பிப்.26:
திமுக கூட்டணியில் தொகுதிப் பங்கீடு விவகாரம் பெரும் விவாதப் பொருளாக மாறியுள்ளது. திமுக-வின் நீண்டகால தோழமை கட்சிகளான இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் மார்க்சிஸ்ட் கட்சிகள் 2021 சட்டப்பேரவை தேர்தலின் போது திமுக கூட்டணியில் தலா 6 இடங்களில் போட்டியிட்டு, தலா 2 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றன.



அதேசமயம் 2024 மக்களவைத் தேர்தலில் இரண்டு கட்சிகளுமே தாங்கள் போட்டியிட்ட தலா 2 இடங்களிலும் வெற்றி வாகை சூடின.
இதை முன்னிறுத்தி, 2026 சட்டப்பேரவை தேர்தலில் தலா 10 தொகுதிகளை கேட்டுப் பெற வேண்டும் என்ற நிலைப்பாட்டில் கம்யூனிஸ்ட் கட்சிகள் இருந்தன.
இந்த நிலையில், திமுக கூட்டணியில் தற்போது தேமுதிக உள்ளிட்ட கட்சிகள் இணைந்துள்ளன. இது தொகுதிப் பங்கீட்டில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.
புதிய கட்சிகளின் வருகையாலும், கடந்த முறை கம்யூனிஸ்ட் கட்சிகளின் வெற்றி சதவீதம் குறைவாக இருந்ததைச் சுட்டிக்காட்டியும், இந்த முறை இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் தலா 5 தொகுதிகள் மட்டுமே ஒதுக்க முடியும் என திமுக தலைமை நடத்திய மறைமுக பேச்சுவார்த்தையின் போது தெரிவித்ததாக கூறப்படுகிறது.
"கூட்டணியில் கூடுதல் கட்சிகள் இணைந்துள்ளதால் இடங்களை பகிர்ந்து கொள்வதில் சிக்கல் உள்ளது.
எனவே 5 தொகுதிகளுக்கு உடன்படுங்கள்" என திமுக தரப்பில் வைக்கப்பட்ட கோரிக்கை, கம்யூனிஸ்ட் நிர்வாகிகளிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில், திமுக-வுடன் அதிகாரபூர்வமாக பேச்சுவார்த்தை நடத்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தனது உயர்நிலைக் குழுவை நேற்று அறிவித்தது.
கட்சியின் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் தலைமையில், முன்னாள் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், கே.சுப்பராயன் எம்.பி மற்றும் கோ.பழனிசாமி ஆகியோர் அடங்கிய இக்குழு, வரும் பிப்ரவரி 27-ம் தேதி திமுக-வுடன் முதற்கட்டப் பேச்சுவார்த்தையில் ஈடுபட உள்ளது.
இதனைத் தொடர்ந்து, பிப்ரவரி 28-ம் தேதி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் திமுக-வுடன் பேச்சு வார்த்தை நடத்த தவுள்ளது.
கூடுதல் தொகுதிகளை எதிர்பார்த்திருக்கும் கம்யூனிஸ்ட்கள், தாங்கள் ஏற்கெனவே போட்டியிட்ட தொகுதிகளை விட குறைவாக திமுக கொடுக்க முன்வந்தால் அதை ஏற்றுக் கொள்வார்களா என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

# ஓ.பி.எஸ். நடத்திய தர்மயுத்தம் குறித்து பேசிய சசிகலா



ராமநாதபுரம், பிப்.26:
ராமநாதபுரம் மாவட்டம் கமுதி கோட்டைமேடு பகுதியில் நடைபெற்ற ஜெயலலிதா பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்தில் தான் முதலமைச்சர் ஆக முன்வந்தது குறித்து சசிகலா பேசினார்.
சசிகலா பேசியதாவது:-
ஜெயலலிதாவின் பிறந்த நாளில் நிறைய விஷயங்களை சொல்ல வேண்டும் என்பதற்காகதான் இந்த கூட்டம்.
ஜெயலலிதா மரணத்துக்கு பின்பு ஓ.பன்னீர்செல்வம் முதலமைச்சர் ஆனார். அவர் மீது குறைகூற ஒன்றும் இல்லை. அவர் ஒழுங்காகத்தான் செயல்பட்டார். சில நாட்களில் ஒரு கும்பல் போயஸ் கார்டன் வீட்டுக்கு வந்து என்னிடம், அவர் சரியில்லை என்றார்கள். அதற்கு நான், நன்றாகதானே செயல்படுகிறார் என்று கூறினேன்.
நீங்கள் இப்போதே பொதுச்செயலாளராக வேண்டும் எனவும், முதலமைச்சர் ஆக வேண்டும் எனவும் என்னிடம் கூறினார்கள். காலையிலும், மாலையிலும் நடந்தார்கள். பொதுக்குழுவை கூட்டி, என்னை பொதுச்செயலாளராக நியமனம் செய்து, அலுவலகத்துக்கு அழைத்துக்கொண்டு சென்றார்கள்.
ஒரு நாள் ஓ.பன்னீர்செல்வத்தையும், அமைச்சர்கள் அனைவரையும் அழைத்து போயஸ் கார்டன் வீட்டில் வைத்து அனைவரிடமும் கேட்டேன். ஏதோ ஒரு போலீஸ் அதிகாரியை மாற்ற வேண்டும் என அமைச்சர் சொல்லி இருந்தார்.
அவர் நல்ல அதிகாரி இல்லை என்றும், ஜெயலலிதா இருக்கும்போது ஒதுக்கி வைக்கப்பட்டவர் என ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.
உடனே நான், ஜெயலலிதா சரியில்லை என ஒதுக்கியவரை எப்படி நியமிக்க முடியும்? இது எல்லாம் முதலமைச்சர் மீது ஒரு குறையா? என்று சொன்னேன். இதை இப்படியேவிட்டால் பிரச்சனை பெரிதாக ஆகும் என எண்ணி நான் முதலமைச்சர் ஆக முடிவுக்கு வந்தேன். அதற்குள் ஓ.பன்னீர்செல்வத்துக்கு என்ன நடந்து என தெரியவில்லை. திடீரென ஜெயலலிதா சமாதியில் தர்ம யுத்தம் என அமர்ந்துவிட்டார். அதை யாரோ சொல்லி இருக்கிறார்கள் என்றார்.

## மாநிலங்களவை எம்.பி. பதவி வேண்டாம் 8 தொகுதிகளை கேட்கும் ஜி.கே.வாசன்

சென்னை, பிப்.26:



மாநிலங்களவை எம்.பி. பதவி வேண்டாம். சட்டப்பேரவை தேர்தலில் 8 தொகுதிகள் கட்டாயம் கொடுக்க வேண்டும் என்று அதிமுகவிடம் தமாகா உறுதியாக கேட்டுள்ளது.
தமிழகத்தின் மாநிலங்களவை எம்.பி.க்களான கனிமொழி என்.வி.என்.சோமு (திமுக), திருச்சி சிவா (திமுக), என்.ஆர்.இளங்கோ (திமுக), அந்தியூர் செல்வராஜ் (திமுக), தம்பிதுரை (அதிமுக), ஜி.கே.வாசன் (தமாகா) ஆகிய 6 பேரின் பதவிக்காலம் ஏப்ரல் 2-ம் தேதி நிறைவடைகிறது. புதிதாக 6 எம்.பி.க்களை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் மார்ச் 16-ம் தேதி நடைபெறவுள்ளது. தமிழக சட்டப்பேரவைக்கு ஏப்ரல் மாதம் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், 6 மாநிலங்களவை எம்.பி.க்களுக்கான தேர்தல் முன்னதாகவே நடைபெறவுள்ளது. இந்த 6 எம்.பி.க்களில் 4 பேரை திமுகவும், 2 பேரை அதிமுகவும் தேர்ந்தெடுக்கவுள்ளது.
அதிமுக சார்பில் கடந்த முறை தமாகா தலைவர் ஜி.கே.வாசன் மாநிலங்களவை எம்.பி.யாக தேர்வு செய்யப்பட்டார். இந்த முறை அதிமுக கூட்டணியில் உள்ள ஜி.கே.வாசன் மாநிலங்களவை எம்.பி. பதவி வேண்டாம் என்று தெரிவித்துள்ளார். அதற்கு பதிலாக சட்டப்பேரவை தேர்தலில் கூடுதல் இடங்களை கேட்டுள்ளார்.
இதுதொடர்பாக தமாகா மூத்த தலைவர்களிடம் கேட்ட போது, "தமிழகத்தில் கடந்த 2021-ம் ஆண்டு நடைபெற்ற சட்டப்பேரவை தேர்தலை அதிமுக, பாஜக உள்ளிட்ட கூட்டணி கட்சிகளுடன் இணைந்து தமாகா சந்தித்தது. அந்த தேர்தலில் தமாகா 6 இடங்களில் போட்டியிட்டது. அடுத்து 2024-ல் நடைபெற்ற மக்களவை தேர்தலில் 3 இடங்களில் தமாகா நின்றது.
தமிழகத்தில் வரவுள்ள சட்டப்பேரவை தேர்தலில் தமாகாவுக்கு 12 தொகுதிகளை கேட்டு, 15 தொகுதிகள் அடங்கிய பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது. அதில் குறைந்தது 8 இடங்களில் கட்டாயம் கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். அதனால் தான் மாநிலங்களவை எம்.பி. பதவி வேண்டாம் என்று தெரிவித்திருக்கிறோம்" என்றனர்.

# "தனித்து விடப்பட்டவர்கள் எங்களுக்கு ஆதரவளிக்க வேண்டும்" - டிடிவி வலியுறுத்தல்

மதுரை, பிப்.26:
தனித்து விடப்பட்டவர்கள் உணர்ந்து எங்களுக்கு ஆதரவளிக்கவேண்டும் என, மதுரையில் டிடிவி. தினகரன் கூறினார்.
மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பிறந்தநாளையொட்டி மதுரை கேகே. நகரிலுள்ள அவரது சிலைக்கு அமமுக பொதுச்செயலாளர் டிடிவி.தினகரன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.



மதுரை கேகே.நகரிலுள்ள சிலைக்கு மாலை அணிவிக்க திறந்த வேனில் டிடிவி.தினகரன் வந்த காட்சி.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைக்கவேண்டும் என்பதற்காக முழு மனதுடன் தமிழகம், புதுச்சேரியிலும் ஒன்றிணைந்துள்ளோம். தமிழகத்தில் அதிமுக தலைமையில் இணைந்து இருக்கிறோம். கடந்த 10 ஆண்டாக கொள்கை கூட்டணி என்ற திமுக -காங்கிரசில் கூட்டணியில் உடன்பாடு ஏற்படவில்லை.
அது தொடருமா என்பதே தெரியாத நிலை உள்ளது. இதை திசை திருப்பவே தேசிய ஜனநாயக கூட்டணி வலுவில்லை. அங்கு குழப்பம் உள்ளது என, பொய் பிரச்சாரம் செய்யப்படுகிறது. காங்கிரஸ் கட்சி 35 முதல் 40 தொகுதிகள் கேட்கின்றனர். கூட்டணி மந்திரி சபை அமைக்கவேண்டும் என, கேட்கின்றனர் என்பது தான் உண்மை. திமுக ஒத்துக்கொள்ளவில்லை. அக்கூட்டணி தொடருமா என்பதே தெரியவில்லை.
நான் தேர்தலில் போட்டியிடவில்லை என, அறிவித்துள்ளேன். தேவையற்ற குழப்பத்தை தவிர்க்கவே போட்டியிடவில்லை. எவ்வித மன வருத்தமும் இல்லாமல் அம்மாவின் ஆட்சி அமைய வேண்டும். பாஜக வழிகாட்டுதலில் செயல்பட்டு, அதிமுகவில் இடங்களை பெறுவோம். அம்மாவின் ஆட்சி உறுதியாக அமையும்.
தமிழகத்தில் ஊழல், மக்களுக்கு பாதுகாப்பு இல்லாத திமுக ஆட்சியை முடிவுக்கு கொண்டு வரவே ஓரணியில் இணைந்துள்ளோம். தமிழக மக்கள் நாங்கள் வலுவான கூட்டணி என்பதை உணர்ந்துள்ளனர். ஓபிஎஸ் தனிப்பட்ட முறையில் எல்லா உரிமையும் உள்ளது. அவர் எந்த கூட்டணியில் வேண்டுமானாலும் போட்டியிடலாம். அது அவரது விருப்பம்.
ஆனால் சட்டமன்றத்தில் அவர்கள் எம்ஜிஆர், ஜெயலலிதாவின் ஆசியோடு திமுக மீண்டும் ஆட்சிக்கு வரும் என்று சொன்னதை அம்மாவின் தொண்டர்கள் ஏற்கமாட்டார்கள். அதிமுகவை உருவாக்கியதே திமுகவுக்கு எதிராகத்தான்.
50 ஆண்டுக்கு மேலாக திமுக எதிர்ப்பிலுள்ள எங்களது தலைவர்கள், தொண்டர்களை அவமானப்படுத்துவது போன்று பேசியதை கண்டிக்கிறோம். 99.1 சதவீதம் அனைவரும் ஓரணியில் இருக்கிறோம். ஒருசிலர் தனித்து விடப்பட்டவர்கள் உணர்ந்து அவர்களும் எங்களுக்கு ஆதரவளிக்கவேண்டும்.
இவ்வாறு அவர் கூறினார்.

# "திமுக கூட்டணிக்கு பாமக வர வாய்ப்பு இல்லை" - வேல்முருகன் தகவல்

சென்னை, பிப்.26:
திமுகவுடன் கூட்டணிக்கு ராமதாஸ் தலைமையிலான பாமக வருவதற்கு வாய்ப்புகள் இல்லை. இந்த முறை கூடுதல் இடங்களில் போட்டியிட திமுகவிடம் கேட்க இருப்பதாக தமிழக வாழ்வுரிமை கட்சி தலைவர் வேல்முருகன் தெரிவித்தார்.
திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: கட்சியின் கட்டமைப்புப் பணிகளுக்காக தென் மாவட்டங்களில் ஒரு வார கால சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறேன். திமுக தலைமையிலான கூட்டணிப் பேச்சுவார்த்தை தற்போது நடந்து வருகிறது. எனது திட்டமிட்ட பயணங்கள் முடிவடைந்த பிறகு, கூட்டணி மற்றும் தொகுதிப் பங்கீடு குறித்து விரிவாகப் பேச்சுவார்த்தை நடத்துவோம்.



மக்கள் மிகவும் கவனமாக வாக்களிக்க வேண்டும். பாஜக 10 ஆண்டுகளில் கணிசமான வளர்ச்சியை பெற்றுள்ளது. பாஜகவை தமிழகத்தில் காலூன்ற விடக்கூடாது என்ற அடிப்படையில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறேன். திமுக கூட்டணியோடு ராமதாஸ் தலைமையிலான பாமக வருவதற்கு வாய்ப்புகள் இதுவரை தென்படவில்லை. இந்த முறை திமுக கூட்டணியில் உரிய அங்கீகாரமும் மரியாதையும் அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.
கடந்த தேர்தலை விட இந்த தேர்தலில் கூடுதல் இடங்களை திமுக கூட்டணியில் கேட்க இருக்கிறோம். அனைத்து இடங்களிலும் தீவிரமாக உறுப்பினர் சேர்க்கை நடத்தப்பட்டு எங்கள் கட்சியின் கட்டமைப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.
இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# "வெல்வதே இலக்கு"



## சீமான் நம்பிக்கை

திருச்சி, பிப்.26:
திருச்சியில் கடந்த 21-ம் தேதி நடந்த நாம் தமிழர் கட்சியின் மாநாட்டில் 234 தொகுதிகளுக்கும் கட்சியின் சார்பில் சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை சீமான் அறிமுகம் செய்தார்.
இந்நிலையில், கட்சித் தொண்டர்களுக்காக அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:
திருச்சியில் நடைபெற்ற நாம் தமிழர் கட்சியின் மாநாடு பேரெழுச்சியாக நடைபெற்று முடிந்தது. இம்மாநாட்டுக்காக அனைத்து மாவட்டங்களில் இருந்தும் நாங்கள் வைக்கிற அரசியலை புரிந்துகொண்டு பங்கேற்ற ஒவ்வொருவருக்கும் எனது அன்பும், மகிழ்ச்சியும்.
இது தமிழரின் வரலாற்றில் நடந்த பெரும் மாறுதலாகும். ஒரு மாபெரும் புரட்சியாகும். இந்த மாநாடு பெரிய நம்பிக்கையையும், உற்சாகத்தையும் தந்திருக்கிறது. இது ஒரு தொடக்கம் தான். நம் பணி தொடரட்டும். களத்தில் வென்று முடிப்பது தான் நம் இலக்கு. அதற்காக தீவிரமான ஈடுபாட்டோடு, அரும்பாடுபட்டு நம் வெற்றியை தொடுவோம். எல்லா வேதனைக்கும் ஒரே ஒரு மருந்து சாதனை தான். கடுமையான உழைப்பை கொடுத்து நம் வெற்றியை அடைவோம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# நான் இன்னும் எவ்வளவு காலம் உயிருடன் இருப்பேன் எனத் தெரியவில்லை: டிரம்ப்

**அமெரிக்கா, பிப்.26:**

ஒருவேளை நான் கொஞ்சம் குறைவான செல்வாக்குள்ள தலைவராக இருந்திருக்கலாமோ என்னவோ?

எப்ஸ்டீன் கோப்புகள் தொடர்பாக அரசாங்கத்தின் மீது கடும் கோபத்தில் இருந்தான்.

அமெரிக்காவின் புளோரிடாவில் அதிபர் டிரம்ப் உடைய இல்லத்திற்குள் கடந்த பிப்ரவரி 22 அதிகாலை 1:30 மணியளவில் இளைஞர் ஒருவன் ஷாட்கன் துப்பாக்கி மற்றும் பெட்ரோல் கேனுடன் நுழைய முயன்றான்.

எச்சரிக்கை விடுத்தும், அவன் துப்பாக்கியைக் காட்டி மிரட்டியதால், சீக்ரெட் சர்வீஸ் ஏஜெண்டுகள் அவனைச் சுட்டுக்கொன்றனர்.

இந்த சம்பவத்தின் போது டிரம்ப் மற்றும் அவரது மனைவி வெள்ளை மாளிகையில் இருந்தனர்.

அந்த இளைஞன் 21 வயதான ஆஸ்டின் டக்கர் மார்ட்டின் என்று அடையாளம் காணப்பட்டான்.

இந்தச் சம்பவம் குறித்து வெள்ளை மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய டிரம்ப்,

"நான் இன்னும் எவ்வளவு காலம் உயிருடன் இருப்பேன் எனத்தெரியவில்லை. எனக்காகத் துப்பாக்கியுடன் எத்தனை பேர் காத்திருக்கிறார்கள் என்று பார்த்தீர்களா?" என்று நகைச்சுவையாக வினவினார்.



மேலும், "ஆபிரகாம் லிங்கன், கென்னடி போன்ற மிகப்பெரிய செல்வாக்குள்ள தலைவர்களையே இதுபோல இலக்கு வைப்பார்கள்.

ஒருவேளை நான் கொஞ்சம் குறைவான செல்வாக்குள்ள தலைவராக இருந்திருக்கலாமோ என்னவோ? கொஞ்ச காலம் ஒரு சாதாரண அதிபராக இருக்க முயற்சிப்போம்" என்றும் அவர் கிண்டலாகப் பேசினார்.

கொல்லப்பட்ட இளைஞன் மார்ட்டின், சமீபத்தில் வெளியான எப்ஸ்டீன் கோப்புகள் தொடர்பாக அரசாங்கத்தின் மீது கடும் கோபத்தில் இருந்தது அவனது குறுஞ்செய்திகள் மூலம் தெரியவந்துள்ளது.

டிரம்ப் மீது ஏற்கனவே இரண்டு முறை கொலை முயற்சிகள் நடந்துள்ள நிலையில், இந்த மூன்றாவது முயற்சி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## நான்காம் ஆண்டு நிறைவு: மனித வெடிகுண்டு தாக்குதலில் போலீஸ் அதிகாரி பலி



**மாஸ்கோ, பிப்.26:**

உக்ரைனுக்கு எதிராக ரஷிய ராணுவம் போர் தொடுத்து 4 ஆண்டு நிறைவடைந்துள்ளது.

நான்காவது ஆண்டு நிறைவை குறிக்கும் நாளில், ரஷியாவில் ரோந்து வாகனத்திற்கு அருகே வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்நிலையில், ரஷியாவின் மாஸ்கோவில் சவ்யோலேவ்ஸ்கி ரயில் நிலையம் அருகே நள்ளிரவு போலீசார் ரோந்து மற்றும் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு இருந்தனர்.

அப்போது அடையாளம் தெரியாத நபர் போக்குவரத்து போலீசார் வாகனம் அருகே சென்று வெடிகுண்டை வெடிக்கச் செய்தார். இந்தச் சம்பவத்தில் போலீஸ் அதிகாரி ஒருவர் உயிரிழந்தார். மேலும் 2 பேர் காயமடைந்தனர். தாக்குதல் நடத்திய நபரும் இதில் உயிரிழந்தார்.

இந்த மனித வெடிகுண்டு தாக்குதல் சம்பவம் குறித்து தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது.

## பனிப்புயலால் 153 ஆண்டுகால நாளிதழ் வெளியீடு முதல் முறையாக நிறுத்தம்



**வாஷிங்டன், பிப்.26:**

அமெரிக்காவின் வடகிழக்கு பகுதியில் கடந்த சில நாட்களாக பனிப்புயல் வீசி வருகிறது. பனிப்புயல் தாக்கத்தால் பட இடங்களில் பனி 3 அடி உயரம் வரை குவிந்தது. நியூஜெர்சி மாகாணத்தில் அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. கடும் பனிப்பொழிவால் அவசர போக்குவரத்து தவிர அனைத்து போக்குவரத்துக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மரங்கள் விழுந்து மின்கம்பங்கள் சேதமடைந்துள்ளதால் வடகிழக்கு அமெரிக்காவில் 5 லட்சத்திற்கும் மேற்பட்ட வீடுகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

பாஸ்டன், கனெக்டிகட், மேரிலேண்ட், விர்ஜினியா உள்ளிட்ட மாகாணங்களிலும் பனிப்புயல் வீசக்கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இந்நிலையில், வரலாறு காணாத பனிப்புயலால் 153 ஆண்டுகால வரலாற்றில் முதல் முறையாக தி பாஸ்டன் குளோப் பத்திரிகை, தனது தினசரி செய்தித்தாளை அச்சிடுவதை நிறுத்தியுள்ளது. பாஸ்டன் குளோப் நாளிதழின் 153 ஆண்டு கால வரலாற்றில் முதல் முறையாக நாளிதழ் வெளியீடு நிறுத்துப்பட்டுள்ளது.

பாஸ்டன் குளோப் அச்சகம் அமைந்துள்ள மசாசூசெட்ஸ் மாகாணத்தின் பிரிஸ்டாலில் 2 அடி உயரத்துக்கு பனி குவிந்துள்ளது. பனிப்புயலால் ஊழியர்கள் பணிக்கு வருவதில் சிரமம் ஏற்பட்டது என்பதாலேயே நாளிதழ் வெளியாவது நிறுத்தப்பட்டுள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்காவில் இருந்து வெளிவரும் பிரபல நாளிதழான தி பாஸ்டன் குளோப், 1872-ம் ஆண்டு நிறுவப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஈரானில் நொறுங்கிய ராணுவ ஹெலிகாப்டர்: 4 பேர் உயிரிழப்பு

**ஈரான், பிப்.25:**

மத்திய ஈரானில் உள்ள ஒரு பழம் மற்றும் காய்கறி சந்தையில் ஈரானிய இராணுவ ஹெலிகாப்டர் மோதியதில் குறைந்தது நான்கு பேர் உயிரிழந்ததாக கூறப்படுகிறது.

ஈரான் தலைநகர் தெஹ்ரானுக்கு தெற்கே சுமார் 330 கிலோமீட்டர் தொலைவில் உள்ள டோர்ச்சே நகரில், நாட்டின் இஸ்பஹான் மாகாணத்தில் இந்த விபத்து நடந்ததாக ஈரானிய அரசு தொலைக்காட்சி தெரிவித்துள்ளது. ஜூன் மாதம் ஈரான்-இஸ்ரேல் போரின் போது அமெரிக்காவால் தாக்கப்பட்ட அணுசக்தி தளம் இஸ்பஹானில் உள்ளது.




ராணுவ ஹெலிகாப்டர் பயிற்சியில் ஈடுபட்டு இருந்ததாக அரசு தொலைக்காட்சி தெரிவித்துள்ளது. விமானி மற்றும் துணை விமானி விபத்தில் இறந்தனர். விபத்து காரணமாக சந்தையில் இருந்த குப்பைகள் மற்றும் புகை எழும் காட்சிகளைக் காட்டும் வீடியோக்கள் வெளியாகி உள்ளன. ஈரானின் ஃபார்ஸ் செய்தி நிறுவனம், விபத்தில் சந்தையில் இருந்த இரண்டு பேர் விபத்தில் இறந்ததாக கூறியது. ஈரானில் ஒரு வாரத்திற்குள் இது இரண்டாவது விபத்து ஆகும். ஈரானின் மேற்கு நகரமான ஹமேடான் அருகே ஒரு F-4 போர் விமானம் விபத்துக்குள்ளானது, அந்த விபத்தின் போது விமானிகளில் ஒருவர் கொல்லப்பட்டார்.

## பனிப்புயலில் சிக்கித்தவிக்கும் அமெரிக்கா... 11,000 விமானங்கள் ரத்து..!

**நியூஜெர்சி , பிப்.26:**

மாகாணத்தில் அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. 13,000-க்கும் மேற்பட்ட விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் வடகிழக்கு பகுதியில் நேற்று முன்தினம் மாலையில் இருந்து பனிப்புயல் வீசத்தொடங்கியது. இதன் காரணமாக அங்கு ஒன்பது ஆண்டுகளுக்கு பிறகு "ப்ளிசர்டு" எச்சரிக்கை விடுக்கப்பட்டது. பனிப்புயல் தாக்கத்தால், பட இடங்களில் பனி 3 அடி உயரம் வரை குவிந்தது. நியூஜெர்சி மாகாணத்தில் அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.



கடும் பனிப்பொழிவு காரணமாக அவசர போக்குவரத்து தவிர அனைத்து போக்குவரத்துக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. கடும் பனிப்பொழிவுடன் தீவிர புயல் வீசுவதால் யாரும் வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நியூ யார்க்கின் முக்கிய விமான நிலையங்களில் 11,000-க்கும் மேற்பட்ட விமானங்களின் சேவை ரத்து செய்யப்பட்டன. அமெரிக்கா முழுவதும் 13,000-க்கும் மேற்பட்ட விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

நியூயார்க் நகர பள்ளிகள் முழுவதும் மூடப்பட்டன. மரங்கள் விழுந்து மின்கம்பங்கள் சேதமடைந்துள்ளதால், வடகிழக்கு அமெரிக்காவில் 5 லட்சத்திற்கும் மேற்பட்ட வடுகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. பாஸ்டன், கனெக்டிகட், மேரிலேண்ட், விர்ஜினியா உள்ளிட்ட மாகாணங்களிலும் பனிப்புயல் வீசக்கூடும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## அணு ஆயுதக் குறைப்பு விவகாரத்தில் ஈரான் - அமெரிக்கா இடையே மீண்டும் பேச்சுவார்த்தை!



**ஈரான், பிப்.26:**

மத்திய ஈரானில் உள்ள ஒரு பழம் மற்றும் காய்கறி சந்தையில் ஈரானிய இராணுவ ஹெலிகாப்டர் மோதியதில் குறைந்தது நான்கு பேர் உயிரிழந்ததாக கூறப்படுகிறது.

ஈரான் தலைநகர் தெஹ்ரானுக்கு தெற்கே சுமார் 330 கிலோமீட்டர் தொலைவில் உள்ள டோர்ச்சே நகரில், நாட்டின் இஸ்பஹான் மாகாணத்தில் இந்த விபத்து நடந்ததாக ஈரானிய அரசு தொலைக்காட்சி தெரிவித்துள்ளது. ஜூன் மாதம் ஈரான்-இஸ்ரேல் போரின் போது அமெரிக்காவால் தாக்கப்பட்ட அணுசக்தி தளம் இஸ்பஹானில் உள்ளது.

ராணுவ ஹெலிகாப்டர் பயிற்சியில் ஈடுபட்டு இருந்ததாக டொனால்டு டிரம்பின் மிரட்டலை சந்திக்க தயார் என்று ஈரான் தெரிவித்துள்ளது.

இருநாட்டு அதிகாரிகளும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அணுசக்தி திட்டம் தொடர்பாக அமெரிக்கா உடன் ஈரான் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். இல்லையென்றால் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று டொனால்டு டிரம்ப் மிரட்டல் விடுத்து வருகிறார்.

டொனால்டு டிரம்பின் மிரட்டலை சந்திக்க தயார் என்று ஈரான் தெரிவித்தபோதிலும், பேச்சுவார்த்தைக்கும் தயார் என்று தெரிவித்தது.

இதனைத்தொடர்ந்து இருநாட்டு அதிகாரிகளும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றனர். அண்மையில் ஜெனீவாவில் 2-ம் கட்ட பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இந்நிலையில், அணு ஆயுதக் குறைப்பு விவகாரத்தில் ஈரான் - அமெரிக்கா இடையே ஜெனீவாவில் பிப்.26ம் தேதி 3ம் கட்ட பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது.

பேச்சுவார்த்தைகளுக்கு இடையே ஈரான் மீது எந்நேரமும் அமெரிக்கா தாக்குதல் நடத்த தயாராக இருப்பதால் பதற்றம் அதிகரித்துள்ளது.

## வங்கதேசத்தில் 25 வயது மாற்றுத்திறனாளி இந்து பெண் கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட கொடூரம்

**சாந்த்பூர், பிப்.26:**


ரகீப், சோஹைல் மற்றும் ரசல் ஆகிய மூன்று இளைஞர்கள் இந்த செயலில் ஈடுபட்டது தெரியவந்துள்ளது.

ஆட்சி மாறினாலும் வங்கதேசத்தில் சிறுபான்மையினரான இந்துக்கள் மீதான வன்முறை தொடர்ந்து வருகிறது.

சாந்த்பூர் மாவட்டத்தில் 25 வயது நிரம்பிய மாற்றுத்திறனாளி இந்துப் பெண் ஒருவர் கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார். நேற்று இரவு 9 மணியளவில், வீட்டில் தனியாக இருந்த அந்தப் பெண்ணை மூன்று பேர் கொண்ட கும்பல் பலவந்தமாகக் கடத்திச் சென்றது.

ஆள் நடமாட்டமற்ற பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்ட அந்தப் பெண், மூன்று பேரால் கொடூரமான முறையில் கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டார். மேலும் அவரை கடுமையாக தாக்கியும் அவர்கள் துன்புறுத்தி அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

சுயநினைவின்றி அப்பகுதியில் கிடந்த அவரை மீட்ட உள்ளூர் மக்கள் மருத்துவமனையில் அனுமதித்தனர்.



பாதிக்கப்பட்ட பெண் அளித்த புகாரின்படி, ரகீப், சோஹைல் மற்றும் ரசல் ஆகிய மூன்று இளைஞர்கள் இந்த செயலில் ஈடுபட்டது தெரியவந்துள்ளது.

இருப்பினும் அவர்களை போலீசார் இன்னும் கைது செய்யவில்லை என்று தெரிகிறது.

காவல்துறையின் இந்த மெத்தனப்போக்கைக் கண்டித்து உள்ளூர் மக்கள் மற்றும் மனித உரிமை அமைப்புகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வங்கதேசத்தில் அண்மையில் நடந்த பாராளுமன்ற தேர்தலில் வங்கதேச தேசியவாத கட்சி வெற்றி பெற்ற நிலையில் அக்கட்சியின் தலைவர் தாரிக் ரஹ்மான் கடந்த வாரம் அந்நாட்டின் பிரதமராக பொறுப்பேற்றது குறிப்பிடத்தக்கது.

## மெக்சிகோ போதைப்பொருள் கும்பல் தலைவன் கொல்லப்பட்டது எப்படி?

**மெக்சிகோ, பிப்.26:**

லத்தீன் அமெரிக்க நாடான மெக்சிகோவில் பல்வேறு போதைப்பொருள் கும்பல்கள் செயல்பட்டு வருகின்றன.

அவற்றுள் ஜாலிஸ்கோ நியூ ஜெனரேசன் என்ற முக்கியமான கும்பலின் தலைவனாக இருந்தவன் நெமேசியோ ஒசெகுவேரா செர்வாண்டஸ்.

கடத்தல் கும்பல்கள் இடையே எல் மென்சோ என்ற பெயரில் பரவலாக அறியப்படும் இவனை, மெக்சிகோ ராணுவம் ஜாலிஸ்கோ பகுதியில் போர்ட்டோ வல்லார்தா என்ற இடத்தில் வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை சுட்டுக் கொன்றனர்.

எல் மென்சோவுடன் சேர்த்து அவரது கூட்டாளிகள் 7 பேரும் கொல்லப்பட்டனர்.

இதனால் எல் மென்சோவின் கும்பலை சேர்ந்தவர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அந்நாட்டின் பல்வேறு பகுதிகளில் போராட்டம், சாலை மறியல் மற்றும் வன்முறையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் எல் மென்சோ எப்படி சிக்கினான் என்ற தகவல் வெளியாகி உள்ளது.

எல் மென்சோவைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு அமெரிக்க அரசு 15 மில்லியன் டாலர் சன்மானம் அறிவித்திருந்தது.

இதற்கிடையே அமெரிக்க உளவு அமைப்பான CIA வழங்கிய ரகசியத் தகவல்களின் அடிப்படையில், மெக்சிகோ ராணுவம் ஜலிஸ்கோ மாநிலத்தின் தபால்பா பகுதியில் மாபெரும் தேடுதல் வேட்டையை நடத்தியது.

எல் மென்சோவின் காதலியின் நடமாட்டத்தை ராணுவம் தீவிரமாகக் கண்காணித்து வந்தது. பிப்ரவரி 20 அன்று, அவரது தோழி ஒருவரைப் பின்தொடர்ந்ததன் மூலம் எல் மென்சோ கிராமப்புறம் ஒன்றில் பதுங்கியிருந்த ரகசிய இடம் கண்டறியப்பட்டது.



ஞாயிற்றுக்கிழமை அதிகாலை சிறப்புப் படையினர் அந்தப் பகுதியைச் சுற்றி வளைத்தனர். அப்போது எல் மென்சோவின் பாதுகாவலர்கள் ராணுவத்தின் மீது சரமாரியாகத் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் ராணுவ ஹெலிகாப்டர் ஒன்று சேதமடைந்து அவசரமாகத் தரைஇறக்கப்பட்டது.

துப்பாக்கிச் சண்டைக்கு நடுவே காயங்களுடன் காட்டுக்குள் தப்பியோடிய எல் மென்சோவை ராணுவம் துரத்திப் பிடித்தது. சிகிச்சைக்காக ஹெலிகாப்டர் மூலம் மெக்சிகோ சிட்டிக்குக் கொண்டு செல்லும் வழியில் எல் மென்சோவின் உயிர் பிரிந்தது.

ஆதரவாளர்கள் வன்முறையில் ஈடுபட்டுள்ள நிலையில் இதில் 25 பாதுகாப்புப் படையினர் உட்பட 70-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது. மெக்சிகோவில் நிலவும் இந்த உள்நாட்டுக் கலவரம் மற்றும் வன்முறை, அங்கு நடைபெறவுள்ள உலகக்கோப்பை கால்பந்து போட்டிகளுக்கும் பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.



# இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் நல்லகண்ணு காலமானார்



# பயங்கரவாதத்தால் இந்தியாவும் பாதிக்கப்பட்டுள்ளது!

# ரஷியா-உக்ரைன் போர்: ஐ.நா சபையில் தீர்மானம் நிறைவேற்றம்





# எனக்கு ரஜினிகாந்த் படங்கள் மிகவும் பிடிக்கும் கேரள முதல்வர்


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை | 26.02.2026 வியாழக்கிழமை | இலவச இ-பேப்பர்